## திறன் வரிசை (Skill sequence)

## ரம்ப அறுத்தல் (பிடித்தல் - பிட்ச் தேர்ந்தெடுத்தல்) (Hacksawing (holding-pitch selection))

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது

- **வெவ்வேறு உலோக பிரிவுகளுக்கு ஏற்ப ஹாக்ஸா பிளேடினை தேர்ந்தெடுத்தல்**
- **ரம்ப அறுத்தல் செய்ய பல்வேறு குறுக்கு வெட்டு தோற்றமுடைய செய்பொருளை பிடித்தல்.**

**பணிப்பொருளை பிடித்தல் (Holding the workpiece)**

ரம்ப அறுத்தல் செய்ய பணிப்பொருளை அதன் குறுக்கு வெட்டு தோற்றத்திற்கு ஏற்ப நிலை நிறுத்த வேண்டும்.

பணிப்பொருளை அறுக்க முடிந்தவரை விளிம்பு அல்லது முனையைவிட அதிகப் பரப்பில் மட்டமான பக்க நிலையில் பிடிக்கவும். இது பிளேடு உடைதலை குறைக்கிறது. (Figs 1,2&3) வெட்ட வேண்டிய பொருளின் வடிவம் மற்றும் கடினத் தன்மையினைப் பொருத்து பிளேடினைத் தேர்ந்தெடுக்கவும்.

Fig 1




Fig 2




Fig 3




©NIMI NOT TO BE REPUBLISHED

**பிட்ச் தேர்ந்தெடுத்தல் (Pitch selection)**

வெண்கலம், பித்தளை, மென்மையான எஃகு, இரும்பு தாது, கனரக இரும்பு கோணங்கள் போன்ற மென்மையான பொருளைக்கு அறுப்பதற்கு 1.8 மிமீ பிட்ச் பிளேடினைப் பயன்படுத்தவும். (Fig 4)

Fig 4




டூல் ஸ்டீல் அய் கார்பன், அய் ஸ்பீடு ஸ்டீல் போன்றவற்றை அறுக்க 1.4 மிமீ பிட்ச் பிளேடு பயன்படுத்தவும். அயன் ஆங்கில்ஸ் பித்தளை குழாய், செம்பு, இரும்பு குழாய் போன்றவற்றிற்கு 1 மிமீ பிட்ச் பிளேடினைப் பயன்படுத்தவும். (Fig 5)

Fig 5




காண்டீயூட் மற்றும் பிற மெல்லிய குழாய்கள் உலோக தகடு வேலை போன்றவற்றிற்கு 0.8 mm பிட்ச் மூலம் பயன்படுத்தவும். (Fig 6)

Fig 6




## இரம்ப அறுத்தல் (Hacksawing)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது
- **சரியான இழுவிசை மற்றும் திசை கடைபிடித்து பிளேடினைப் பொருத்தவும்**
- **பிளேடினைக் கொண்டு உலோக துண்டுகளை வெட்டுதல்.**

**பிளேடினைப் பொருத்துதல் (Fixing of hacksaw blades)**

பிளேடின் பற்கள் வெட்டுகின்ற திசை நோக்கியும் மற்றும் கைப்பிடியிலிருந்து விலகியும் இருக்க வேண்டும். (Fig 1)

Fig 1




அறுப்பதற்கு முன் பிளேடு நேராகவும் சரியான இழுவிசையிலும் உள்ளதா என பார்க்கவும்.

அறுத்தல் ஆரம்பித்தலின் போது சிறிய குழி வெட்டுவை உருவாக்கவும். (Fig 2)

முக்கோண வடிவ பைல் பயன்படுத்தி "V" குழி வெட்டு தேய்த்து எடுக்கவும்.

வெட்டு இயக்கம் சீராக இருக்க வேண்டும் மற்றும் பிளேடின் முழு நீளமும் அறுத்தலின் போது பயன்படுத்த வேண்டும்.

Fig 2




பிளேடின் முன்னோக்கு இயக்கத்தின் போது மட்டும் அழுத்தம் கொடுக்கவும். (Fig 3)

Fig 3




©NIMI NOT TO BE REPUBLISHED

குறைந்தது இரண்டு அல்லது அதற்கும் அதிகமான பற்கள் வெட்டுதலின் போது, பணிப்பொருளின் மேல் தொடர்பில் இருக்க வேண்டும். கனம் குறைவான பணிப்பொருட்களை அறுக்க பைன் வேலைக்கு பைன் பிட்ச் பிளேடை தேர்ந்தெடுக்கவும். (Fig 4 & 5)

Fig 4




ஹாக்ஸா செய்கையில் பைப்பினுடைய நிலையினை திருப்பியும் மற்றும் மாற்றி கொண்டும் இருக்க வேண்டும். (Fig 4 & 5)

பொதுவாக, கை கொண்டு பிளேடினால் அறுத்தலின்போது குளிரூட்டி தேவையிருக்காது. எனினும், மிகப் பெரிய பங்கு என்பது கனமான பொருள் அறுத்தலுக்கு குளிரூட்டி தேவையாகிறது.

**பிளேடினை மிக வேகமாக நகரச் செய்யக் கூடாது. வெட்டு முடித்தலின் போது, பிளேடுவின் உடைதல் மற்றும் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் காயம் ஏற்படாமல் தவிர்க்க மெதுவாக செய்யவும்.**

© NIMI
NOT TO BE REPUBLISHED

## சேனல் பக்கங்களை இணையாக பைலிங் செய்தல் (Filing channel, parallel)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **பைல் தேய்த்தலுக்கு கிடைமட்டமாக பென்ச் வைஸ் பணிப்பொருளை பொருத்துதல்**
- **பாஸ்டார்டு பைல் அரத்தைக் கொண்டு சமதள மேற்பரப்பைத் தேய்த்தல்**
- **நேரான விளிம்பு/மூலவிட்டத்தின் தகட்டினைக் கொண்டு தேய்த்த மேற்பரப்பின் சமதளத் தன்மையை சரி பார்த்தல்**
- **ஓர் அவுட்சைடு காலிப்பர் மற்றும் ஸ்டீல் அளவுகோல் கொண்டு இணைபக்கத் தன்மையை சரி பார்க்கவும்.**




## வேலையின் வரிசை (Job sequence)

- ஒரு ஸ்டீல் அளவுகோலைக் கொண்டு கொடுக்கப்பட்ட மூலப்பொருளில் அளவை சரி பார்க்கவும்.
- மேற்பரப்பு S1 மேலே உள்ளவாறு, பென்ச் வைஸில் பணிப்பொருளை பிடிக்கவும். (Fig 1)

> **போதுமான இறுக்குதல் விசை மட்டும் கொடுக்கவும். அதனால் சேனல் பக்க விளிம்புகள் வளையாது.**

- ஃபிளேட் பாஸ்டார்டு பைல் கொண்டு மேற்பரப்பு S1-யை தேய்க்கவும்.
- நேரான விளிம்பு/மூலவிட்டத்தின் தகடு கொண்டு மேற்பரப்பில் சமதளத்தை சரி பார்க்கவும்.

Fig 1




- ஜென்னி காலிப்பரை கொண்டு S1-க்கு இணையாக மேற்பரப்பு S2 மற்றும் S3 மேல் 35 mm கோடு குறிக்கவும்.
- குறிக்கப்பட்ட கோடுவரை தேய்க்கச் செய்து அகற்றவும் (Fig 2) மற்றும் அளவுகோல் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.

| 1 | BISLC 75 - 95 | - | Fe310 | 16 | 1 | 1.2.16 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | CHANNEL PARALLEL | TOLERANCE : | TIME : 5Hrs |
|---|---|---|---|
| | | CODE NO. FIN1216E1 | |

© NIMI NOT TO BE REPUBLISHED




- சர்பேஸ் லெவல் கொண்டு மேற்பரப்பு சமதளத்தை சரி பார்க்கவும்.
- ஓர் வெளிப்பக்க காலிப்பர் மற்றும் ஸ்டீல் அளவுகோல் கொண்டு இணைபக்க தன்மையை சரி பார்க்கவும்.

## திறன் வரிசை (Skill sequence)

### சமதள மேற்பரப்பு பைலிங் செய்தல் (Filing flat surface)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது
**• சமதளமாக தேய்த்தல்.**

பென்ச் வைஸ் உயரத்தை சரி பார்க்கவும். (Fig 1) உயரம் அதிகமாக இருக்கிறதெனில், மேடையை பயன்படுத்தவும் மற்றும் குறைவு எனில், மற்றொரு வேலை செய் மேஜையை தேர்ந்தெடுத்து பயன்படுத்தவும்.




பென்ச் வைஸ் ல் பணிப்பொருளை பிடிக்கும் போது, வைஸ் ஜாவின் மேல் பரப்பிலிருந்து 5 to 10 mm வெளியே இருக்குமாறு பார்த்து கொள்ளவும்.

கீழ்க்கண்டவைகளுக்கு ஏற்ப பல்வேறு நீளம் மற்றும் தரங்களின் அடிப்படையில் ஃபிளேட் பைல் தேர்ந்தெடுக்க வேண்டும்.

– பணிப்பொருளின் அளவு
– நீக்க வேண்டிய உலோகத்தின் அளவு
– பணிப்பொருளின் மூலப்பொருள்

பைலின் கைப்பிடி இறுக்கமாக உள்ளதா என்பதை சரி பார்க்கவும். பைலின் கைப்பிடியை உங்கள் இடது கை (அ) வலது கை உள்ளங்கை வைத்து பைல்-ஐ முன்னோக்கி நகர்த்தவும்.




பைலின் முனையை நீக்க வேண்டிய பைலின் அளவிற்கு ஏற்ப முன்னும் (அ) பின்னுமாக பிடிக்கவும்.

அதிக உலோகம் பைல் செய்ய (Fig 3)




குறைந்த அளவு உலோகம் பைல் செய்ய (Fig 4)

சிறிய சீரற்ற நிலைக் கொண்ட பரப்பில் பைல் செய்ய(Fig 5)

சிறிய சீரற்ற நிலையை அகற்றுவதற்காக பைல் உள் பக்கம் தேய்த்து இழுத்து பைல் செய்ய வேண்டும். (Fig 6) மேலும் அதே தேய்த்தல் முறை பினிஸிங் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 4



Fig 5



Fig 6



அரத்தை முன்னோக்கு இயக்கத்தின் போது சீராக அழுத்தியும் மற்றும் பின் நோக்கி இயக்கத்தின் போது அழுத்தத்தை குறைத்தும் பைலிங் செய்ய வேண்டும்.

பைல் இயக்குதலை தொடர்ச்சியாக கொடுக்கும் போது பைலின் அழுத்தத்தை சம நிலைப்படுத்தி பைலிங் எப்போதும் சமதளமாக மற்றும் நேராக பணிப்பொருள் மேற்பரப்பின் மேல் பைலிங் செய்யவும்.

## சம தளப்பரப்பு மற்றும் செங்குத்துப்பரப்பு சரி பார்த்தல் (Checking flatness and squareness)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

- ***சமதளப்பரப்பினை சரி பார்த்தல்***
- ***செங்குத்துப்பரப்பினை சரி பார்த்தல்.***

### சமதளப்பரப்பினை சரி பார்த்தல் (Checking flatness) (Fig 1)

சமதளப்பரப்பினை சரி பார்த்தலுக்கு டிரைஸ்கொயரின் நேரான விளிம்புவை பயன்படுத்தவும்.

Fig 1



மேற்பரப்பின் அனைத்து பரப்புகளையும் உள்ளடக்கி, எல்லா திசைகளிலும் மூலமட்டத்தின் பிளேடை வைத்து சோதிக்க வேண்டும்.

வெளிச்சத்தை நோக்கி சரி பார்த்தல் செய்யவும். இடங்களை குறிப்பிடுவதாகும்.

### செங்குத்துப்பரப்பு சரி பார்த்தல் (Checking squareness)

பணிப்பொருளின் பினிஸிங் செய்யப்பட்ட பெரிய பரப்பை அடிப்படை பரப்பாக கருதவும். அடிப்படை பரப்பு துல்லியமாக முடிக்கப்பபட்டதாகவும், பிசிறுகள் அற்றதாகவும் இருக்க வேண்டும்.

அடிப்படை பரப்பின் மேல் டிரைஸ்கொயரின் ஸ்டாக் பாகத்தை வைத்து அழுத்தி பிடித்து கொள்ளவும். (Fig 2)

இப்போது டிரைஸ்கொயர் ஸ்டாக் பாகத்தை மெதுவாக இறக்கி அளக்க வேண்டிய இரண்டாவது பரப்பின் மேல், மூலமட்டத்தின் பிளேடு தொடுமாறு வைக்க வேண்டும்.

வெளிச்ச இடைவெளி உயர் மற்றும் தாழ் வான இடங்களை குறிப்பிடுவதாகும். (Fig 4)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 2




Fig 4




Fig 3




## அவுட்சைடு காலிபரைக் கொண்டு அளத்தல் (Measuring with outside calipers)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

- **அளவிடுதலுக்கு சரியான திறன் உள்ள காலிப்பரை தேர்ந்தெடுத்தல்**
- **ஃபர்ம் ஜாயிண்ட் மற்றும் ஸ்பிரிங் காலிப்பர் இரண்டிலும் அளவுகளை அமைத்தல்**
- **அவுட் சைடு காலிபரில் எடுத்த அளவுகளை, ஸ்டீல் ரூல் (அ) வேறு துல்லியமாக அளக்கும் கருவியுடன் ஒப்பிட்டு பார்த்து அளவுகளை கூறுதல்.**

Scan the QR Code to view the video for this exercise

### வெளிப்புற காலிப்பர்கள் (Outside calipers)

அளவீடு செய்ய வேண்டிய அளவிற்கேற்ப காலிப்பரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒரு 150 mm வரையறைக் கொண்ட வெளிப்பக்க காலிப்பர் 0 - 150 mm-லிருந்து அளவுகள் அளவிடுதலுக்கு பயன்படுகிறது.

அவுட்சைடு காலிப்பரின் ஜாக்களை அளவீடு செய்ய வேண்டிய அளவை விட அதிகமாக வரும் வரை திறக்க வேண்டும்.

பணிப்பொருள் அளவுகளை அளவிடுதலின் போது நிலையாக இருக்க வேண்டும். (Fig 1)

Fig 1




அவுட்சைடு காலிப்பரில் உள்ள ஒரு காலின் முனையை செய்பொருளின் மீது வைத்து, மற்றொரு காலின் முனையை தேவையான பகுதிக்கு கொண்டு வர வேண்டும்.

காலிப்பரின் மற்றொரு கால் முனையில் இடைவெளி இருந்தால், அது பணிப்பொருளின்

©NIMI NOT TO BE REPUBLISHED

வெளிப்புற விட்டத்தை தொடும் வரை சரியான தொடு உணர்வு வரும் வரை மரதுண்டுவின் மூலம், காலிப்பரின் ஒரு காலின் பின்புறம் மெதுவாக தட்டவும். (Fig 2)

Fig 2




TAP GENTLY TO CLOSE CALIPERS

ஏனெனில் முக்கியமாக அளவு பார்த்தலின் துல்லியம் என்பது பயனாளியின் தொடு உணர்வை பொருத்தே அமைகிறது எனவே சரியான தொடு உணர்வு பெறுதலுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஸ்பிரிங் அவுட் சைடு காலிபரை பொருத்த வரையில், காலிபரின் கால் முனையை நகர்த்தி, செய் பொருளின் மீது சரியான தொடு உணர்வு கொண்டு வர அதில் உள்ள ஸ்குரூ நட்டை திருக வேண்டும்.

Fig 3




OBTAINING THE 'FEEL'

நீங்கள் சரியான உணர்வுக்கு வெளிப்பக்க காலிப்பரை சரி செய்து இருக்கும் முடித்த பிறகு அந்த அளவை அளவுகோல் அல்லது எதாவது மற்ற துல்லிய அளவிடுதல் கருவிக்கு மாற்றி அளவை கணக்கிடவும்.

அவுட்சைடு காலிப்பர் மூலம் இணைப்புத் தன்மையை சோதித்தல். சமமான மேற்பரப்பின் மேல் அளவீடுள்ள ஸ்டீல் அளவு கோல் வைத்து மற்றும் அளவு கோல் ஒரு முனையை ஒட்டி உறுதியாக ஒரு தாடை முனையை பொருத்தவும். (Fig 4)

மற்றொரு தாடையின் அளவீடு முனையை அளவுகோல் பிரிவின் மேல் இருக்க வேண்டும். அதே நேரத்தில் மற்ற தாடையின் முனை அளவுகோலின் விளிம்பிற்கு இணையாக இருக்கவும்.

அளவு ± 0.5 mm-ன் துல்லியத்திற்கு கிடைக்கும் அளவுவை பதியவும்.

இதே போல் மத்திய பகுதி மற்றும் முனையிலும் அளவீடுதலை எடுக்கவும். அனைத்து அளவுகளும் சமமாக இருக்கிறதெனில், இது இணைபக்க தன்மை கொண்டதாகும்.

Fig 5




CHECKING THE DIMENSION

© NIMI NOT TO BE REPUBLISHED

## சமதளமாகவும் மற்றும் செங்குத்தாகவும் பைலிங் செய்தல்(தோராயமான துல்லியத்தன்மை) Filing flat and square (rough finish)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- பணிப்பொருளை பைலிங் செய்ய பென்ச் வைஸில் பிடித்தல்.
- சமதளப்பரப்பினை பைலிங் செய்தல்.
- நேரான விளிம்பு (Straight Edge) / டிரைஸ்கொயரைக் கொண்டு பணிப்பொருளின் சமதளப்பரப்பை சோதித்தல்.
- டிரைஸ்கொயரைக் கொண்டு பணிப்பொருளின் செங்குத்துப்பரப்பை சோதித்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 80 ISF 10-80 | - | Fe310 | 17 | 1 | 1.2.17 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
| SCALE 1:1 | FITTING FLAT AND SQUARE (ROUGH FINISH) | | | TOLERANCE : | | TIME : |
| | | | | CODE NO. FI20N1217E1 | | |

## வேலையின் வரிசை (Job sequence)

- ஸ்டீல் அளவு கோலை பயன்படுத்தி மூலப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- ஃபிளேட் ரஃப் பைல் கொண்டு துருபிடித்த படிமானங்களை நீக்கவும்.
- பைல் கொண்டு பக்கம் (A) தேய்க்கவும். (படம் 1)
- டிரைஸ்கொயர் மூலம் சமதளப்பரப்பினை சரி பார்க்கவும்.
- பக்கம் 'B' யை தேய்த்து, அதே நேரத்தில் பக்கம் 'A' விற்கு செங்குத்து தன்மை உடையதாகவும் இருக்குமாறு செய்ய வேண்டும்.
- டிரைஸ்கொயர் கொண்டு செங்குத்து தன்மையை சரி பார்க்கவும்.

**பக்கங்கள் A, B மற்றும் C ஒன்றுக் கொன்று செங்குத்தாக அமைய வேண்டும். (Fig 1)**

Fig 1




- அளவு கோல் பயன்படுத்தி 74 mm-க்கு ஜென்னி காலிப்பரை செட்டிங் செய்ய வேண்டும்.
- பக்கம் (B) மற்றும் (C)-க்கு இணையாக 74mm க்கு கோடுகள் வரையவும்.
- பன்ச் கருவி மற்றும் பால்பீன் சுத்தியல் பயன்படுத்தி குறிக்கப்பட்ட கோடின் மீது புள்ளியிடவும்.
- (D) மற்றும் (E) பக்கங்களை தேய்த்து 74mm க்கு கொண்டு வரவும். அதே நேரம் மற்ற பக்கங்களுக்கு செங்குத்தாகவும் அமைக்கவும்.
- (B) மற்றும் (C) பக்கங்களுக்கு இணையாக முறையே (D) மற்றும் (E) பக்கங்களை தேய்க்கவும். (Fig 2)

Fig 2




- ஸ்டீல் அளவு கோலைக் கொண்டு அளவுகளையும் மற்றும் டிரைஸ்கொயர் கொண்டு செங்குத்துப்பரப்பையும் சரி பார்க்கவும்.
- மேற்பரப்பு (F) ஐ தேய்த்து, பக்கம் (A)-க்கு இணைபக்கமாகவும் 9 mm-ன் பருமனை கொண்டதாகவும் அமைக்கவும்.
- கூர்மையான விளிம்புகளை நீக்கவும். எண்ணெய் சிறிதளவு மேற்பரப்பில் போடவும் மற்றும் அதை மதிப்பிடுவதற்கு பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

## பைலிங் பழகுதல், வெளிப்பரப்பு பைலிங், ஆட் லெக் காலிபர் மற்றும் ஸ்டீல் ரூல் நேர் மற்றும் இணை கோடுகள் வரைதல் (Filing practice, surface filing, marking of straight and parallel lines with odd leg caliper and steel rule)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- தேவையான அளவிற்கு இரும்புச் சட்டத்தை பைலிங் செய்தல்
- ஆட் லெக் காலிப்பர் பயன்படுத்தி கோடுகள் வரைதல்
- குறிப்பிட்ட கோடுகளை பன்ச் செய்தல்.




© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 50 ISF 10-50 | - | Fe310 | - | - | 1.2.18 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | **MARKING WITH ODD LEG CALIPER AND STEEL RULE** | TOLERANCE : ±0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1218E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

**"A" பக்கத்தில் குறிக்கவும் (Mark on side A)**

- ஸ்டீல் அளவு கோலை பயன்படுத்தி மூலப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- 3 பக்கங்கள் ஒன்றுக்கொன்று செங்குத்தாக இருக்குமாறு பைல் செய்யவும்.
- 48 x 48 x 9 mm அளவிற்கு குறிப்பிட்டு பைல் மூலம் தேய்த்து மேற்கண்ட அளவை கொண்டு வரவும்.
- ஆட்லெக் காலிப்பரில் 5 mm அமைக்கவும் மற்றும் அனைத்து பக்கங்களிற்கு இணையாக கோடுகள் வரையவும். (Fig 1)

Fig 1



FI20N1218H1

- இதே போல், ஆட்லெக் காலிப்பரில் 10 mm அமைத்து அனைத்து பக்கங்களிற்கு இணையாக கோடுகள் வரையவும். (Fig 2) குறிக்கப்பட்ட கோடுவின் மேல் தெரியுமாறு பன்ச் செய்யவும்.

Fig 2



FI20N1218H2

**"B" பக்கத்தில் குறிக்கவும் (Mark on side B)**

- ஆட்லெக் காலிப்பரில் 5 mm அமைக்கவும் மற்றும் Fig 3-ல் உள்ளது போல பக்கம் AB, CD, CA மற்றும் DB-க்கு பக்கங்களுக்கு இணையாக கோடுகள் வரையவும்.
- 10 mm அமைத்து, பக்கம் AB மற்றும் CD-க்கு பக்க இணை கோடுகள் வரைதல். (Fig 3)

Fig 3




FI20N1218H3

- Fig 3-ல் உள்ளது போல 1 மற்றும் 2, 3 மற்றும் 4 கோட்டை 5 mm அளவிற்கு குறிக்கவும்.
- புள்ளி 1 மற்றும் 3, 2 மற்றும் 4 ஐ இணைக்கவும் மற்றும் படம் 4-ல் உள்ளது போல குறிக்கப்பட்டது தெரியுமாறு புள்ளியிடவும்.
- மேற்பரப்பில் லேசாக ஆயில் போடவும் மற்றும் குறியிடுதலை சரி பார்க்க, பாதுகாத்து வைக்கவும்.

Fig 4



FI20N1218H4

© NIMI NOT TO BE REPUBLISHED

# டிவைடர், ஆட் லெக் காலிபர் மற்றும் ஸ்டீல் ரூலை பயன்படுத்தி வட்டம், வளைவு, இணை கோடுகள் வரைதல் (Marking practice with dividers, odd leg calipers and steel rule (circles, arcs, parallel lines))

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ஜென்னி காலிப்பர் கொண்டு இணை கோடுகள் குறித்தல்
- பாகைமானி மற்றும் ஸ்கிரைபர் கொண்டு கோணமுள்ள கோடுகளை குறித்தல்
- டிவைடர் மற்றும் ஸ்கிரைபர் கொண்டு வளைவுகள், வட்டங்கள் மற்றும் தொடு கோடுகள் குறித்தல்.

TASK 1




MARKING CURVES & CIRCLES
(By Jenny caliper and divider)

TASK 2




MARKING TANGENTS & ARCS

| 1 | 80 ISF 10-80 | - | FE 310 | - | - | 1.2.19 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | **MARKING PRACTICE** | TOLERANCE : ±0.5mm | TIME : |
|---|---|---|---|
| | | CODE NO. FI20N1219E1 | |

© NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **வளைவுகள் மற்றும் வட்டங்கள் குறித்தல்**

- ஸ்டீல் அளவு கோலை பயன்படுத்தி மூலப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- 78 x 78 x 9 மிமீ அளவிற்கு மூலப்பொருளை பைல் செய்யவும்.
- பணிப்பொருளின் மேற்பரப்பில் மார்கிங் மீடியா இடவும்.
- ஜென்னி காலிப்பரில் 13 மிமீ அளவு அமைக்கவும் மற்றும் "AB" பக்கத்தை அடிப்படையாக வைத்து இணை கோடு வரையவும். (படம் 1)
- இதே போல், 26 மிமீ அளவு அமைத்து, இணைகோடு வரையவும். (Fig 1)

Fig 1




- ஜென்னி காலிப்பரில் 11 மிமீ அளவு அமைக்கவும் மற்றும் "DA" பக்கத்தை அடிப்படையாக வைத்து இணை கோடு வரையவும். (Fig 2)
- இதே போல், 39 மிமீ, 67 மிமீ அளவுகளை அமைத்து படம் 2-ல் உள்ளவாறு இணை கோடுகள் வரையவும்.

Fig 2




- வட்டம் மற்றும் ஆரம் வரைவதற்கு, மைய கோடுகள் இணையும் இடத்தில் பிரிக் பன்ச் 30° ஐ பயன்படுத்தி பன்ச் ஏற்படுத்தவும்.
- டிவைடரில் 5 மிமீ, 6 மிமீ ஆரத்தை அமைத்து, படத்தில் உள்ளது போல வட்டங்கள் வரையவும்.
- ஆரம் 35 மிமீ அமைத்து, படத்தில் உள்ளது போல அரை வட்டம் வரையவும். (Fig 3)
- மதிப்பீடு செய்ய இதை பாதுகாக்கவும்.

Fig 3




© NIMI NOT TO BE REPUBLISHED

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **தொடு கோடுகள் மற்றும் சிறு வளைவு குறிப்பிடுதல்**

**படிநிலை 1 (Step 1)**

- பணிப்பொருளின் அளவு மற்றும் அதனுடைய சதுரத் தன்மைக்கு பொருளை சரி பார்த்தல்.
- செய்பொருளின் ஒரு பக்கத்தின் மார்கிங் மீடியா பூசவும்.

**படிநிலை 2 (Step 2)**

- படம் 1-ல் உள்ளது போல X மற்றும் Y-க்கு இணை கோடு வரைதல்.
- பிவல் பாகைமானி மேல் 97° அமைத்தல்.




- "O" புள்ளி மூலம் 97º கோடு குறித்து பிறகு மற்ற இரண்டு வட்டத்தின் மையத்தை அமைத்தல்.
- அனைத்து நான்கு வட்டங்கள் வரைய மையத்தில் பன்ச் செய்யவும்.

**படிநிலை 3 (Step 3)**

- 'a', 'o', 'c'-யில் $\phi$ 6 மிமீ வட்டம் மற்றும் 'b'-ல் $\phi$ 4 மிமீ வட்டம் வரையவும்.
- Fig 2-ல் உள்ளது போல X, Y மற்றும் Z இணைத்து தொடு கோடுகள் வரையவும்.




**படிநிலை 4 (Step 4)**

- மையம் 'a' மற்றும் 'O'-விலிருந்து ஓர் வளைவு R8 மிமீ வரைதல்.
- மையம் 'c'-யிலிருந்து ஓர் வளைவு R10 மிமீ வரைதல்.
- வரைந்த வளைவிலிருந்து தொடு கோடுகளை வரைதல், தொடு கோடு (e)-ன் வெட்டுகிறது. இது வளைவினோடு தொடு கோடு இணைத்தலுக்கு மையமாகிறது.
- Fig 2-ல் உள்ளது போல 'f' புள்ளியில் மையத்திலிருந்து R10 மிமீ வளைவு வரைதல்.
- இதே போல், 'd' புள்ளியில் R6 மிமீ வளைவு வரைதல்.

**படிநிலை 5 (Step 5)**

- சம இடைவெளிகளுடன் குறிக்கப்பட்ட கோடுகளின் மேல் பன்ச் செய்யவும். (Fig 3)
- மதிப்பீடுதலுக்கு பணிப்பொருளை பாதுகாக்கவும்.




— — — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஸ்கிரைபிங் பிளாக் மற்றும் டிவைடர் ஐ பயன்படுத்தி நேர்கோடுகள் மற்றும் வளைவுகளை வரைதல் (Marking off straight lines and arcs using scribing block and dividers)

Scan the QR Code to view the video for this exercise

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- வரைவுதல் சட்டம் பயன்படுத்தி இணை கோடுகள் குறித்தல்
- பகுப்பான்கள் பயன்படுத்தி வளைவுகள் குறித்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 80 ISF 10 - 80 | - | Fe310 | - | - | 1.2.20 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | **MARKING STRAIGHT LINES & ARCS USING SCRIBING BLOCK & DIVIDERS** | TOLERANCE : ±0. 5mm | TIME : |
| | | CODE NO. FI20N1220E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **நேரான கோடுகள் மற்றும் வளைவுகள் குறிக்கப்படுதல்**

- ஸ்டீல் அளவுகோலை பயன்படுத்தி மூலப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- மூன்று பக்கங்கள் ஒன்றுக்கொன்று செங்குத்தாக இருக்குமாறு பைல் செய்தல்.
- 76 x 76 x 9 மிமீ அளவிற்கு குறித்து மற்றும் பைலிங் செய்தல்.
- மென்மையான துணி கொண்டு மார்கிங் மேஜை, ஆங்கில் பிலேட் ஸ்கிரைபிங் பிளாக் மற்றும் ஸ்டீல் அளவு கோல் சுத்தம் செய்யவும்.
- மார்கிங் மேஜை மேல் வரைவுதல் சட்டம், கோணத் தகடு மற்றும் ஸ்டீல் அளவு கோலை வைக்கவும்.
- ஆங்கில் பிலேட் அளவு கோலை தாங்கச் செய்தல்.
- அளவு கோல் பயன்படுத்தி ஸ்கிரைபிங் பிளாக் 28 mm அளவுவை அமைத்தல்.
- ஆங்கில் பிலேட்-இல் பணிப்பொருளை தாங்கவும் பிறகு 'AB' பக்கம் அடிப்படையில் வரைவுதல் சட்டத்தில் 28 மிமீ அளவு கோடு வரையவும். (Fig 1)

Fig 1




- இதே போல், 48 மிமீ அமைத்து பிறகு 'AB' பக்கம் அடிப்படையில் கோடு வரையவும்.
- 'BC' பக்கம் அடிப்படையாகக் கொண்டு பணிப்பொருளை சுழற்றி அமைத்தல்.
- 18 mm அளவினை அமைக்கவும் மற்றும் 'BC' பக்கம் அடிப்படையாகக் கொண்டு வரையவும். (Fig 2)

Fig 2




- இதே போல் 58 mm அளவுவை அமைத்து மற்றும் 'BC' பக்கம் குறிப்பிட்டு பிறகு பன்ச் செய்யவும்.
- 20 mm அளவுவை அமைத்து மற்றும் ஆரம் வரைதலுக்கு அனைத்து நான்கு பக்கங்கள் அடிப்படையாகக் கொண்டு கோடு வரைதல்.
- 30º பிரிக் பன்ச் கருவியை கொண்டு நான்கு ஆர மையத்தில் மேல் பன்ச் செய்யவும்.
- டிரைவர் பயன்படுத்தி 20 மிமீ ஆரம் வரைதல்.
- சம இடைவெளி கொண்டு குறிப்பிட்ட கோடுகளின் மேல் தெரியுமாறு பன்ச் செய்யவும். (Fig 3)

Fig 3




- இதை மதிப்பிடுதலுக்கு பாதுகாக்கவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **நேரான கோடுகள், வளைவுகள் மற்றும் விளிம்புகள்குறிப்பிடுதல்**

பணிப்பொருளின் மற்ற பக்கத்தில், படத்தில் உள்ளது போல செய்முறை 2 குறிப்பிட்டு பிறகு புள்ளியிடுதல்.

- 38 mm அளவில் ரெபரன்ஸ் பக்ககத்தில் இருந்து நடுக்கோடு வரையவும்.
- நடுக்கோட்டினைக் கொண்டு மேலும் கீழும் 15 mm அளவில் மார்க் செய்யவும். (Fig 1)
- 20 mm மற்றும் 50 mm அளவுகளை, 'BC' அடிப்படையாகக் கொண்டு சென்டர் லைன் மீது மார்க் செய்து, ϕ 12 mm அளவில் வட்டம் வரையவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 1




Fig 2




- R6 mm அளவில் Fig 2-ல் உள்ளவாறு கார்னர்களில் மார்க் செய்யவும்.
- R10 mm அளவில் நடுக்கோட்டின் ஒரு முனையில் Fig 2-ல் உள்ளவாறு மார்க் செய்யவும்.
- மார்க் செய்த லைனின் மீது 60° முனையுடைய டாட் பன்ச் செய்யவும்.

## திறன் வரிசை (Skill sequence)

### சர்பேஸ் கேஜ் ஐ பயன்படுத்தி இணைகோடுகள் வரைதல் (Marking parallel lines using surface gauge)

Scan the QR Code to view the video for this exercise

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

- ***சர்பேஸ் கேஜ் பயன்படுத்தி இணை கோடுகள் குறித்தல்.***

வரைவி மற்றும் மற்ற நகருதல் அமைப்புகளின் தடையில்லா இயக்கத்தை சரி பார்த்தல்.

சர்பேஸ் கேஜ் அடித்தளத்தை சுத்தம் செய்யவும்.

சர்பேஸ் பிலேடின் மேல் உறுதியாக இருக்குமாறு வைத்தல்.

ஆங்கில் பிலேட் நோக்கி ஸ்டீல் அளவு கோலை அமைத்தல் மற்றும் குறிப்பிட வேண்டிய அளவிற்கு ஸ்கிரைபர் அமைத்தல். (Fig 1)

Fig 1




பணிப்பொருளில் தேவையில்லாத சிறு தேய்ந்த துகள்கள் இல்லாமல் சுத்தம் செய்யுங்கள்.

மார்க்கிங் மீடியாவை சீராக பூசவும்.

ஆங்கில் பிலேட் நோக்கி செய்பொருளை ஒட்டி அமைத்தல்.

ஒரு கையில் பணிப்பொருளை பிடித்து மற்றும் பணிப்பொருளின் குறுக்கே ஸ்கிரைபர் தொடுதல் வரைவின் முனையை நகர்த்தி குறிக்கச் செய்தல். (Fig 2)

Fig 2




© NIMI NOT TO BE REPUBLISHED

# குறிக்கப்பட்ட கோட்டினை ஒட்டி கிடைமட்டமான பரப்பை செதுக்கி உருவாக்குதல் (Chipping flat surfaces along a marked line)

**நோக்கம்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- **பிலேட் சீசல் உளியை பயன்படுத்தி சமமாக மேற்பரப்பு செதுக்குதல்.**

**குறிப்பு:** ஒவ்வொரு பயிற்சியாளரும் 3 அடுக்குகளாக 1.5 mm அளவில் செதுக்க வேண்டும்.




## வேலையின் வரிசை (Job sequence)

- மார்க்கிங் மீடியா பூசி கொடுக்கப்பட்ட அளவிற்கு மார்க்கிங் செய்ய வேண்டும்.
- பிரிக் பன்ச் (Prick punch) கொண்டு குறிக்கச் செய்த கோட்டில் பன்ச் செய்யவும்.
- வைஸில் உறுதியாக பணிப்பொருளை பொருத்தவும்.
- சீவுதலின் போது மரச் சட்ட கட்டை/ தண்டு கொண்டு பணிப்பொருளை தாங்குதல்.

**தேவை எனில் பணிப்பொருள் துண்டின் கீழ் தாங்க மரச் சட்டத்தை கொடுக்கவும். அதனால் குறிக்கச் செய்யும் கோடு மேற்பரப்பில் இருக்க வேண்டும்.**

- சரியான வெட்டுதல் விளிம்புவை கொண்டு சமமட்டமான உளி 20 mm அகலத்தை தேர்ந்தெடுத்தல்.
- 1 Kg-யின் பால்பீன் (Ball pein hammer) சுத்தியலை தேர்ந்தெடுத்தல்.
- சீவுதல் அமைப்பில் ஏறக்குறைய 35º சாய்வின் கோணத்தில் உளியை பொருத்தவும்.
- சுத்தியல் அதிக வலுவாக அடித்தலுக்கு கைபிடியின் முனையில் பிடிக்கவும்.

| 1 | 50 ISF 15 - 70 | - | Fe310 | - | - | 1.2.21 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | CHIPPING FLAT SURFACE | TOLERANCE : ±0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1221E1 | |

© NIMI NOT TO BE REPUBLISHED

எச்சரிக்கை/பாதுகாப்பு முன்னெச்சரிக்கை

உளி குடைபோல தலை கொண்டிருக்கக் கூடாது.

சுத்தியல் கைப்பிடி ஆப்புவை கொண்டு கண் துளையினுள் பாதுகாப்பாக பொருத்திருக்க வேண்டும்.

சீவுதலின் போது பாதுகாப்பு கண்ணாடிகள் பயன்படுத்தவும்.

சீவல் துண்டுகள் பறக்குதலை கட்டுப்படுத்துதலுக்கு வைஸிற்கு பின்னால் சீவுதல் கவசத்தை (Chipping screen) பயன் படுத்தவும்.

## திறன் வரிசை (Skill sequence)

## பிளாட் சீசலைப் பயன்படுத்தி செதுக்குதல் (Chipping using flat chisel)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

- **உலோகத் துண்டுகளை செதுக்குவது.**

**செதுக்குதலினை ஆரம்பித்தல் முன்பு (Before commencing chipping)**

காளான் தலை (Umbrella head) கொண்டிருக்காத உளியை தேர்ந்தெடுத்தல் மற்றும் நன்றாக கைப்பிடி கொண்ட சுத்தியல் தேர்ந்தெடுக்கவும். (Fig 1)

Fig 1




சுத்தியல் முகத்திலிருந்து, எண்ணெய் பொருட்கள் ஏதாவது இருந்தால், துடைத்து அகற்றவும்.

பாதுகாப்பு கண்ணாடிகள் அணியவும்.

சிப்பிங் திரையை நிறுவவும். (Fig 2)

Fig 2




**சிப்பிங் செய்முறை (Chipping process)**

வைஸில் பணிப்பொருளை பிடிக்கவும். தேவை எனில், மரச் சட்ட கட்டை மேல் பணிப் பொருளை தாங்கவும். (Fig 3)

Fig 3




சீரான பருமனில் உலோகத்தை வெட்டுதலுக்கு ஓர் கோணம் (ஏறக்குறைய) 35º-யில் உளியை அமைக்கவும். (Fig 4)

Fig 4




உளியின் முனையில் பார்த்து கொண்டு தலை சுத்தியால் அடிக்கவும்.

அதிகபட்ச விசை பெற கைப்பிடியின் முனையில் சுத்தியலை பிடிக்கவும். (படம் 5)

தள மேற்பரப்புவின் முடிவின் முனையின் செதுக்கி சீராக்குதல் நிறுத்தவும். இல்லையெனில், பணிப் பொருளின் விளிம்பு உடையலாம். இதை தவிர்க்க, எதிர் திசையிலிருந்து பணிப்பொருளின் முனையை சிப்பிங் செய்யவும். (படம் 6)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5




Fig 6




© NIMI
NOT TO BE REPUBLISHED

# குறித்தல், பைலிங், தட்டையான பரப்பு, மற்றும் மூலை மட்டத்தை பயன்படுத்தி அவற்றை சோதித்தல் (Marking, filing, flat square and check using Try - square)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ஆக்சாயிங் செய்தலுக்கு கிடைமட்டமாக வைஸில் பணிப்பொருளைப் பிடிக்கவும்.
- சமமட்டமாக மற்றும் சதுரமாக தேய்த்தல் மற்றும் ± 0.5mm-க்குள் அளவுகளை பராமரித்தல்
- நேரான விளிம்பு மூலவிட்ட தகடு பயன்படுத்தி தேய்த்து செய்த செய்பொருளின் சமமட்டத் தன்மை சரி பார்த்தல்




© NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

- ஸ்டில் அளவுகோலை பயன்படுத்தி மூலப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- 3 பக்கங்கள் ஒன்றிற்கு ஒன்று செங்குத்தான நிலை இருக்குமாறு ஆக்சாயிங் செய்தல்.
- 70 x 70 x 18 மிமீ அளவிற்கு குறித்து மற்றும் ± 0.5mm பராமரித்து ஆக்சாயிங் செய்தல்.
- ஸ்டீல் அளவு கோலுடன் அளவுவை சரி பார்க்கவும்.
- டிரைஸ்கொயர் மூலம் சதுரத் தன்மை மற்றும் டிரைஸ்கொயர் நேரான விளிம்பு/தகடினோடு சமமட்டமான மேற்பரப்பைச் சரி பார்க்கவும்.
- சுத்தம் செய்து பிறகு ஆயில் போடவும் மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 75 ISF 20-75 | - | Fe310 | - | - | 1.2.22 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | FILING FLAT AND SQUARE | TOLERANCE :- ±0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1222E1 | |

# எளிய வரைபடம் கொண்டு துளைகள், இருப்பிட நிலை, நேர் கோடுகள் போன்றவைகளை சுண்ணாம்பு பூச்சு பூசி பணிப்பொருள் மீது மார்க்கிங் செய்தல். (Marking according to simple blue prints for locating position of holes, scribing lines on chalked surfaces with marking tools)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- டிவைடர் பயன்படுத்தி துளையிடும் துளைகள் மற்றும் ஆரம் குறித்தல்
- பிவல் பாகைமாணி பயன்படுத்தி கோணமான கோடுகள் குறித்தல்
- Marking block பயன்படுத்தி நேரான கோடுகள் குறித்தல்
- டிவைடர் பயன்படுத்தி pitch circle diameter குறித்தல்.

Fig 1




Fig 2




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 50 ISF 10-50 | - | Fe 310 | - | Fig 3 | |
| 2 | 50 ISF 10-75 | - | Fe 310 | - | Fig 1,2,4,5 | 1.2.23 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | MARKING PRACTICE | TOLERANCE : - ±0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1223E1 | |

Fig 3




Fig 4




© NIMI NOT TO BE REPUBLISHED

| - | - | - | - | - | - | 1.2.23 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | **MARKING PRACTICE** | TOLERANCE : | TIME : |
| | | CODE NO. FI20N1223E2 | |

## வேலையின் வரிசை (Job sequence)

**படம் 1 (Figure 1)**

- ஸ்டீல் அளவு கோலை பயன்படுத்தி மூலப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- 70 x 45 x 9 மிமீ அளவிற்கு உலோகத்தினை ஆக்சாயிங் செய்து பிறகு அளவு கோலுடன் சரி பார்க்கவும்.
- பணிப்பொருளின் மேற்பரப்பின் Marking media வை apply செய்யவும்.
- ஜென்னி காலிப்பரை பயன்படுத்தி வரைபடம் போல வட்டமான துளைகள் மையம், ஆரம் மற்றும் பள்ளம் போன்றவைகளை குறிக்கவும்.
- டிவைடரில் ஆரம் அமைத்து மற்றும் படத்தை போல விட்டங்கள் ∅ 6 மிமீ, ∅ 8 மிமீ மற்றும் ∅ 16 மிமீ வரையவும்.
- பன்ச் கருவியை (Punch) பயன்படுத்தி குறிக்கப்பட்ட கோடு மேல் நன்றாக தெரியுமாறு பன்சிடவும்.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு குறிப்பிட்டதை சரி பார்க்கவும்.

**படம் 2 (Figure 2)**

- பணிப்பொருளின் மற்றொரு மேற்பரப்பின் மேல் Marking media வை apply செய்யவும்.
- "XY" அடிப்படையாக கொண்டு ஜென்னி காலிப்பர் பயன்படுத்தி 8 மிமீ, 16 மிமீ, 26.4 மிமீ மற்றும் 34.4 மிமீ கோடுகள் குறித்தல்.
- "XZ" அடிப்படையாக கொண்டு ஜென்னி காலிப்பர் பயன்படுத்தி 8 மிமீ, 34 மிமீ மற்றும் 52.4 மிமீ கோடுகள் குறித்தல். (Fig 1)

Fig 1




- Fig 2-ல் போல பிவல் பாகைமாணி பயன்படுத்தி 'O' புள்ளியில் 45° கோணமான கோடு குறித்தல்.

Fig 2




- டிவைடரில் ஆரம் 3 மிமீ-யை அமைத்து மற்றும் 'A', 'O' மற்றும் 'B' புள்ளியில் 3 துளைகள் ∅ 6 மிமீ விட்டங்கள் வரைதல்.
- இதே போல், 8 மிமீ ஆரத்தை அமைத்து பிறகு Fig 2-ல் உள்ளது போல் அரை வட்டம் வரையவும்.
- Fig 2-ல் உள்ளது போல தொடு கோடு லைன் வரையவும்.
- தொடு கோடு லைன்கள் அடிப்படையில் 'C' புள்ளியிலிருந்து, 8 மிமீ வெளிப்புற ஆரம் வரைதல்.
- தொடு கோடு லைன்கள் இணைப்பதற்கு 'O' புள்ளியில் 8 மிமீ ஆரம் வரைதல்
- வரைந்ததின் வளைவுகளின் மேல் நன்றாக தெரியுமாறு பன்ச் செய்யவும்.
- ஸ்டீல் அளவு கோலுடன் குறிப்பிடுதலை சரி பார்க்கவும்.

**படம் 3 (Figure 3)**

- மார்க்கிங் மீடியா பூசவும்.
- படத்தில் உள்ளது போல ஜென்னி காலிப்பரை பயன்படுத்தி துளைகள் மைய கோடு குறிக்கவும்.
- ஆரம் 3 மிமீ, 3.5 மிமீ, 2.5 மிமீ, 8 மிமீ மற்றும் 15 மிமீ அமைத்து பிறகு படத்தை போல் வட்டம் வரையவும்.
- பிரிக் பன்ச் 30° பயன்படுத்தி துளையின் மையத்தை அமைத்தலுக்கு பன்ச் செய்யவும்.
- ஸ்டீல் அளவு கோல் பயன்படுத்தி துளை மையங்களின் அமைவிடத்தை சரி பார்க்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED




**படம் 4 (Figure 4)**

- மார்க்கிங் மீடியா பூசவும்.
- வரைபடத்தை போல கோடுகளை குறிப்பிடவும்.
- டிவைடரில் ஆரம் அமைத்து, பிறகு வரை படத்தை போல வட்டம் வரைதல்.
- ஆர அளவானது R10, R4, R3 மற்றும் R2.5mm.
- வட்டத்தின் சுற்றளவின் மேல் பன்ச் செய்யவும்.
- பன்ச் கருவி 60º பயன்படுத்தி குறிக்கப்பட்ட கோடுகளின் மேல் நன்றாக தெரியுமாறு பன்ச் செய்யவும்.
- அளவு கோல் பயன்படுத்தி குறிப்பிடுதலை சரி பார்க்கவும்.




© NIMI NOT TO BE REPUBLISHED

## 'V' பிளாக் மற்றும் மார்க்கிங் பிளாக் உதவியுடன் உருளையின் மையம் கண்டறிதல் (Finding center of round bar with the help of 'V' block and marking block)

Scan the QR Code to view the video for this exercise

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- உருளை தண்டு பொருத்துவதற்கு ஏற்ற 'V' பிளாக் தேர்ந்தெடுத்தல்
- 'V' சட்டம் மற்றும் மார்க்கிங் பிளாக் பயன்படுத்தி உருளைத் தண்டு மையம் கண்டுபிடித்தல்..




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | Ø50-50 | - | Fe310 | - | - | 1.2.24 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | FINDING CENTER OF A ROUND BAR | TOLERANCE : - ±0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1224E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- செங்குத்து சதுரமாக்குதலுக்கு உருளை சட்டத்தின் முகங்களை பைலிங் செய்யவும்.
- உருளை சட்டத்தின் முகத்தின் மீது Marking media வை பூசவும்.
- Marking block, V - block சட்டம், மார்க்கிங் டேபிள் மற்றும் ஸ்டீல் அளவு கோல் சுத்தம் செய்யவும்.
- மார்கிங் டேபிள் மேல் 'V' சட்டம், மார்கிங் பிளாக் மற்றும் ஸ்டீல் அளவு கோல் வைக்கவும்.
- 'V' சட்டத்தின் மேல் உருளை தண்டுவை அமைத்தல் பிறகு இதை 'U' இறுக்கி கொண்டு இறுக்கவும்.
- உருளை தண்டுவின் உச்சியின் மேல் மார்க்கிங் பிளாக் அமைக்கவும் மற்றும் ஸ்டீல் அளவு கோலில் அதன் அளவு அறியவும்.
- ஸ்டீல் அளவுகோல் பயன்படுத்தி உருளைத் தண்டுவின் உயரத்தை அளவீடுதல்.
- உருளைத் தண்டு அளவுவின் உச்சியிலிருந்து 10 mm-விட குறைவாக அளவு கோல் பயன்படுத்தி மார்க்கிங் பிளாக் அளவு அமைக்கவும்.
- Fig 1-ல் உள்ளது போல மார்க்கிங் பிளாக் பயன்படுத்தி உருளை தண்டுவின் முகம் மேல் 'AB' கோடு வரையவும்.

Fig 1




FI20N1224H1

- 'U' சட்டத்தை இறுக்கியை தளர்த்தவும்.
- டிரைஸ்கொயர் பயன்படுத்தி 90º-க்கு பணிப்பொருளை சுழற்றி, அமைத்தல் மற்றும் 'U' சட்டத்தை இறுக்கியை இறுக்கவும். பிறகு 'BC' கோடு வரையவும். (Fig 2)

Fig 2




FI20N1224H2

- 'CD' மற்றும் 'AD' கோடுகள் வரைதலுக்கு அதே செய்முறையை திரும்ப செய்யவும். (Fig 3)

Fig 3




FI20N1224H3

- 'U' இறுக்கியை தளர்த்தவும் மற்றும் உருளை தண்டுவை வெளியே எடுக்கவும் பிறகு அதை மார்க்கிங் டேபிள் மேல் வைக்கவும்.
- ஸ்டீல் அளவு கோல் மற்றும் ஸ்கிரைபர் பயன்படுத்தி 'AC' மற்றும் 'BD' ஒருங்கிணைந்து புள்ளிகளை இணைத்தல். (Fig 4)

Fig 4




FI20N1224H4

- பன்ச் கருவி 90º பயன்படுத்தி குறுக்கிடும் 'O' புள்ளிமேல் பன்ச் செய்யவும்.
- புள்ளி 'O' உருளை தண்டுவின் மையமாகிறது.
- அதை மதிப்பிடுதலுக்கு பாதுகாக்கவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

## ஒற்றை வளைவுக் கோட்டிற்கு நேரான கோடு இணைத்தல் (Joining straight line to an arc)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- மார்க்கிங் பிளாக் உலோக மேற்பரப்புகளின் மேல் கோடுகளை குறித்தல்
- scriber மூலம் கொண்டு கோடுகள் வரைதல்
- பிவல் பாகைமானியுடன் கோணங்களை குறித்தல்
- divider கொண்டு கோணங்களை இருகூறாக்குதல்
- divider மற்றும் வரைவி scriber கொண்டு வட்டங்கள், வளைவுகள் மற்றும் தொடு கோடுகள் வரைதல்
- பன்ச் கருவி கொண்டு வரைபட வளைவுவை குறிப்பிடுதல்.

TASK 1




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 65 ISF 10-155 | - | Fe310 | - | TASK 1 | 1.2.25 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
| SCALE 1:1 | JOINING STRAIGHT LINE TO AN ARC | | | | TOLERANCE : - ±0.5mm | TIME |
| | | | | | CODE NO. FI20N1225E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **ஸ்பானர்**

- ஸ்டீல் அளவுகோலை பயன்படுத்தி மூலப்பொருளை சரி பார்க்கவும்.
- 150 x 64 x 9 மிமீ அளவிற்கு உலோகம் அரம் செய்தல்.
- பணிப்பொருளின் மேற்பரப்பின் மேல் நன்றாக தெரியும்படி Marking media ஐ பூசவும்.
- மார்க்கிங் மேஜை, மார்க்கிங் பிளாக், ஆங்கில் பிலேட் மற்றும் ஸ்டீல் அளவுகோல் இவைகளை சுத்தம் செய்யவும்.
- அளவு கோல் பயன்படுத்தி மார்க்கிங் பிளாக் 30 மிமீ அளவு அமைக்கவும்.
- மார்க்கிங் டேபிள் மேல் பணிப்பொருளை அமைத்து பிறகு இதை ஆங்கில் பிலேட் கொண்டு அனைக்கவும்.
- "WX" பக்கம் அடிப்படையில் 30 மிமீ மைய கோடு குறிக்கவும். (படம் 1)
- மார்க்கிங் பிளாக் 30 + 5 = 35 மிமீ அளவினை அமைத்து பிறகு "WX" பக்கம் அடிப்படையில் பணிப்பொருள் வரை படத்தில் உள்ளது போல 19 மிமீ நீளத்திற்கு வலது பக்கம் கோடுவை வரையவும். (படம் 1)
- இதே போல், 30 - 10 = 20 மிமீ அளவினை அமைத்து பிறகு "WX" பக்கத்திற்கு குறிப்பிட்டு பணிப்பொருள் வரை படம் உள்ளது போல 23 mm நீளத்திற்கு வலது பக்கமாக கோடு வரையவும். (Fig 1)

Fig 1




- பணிப்பொருளை திருப்பி மற்றும் அதை "XY" பக்கம் அடிப்படையில் ஆங்கிள் பிளேட் கொண்டு பொருத்தவும். (Fig 2)
- 19 மிமீ அளவுவை அமைத்து மற்றும் "XY" பக்கம் அடிப்படையில் கோடுவை வரைந்து பிறகு குறிக்கிடும் கோடினில் "A" புள்ளி குறித்தல். (Fig 2)
- இதே போல், "XY" பக்கம் அடிப்படையில் 23 மிமீ அளவுற்கு கோடுவை வரைதல், பிறகு குறிக்கிடும் கோடுகளில் "B" புள்ளியை குறிக்கவும். (Fig 2)
- 19 மிமீ ஆரத்தை அமைத்து பிறகு "A" புள்ளியில் ஆரம் வரையவும். (படம் 2)

Fig 2




- ஆரம் கோடு "C" புள்ளியில் "XY" பக்கம் குறிப்பிடும் பொருளை சந்திக்கின்றன. (Fig 3)

Fig 3




- பிவல் பாகைமானி பயன்படுத்தி "C" புள்ளியில் 14º கோணம் குறிப்பிடுதல் மற்றும் 27 மிமீ தூரத்திற்கு கோண கோடுவை வரைதல், பிறகு "D" புள்ளி குறிப்பிடவும். (Fig 3)
- 22 மிமீ தூரத்திற்கு "CD" கோடு அடிப்படையில் 90º கோண கோடு குறித்தல் மற்றும் பணிப்பொருள் வரை படத்தில் உள்ளது போல "E" புள்ளி குறித்தல். (Fig 4)
- இதே போல், 27 மிமீ தூரத்திற்கு "DE" கோடு அடிப்படையில் 90º கோணமான கோடு குறிக்கவும், பிறகு புள்ளி "F" குறித்தல். (Fig 4)
- "DE" கோடுவின் மேல் மைய கோடினை குறித்து மற்றும் அதை "G" என பெயரிடவும். (படம் 5)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 4




Fig 5




- புள்ளி "G"-யிலிருந்து கீழ்நோக்கி 19 மிமீ-ன் நீளத்திற்கு செங்குத்து கோடினை வரைதல். பிறகு இதை "H" என குறிப்பிடவும். (படம் 5)
- மைய புள்ளி "G" மூலம் "E" மற்றும் "D" புள்ளி சந்திக்க வேண்டி வளைவினை அதே வழியில் "H" புள்ளியிலிருந்து 19 மிமீ ஆரம் வரைதல். (Fig 5)
- 19 மிமீ ஆரத்தை அமைக்கவும் மற்றும் ஓர் (ஆர்ச்) வளைவு "B" புள்ளியில் வரையவும்.
- ஆர கோடு "F" புள்ளியில் "XY" பொருள் குறிப்பிடும் பக்கத்தை குறுக்கிடுகின்றன. (Fig 5)
- "WX" பக்கம் அடிப்படையில் கிடை மட்டமான கோடு 30 + 9.5 = 39.5 மிமீ கோடுவை வரைதல். (Fig 6)
- இதே போல், வலது முனையில் ஸ்பானரின் அகலத்தை குறிப்பிடலுக்கு "WX" பக்க அடிப்படையில் கிடைமட்ட கோடு 30 - 9.5 = 20.5 மிமீ கோடுவை வரையவும். (படம் 6)
- கீழ் நோக்கிய பக்கத்தில் "Q" புள்ளியிலிருந்து 13 மிமீ-ன் ஆரத்தை வரைதல் கொண்டு ஸ்பேனர் உருவ கோடுகளை இணைத்தல், மற்றும் மேல் நோக்கு பக்கத்தில் "R" புள்ளியிலிருந்து 51 மிமீ ஆரம் மேற்கண்டது போல் இணைத்தல். பிறகு பணிப்பொருள் வரை படத்தை போல ஸ்பேனரை நிறைவு செய்தல். (Fig 6)

Fig 6




- இதே போல், ஸ்பானர் வளைவு குறித்தலை நிறைவேற்றுதலுக்கு I, J, L, M, N, O, P, S மற்றும் T புள்ளிகளிலிருந்து இடது பக்க முனையை குறித்தலுக்கு மேற்கண்ட செய்முறையை பின்பற்றவும். (Fig 7)

Fig 7




- குறிக்கப்பட்ட கோடுகளின் மேல் பன்ச் செய்யவும். (Fig 8)
- ஸ்டீல் அளவு கோல் மூலம் அளவை சரி பார்க்கவும்.

Fig 8




© NIMI NOT TO BE REPUBLISHED

## திறன் வரிசை (Skill sequence)

## வெர்னியர் உயர அளவியை கொண்டு மார்க்கிங் செய்தல் (Marking with a vernier height gauge)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

- **வெர்னியர் உயர அளவியை கொண்டு மார்க்கிங் செய்தல்.**

**வெர்னியர் உயர அளவியின் முக்கிய செயல்பாடு என்ன? (What is the main function of the vernier height gauge?)**

வெர்னியர் உயர அளவியின் முதன்மை செயல்பாடு, பணிப்பொருளின் மீது தேவையான உயரத்திற்கு கோடுகள் வரையப் பயன்படுகிறது.

**வெர்னியர் உயர அளவியை எவ்வாறு பயன்படுத்துவது? (How to use a vernier height gauge?)**

வெர்னியர் ஹைட் கேஜ்-ன் ஸ்கிரைபானது மார்க்கிங் டேபிள் மேற்பரப்பை தொடும் போது பீம் அளவுகோல் பூஜ்யமானது வெர்னியர் அளவுகோல் பூஜ்ஜியத்துடன் ஒத்திருக்கிறதா எனப் பார்த்து சரிசெய்து கொள்ளவும். (Fig 1)

Fig 1




இங்கு நகருதல் பகுதியின் தடையில்லா இயக்கத்திற்கு சரி பார்க்கவும்.

பணிப்பொருளில் சிறு உலோக துண்டு பிசிறு இல்லாமல் சுத்தமாக இருக்கிறதா என உறுதிபடுத்தவும்.

பணிப்பொருள் ஆங்கில் பிளேட்-உடன் பொருத்த இறுக்குதல் தேவையாகிறது. மார்க்கிங் மீடியா சரியான அளவு பூசி இருக்க வேண்டும்.

மார்க்கிங் பிளேட் மேல் உறுதியாக வெர்னியர் உயர அளவி அடித்தளத்தை வைக்க வேண்டும்.

பணிப்பொருளிற்கு ஓர் கோணத்தில் ஸ்கிரைபர் பிடித்து கொள். பிறகு பணிப்பொருளின் குறுக்கே ஸ்கிரைபர் முனையை இழுக்கவும். (Fig 2)

> **அடித்தளத்தை தூக்குதலுக்கு அனுமதிக்கக் கூடாது.**
>
> **பணிப்பொருளிலிருந்து உலோகம் உரிந்து வருமாறு அதிக அழுத்தம் கொடுக்கச் செய்யக் கூடாது. இது வரைவு முனையின் சேதத்தைத் தவிர்க்கும். மைய புள்ளிகள் செங்கோணங்களில் கோடுகள் வரைதல் செய்ய முடிகிறது.**

முதலில் ஒரு திசையில் அளவுகளின் அனைத்து கோடுகள் வரைதல். இரண்டாவதாக மற்றொரு திசையில் அனைத்து கோடுகளையும் வரைதல். (Fig 2)

Fig 2




பணிப்பொருளை 90º-ல் அமைத்து பிறகு செய்தலுக்கு கோடுகளை வரைதல். பணிப்பொருளின் நகர்வை தவிர்க்க, அவை நன்கு பினிஸ் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

**சரியான கோடுகள் பெறுதலுக்கான முன்எச்சரிக்கைகள் (Precautions to get exact lines)**

> வரைவி (Scriber) ஆனது எப்போதும் கூர்மையாக இருப்பதை நிச்சயிக்கவும், வரைவி முனையின் சாய்வு மேற் பரப்புவை மட்டும் கூர்மையாக்கவும். (Fig 3)
>
> அடுத்தடுத்து கூர்மையாக்குதல் தவிர்க்கச் செய்ய வேண்டும். உங்களுக்கு எவ்வாறு வரைவியை கூர்மையாக்குதலுக்கு என்பதை அறிய பயிற்றுநரிடம் விவாதிக்கவும்.

Fig 3




© NIMI
NOT TO BE REPUBLISHED

## சிப்பிங், சேம்பரிங், சிப் சலாட் மற்றும் ஆயில் குரூவ் (Chipping, chamfering, chip slots and oil grooves)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- வரை படத்தைப் போல குறுகிய நீண்ட துவாரம், நீண்ட குறுகிய பள்ளம் மற்றும் சரிவு வெட்டுதலினைக் குறித்தல்
- அளவுகளை பராமரித்தலைக் கொண்டு குறுக்கு வெட்டு உளி மூலம் குறுகிய நீண்ட துவாரம் சீவல்
- ரவுண்ட் நோஸ் சீசல் மூலம் மற்றும் அளவுகள் பராமரித்தலுக்கு நீண்ட குறுகிய ஆயில் பள்ளம் சீவுதல்
- பிலேட் சீசல் பயன்படுத்தி கோணமான பரப்பினை சீவுதல்.




©NIMI NOT TO BE REPUBLISHED

| 1 | 50 ISF 15-72 | - | Fe310 | - | - | 1.2.26 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | CHIPPING SLOT AND OIL GROOVE | TOLERANCE : ±0.5mm | TIME |
|---|---|---|---|
| | | CODE NO. FIN1226E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- ஸ்டீல் அளவு கோல் மூலம் மூலப்பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- 70 x 48 x 14 மிமீ அளவிற்கு மூலப்பொருளை பைலிங் செய்தல்.
- வரை படத்தை போல பணிப்பொருளை குறித்து மற்றும் 60º பன்ச் செய்யவும்.

**நேரான குறுகிய நீண்ட தூரத்தை சீவி சீராக்குதல் (Chipping straight slot)**

- உறுதியாக Bench vice ல் பணிப்பொருளை பொருத்தவும்.
- கிராஸ் கட் சீசல் பயன்படுத்தி மற்றும் 5 மிமீ-ன் ஆழத்திற்கு 9.5 மிமீ அகலம் அளவினைக் கொண்டு சீராக பராமரிக்கவும். (Fig 1)

Fig 1




**சீசலின் கட்டிங் முனையை வேலையின் போது குளிர்விக்க ஆயில் துணி பயன்படுத்தவும்.**

- டயமண்ட் முனை உளியினை பயன்படுத்தி குறுகிய நீண்ட துவாரத்தின் முனைகளை செதுக்க வேண்டும். (Fig 2)

Fig 2




**ஆயில் குரூவ் சிப்பிங் (Chipping oil groove)**

- இதே போல் ரவுண்ட் நோஸ் சீசல் மற்றும் பால்பீன் சுத்தியலுடன் அகலம் 3 மிமீ x ஆழம் 3 மிமீ, செதுக்கி ஆயில் குரூவ் ஏற்படுத்துதல்.
- ஸ்டீல் அளவு கோல் (Scale) மற்றும் (depth gauge) ஐ கொண்டு குறுகிய நீண்ட துவாரம் மற்றும் ஆயில் நீண்ட குறுகிய பள்ளத்தின் அகலம் மற்றும் ஆழத்தை சரி பார்த்தல்.
- வரைபடத்தில் உள்ளது போல பிலேட் சீசல் உளி மற்றும் (Ball pein hammer) பயன்படுத்தி 5 x 45º சரிவு வெட்டு பகுதியை சீவுதல் வேலையை செய்யவும்.
- பணிப்பொருளின் அனைத்து முகங்கள் மற்றும் முனைகளில் தேவையில்லாத சிறு பிசுறுகளை நீக்கவும்.

Fig 3




© NIMI NOT TO BE REPUBLISHED

# ± 0.5 mm துல்லியத்திற்கு சமமட்டமான, சதுர மற்றும் பக்க இணை வடிவத்திற்கு பைலிங் செய்தல் (Filing flat, square and parallel to an accuracy of ±0.5mm)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ± 0.5 mm-ன் துல்லியத்திற்கு சமமட்டமான, பக்க இணை மேற்பரப்புகள் பைலிங் செய்தல்
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு அளவுகள் சரி பார்த்தல்
- ஓர் வெளி பக்க காலிப்பர் கொண்டு பக்க இணைத் தன்மை சரி பார்த்தல்
- டிரைஸ்கொயர் கொண்டு செங்கோணம் சரி பார்த்தல்.




©NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

- தேவையில்லாத சிறு துண்டு உலோகங்களை நீக்கவும் பிறகு மூலப்பொருளின் அளவுவை சரி பார்க்கவும்.
- 350 mm பிலேட் பாஸ்டர்டு பைலைக் கொண்டு பக்கம் 1-ன் மேற்பரப்பில் கிராஸ் பைலிங் செய்யவும். (Fig 1)

Fig 1




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 25 ISF 15-105 | - | Fe310 | - | - | 1.2.27 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | FILING FLAT AND SQUARE (PARALLEL BLOCK) | TOLERANCE : ±0.5mm | TIME |
| | | CODE NO. FI20N1217E1 | |

- ட்ரை ஸ்கொயர் பிளேடினைக் கொண்டு உடனுக்குடன் அதன் சம மட்டத்தினைப் பார்த்து சரி செய்து கொள்ளவும்.
- அடிக்கடி டிரைஸ்கொயர் கொண்டு அதே பக்கத்தினை பிலேட் செகண்ட் கட் பைலினைக் கொண்டு நிறைவு செய்தல்.
- பக்கம், பிறகு பக்கம் 2 மற்றும் பக்கம் 1-க்கு 90º-யில் அமையுமாறு பைலிங் செய்ய வேண்டும்.
- பக்கம் 3, பிறகு பக்கம் 2 மற்றும் பக்கம் 1-க்கு 90º-யில் அமையுமாறு பைலிங் செய்ய வேண்டும்.
- பக்கம் 1-க்கு பக்க இணையாக பக்கம் 4 வைலிங் செய்தல். (பக்க இணைத் தன்மை சரி பார்த்தலுக்கு காலிப்பரை பயன்படுத்தவும்)
- பக்கம் 2-க்கு இணையாக பக்கம் 5 பைலிங் செய்து நிறைவு செய்தல்.
- பக்கம் 3-க்கு இணையாக பக்கம் 6 பைலிங் செய்து நிறைவு செய்தல்.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.

**பிலேட் பாஸ்டர்டு பைல் கொண்டு பணிப் பொருளின் மேற்பரப்பில் உள்ள கடினமான சிறு செதில்களை நீக்க பைலிங் செய்யவும்.**

- சுத்தம் செய்து, லேசாக ஆயில் போடவும் பிறகு மதிப்பிடுதலுக்கு அதை பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

# வளைந்த கோடுகளின் மீது சிப் செய்தல் - பல்வேறு கோணங்களில் கீ-வே மார்க்கிங் செய்து கீ-வே கட் செய்தல் (Chip curve along a line - mark out, keyways at various angles and cut key ways)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ரவுண்ட் ரோஸ் சிசல் கொண்டு, பிலேட் பியரிங் பரப்பில், ஒரே குறுக்கு வெட்டு பரப்பு உள்ளவாறு சிப் செய்தல்.
- குறுக்கு வெட்டு மற்றும் டயமண்ட் முனை சிசல் கொண்டு பல்வேறு கோணங்களில் சாவி துவாரங்கள் சிப் செய்தல்.

TASK 1




TASK 2




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 75 ISF 10 - 50 | | Fe 310 | -- | TASK 2 | 1.2.28 |
| 1 | 75 ISF 10 - 50 | | Fe 310 | -- | TASK 1 | 1.2.28 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX.NO |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | CHIP RING OIL GROOVE AND KEYWAYS AT VARIOUS ANGLES | TOLERANCE : ±0.5mm | TIME |
| | | CODE NO. FI20N1228E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **வளைவுக் கோடுகளின் மீது சிப்பிங் செய்தல் /சீவுதல்**

- ஸ்டீல் அளவு கோலை கொண்டு மூலப்பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- 70 x 45 x 9 மிமீ அளவிற்கு மூலப்பொருளை பைலிங் செய்தல்.
- வரை படத்தைப் போல் வளைவுவை குறித்தல்.
- அகலம் 3 mm அளவுவை பராமரித்து ரவுண்ட் ரோஸ் சிசல் கொண்டு சிப்பிங் செய்தல். (Fig 1)


Fig 1


- அளவு கோல் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **பல்வேறு கோணங்களில் கீ-வே செதுக்குதல்.**

- அதனுடைய அளவிற்கு மூலப் பொருளை சரி பார்க்கவும்.
- 70 x 48 x 9 மிமீ அளவிற்கு பைலிங் செய்தல்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.
- டிரை ஸ்கொயர் கொண்டு சதுரத் தன்மையை சரி பார்க்கவும்.
- Marking media வை பூசவும். பிறகு வெர்னியர் உயர அளவு பயன்படுத்தி மற்றும் வெர்னியர் சாய்வு பாகைமானி பயன்படுத்தி கீ-வே கோணங்கள் குறிக்கவும். (Fig 2)


Fig 1


- நன்றாக தெரியும்படி கோட்டின் மீது குறிப்பிடுதலை பன்ச் செய்யவும்.
- Bench vice பணிப்பொருளை பிடிக்கவும்.
- தேவையான ஆழத்திற்கு கிராஸ் கட் சிசல் கொண்டு கீ-வே சிப் செய்யவும்..
- டயமண்ட் சிசல் கொண்டு கீ-வே கூர்மை முனைகள் சிப் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு பணிப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- வெர்னியர் பிவல் பாகைமானி கொண்டு கோணங்களை சரி பார்க்கவும்.
- பணிப்பொருளை நிறைவு செய்து பிறகு சிறு பிசுறுகளை நீக்கவும்.
- ஆயில் பூசி மதிப்பிடுதலுக்கு பாதுகாக்கவும்.

**சிசல் நன்றாக கூர்மை செய்யவும்**

**எப்போதும் வெட்டுதல் விளிம்பு சரிபார்க்கவும்.**

**பணியின்போது வெட்டுதல் விளிம்பில் வெப்பம் தணியச் செய்யவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

## சிசல் கூர்மையாக்குதல் (Sharpening of chisel)

நோக்கங்கள்: இந்த பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- பெடஸ்டல் கிரைண்டிங் இயந்திரம் பயன்படுத்தி பிலேட் சிசலின் முனையைக் கூர்மையாக்கல்.
- பெடஸ்டல் கிரைண்டிங் இயந்திரத்தை பாதுகாப்பாக இயக்குதல்.




குறிப்பு: பயிற்றுநர் மறுவடிவமைப்பிற்கான உளிகளை வழங்க வேண்டும்.

FI20N1229E1

## திறன் வரிசை (Skill sequence)

## சமமட்டமான உளி சாணை செய்தல் (Grinding of flat chisel)

நோக்கம்: இது உங்களுக்கு அறிய உதவுவது
- மழுங்கிய பிலேட் சிசலினைக் கூர்மையாக்ககல்

கூர்மையாக்கல் முன்பு (Before grinding)

**கிரைண்டிங் சக்கரத்தைக் கொண்டு பரிசோதித்தல் (Check the grinding wheel by)**

– விரல் முனையினை கிரைண்டிங் வீல்லின் முன் குறுக்காக வைத்து, வீலினைச் சுழற்றி கிளாஸிங் பரப்பு உள்ளதா என பரிசோதிக்க வேண்டும்.

– கிளாஸிங் இருப்பின் டிரஸிங் வீலினைக் கொண்டு சிலிக்கான் கார்பைடு ஸ்டிக்) கிரைண்டிங் வீலில் டிரஸிங் செய்யவும். (Fig 1)

Fig 1




FI20N1229J1

© NIMI NOT TO BE REPUBLISHED

– வெடிப்புகள் ஏதேனும் உள்ளனவா என்பதனை பார்வையிட்டு சரி பார்த்தல்.

கிரைண்டிங் வீல் ஆன் செய்யவும், பாதுகாப்பாக சக்கரத்தின் பக்கவாட்டில் நிற்கவும், மற்றும் சக்கரம் சரியாக சுற்றுகிறதை பார்க்கவும், பிறகு அதிகப்படியான அதிர்வு இருக்கிறதா என பார்க்கவும். அதிகப்படியான அதிர்வு இருந்தால் ட்ருயிங் செய்யவும். ஆலோசனைக்கு பயிற்றுநரிடம் விவாதிக்கவும்.

கொள்கலனில் போதுமான குளிர்விப்பான் இருக்கிறதை நிச்சயிக்கவும்.

உங்களுடைய கண்கள் கண்ணாடி கொண்டு அல்லது கருவி தாங்கியின் அருகே பாதுகாப்பு கவசத்தை தாழ்த்தி அமைத்து பாதுகாத்துக் கொள்ளவும். (Fig 2)

தேவை எனில், சக்கரத்திற்கு அருகாமையில் 2 மிமீ கருவி தாங்கியை நகர்த்தி சரி செய்யவும். (Fig 2)

Fig 2




**சாணை செய்தலின்போது (During grinding)**

மங்கிபோன சிசலை திரும்ப சாணை செய்தலுக்கு எடுக்கவும். சிசல், பயன்பாட்டிற்கேற்ப மங்கச் செய்யவும் திறமையான சீவிச் சீராக்குதலுக்கு, உளிகள் வழக்கமாக மறு கூர்மை செய்ய வேண்டியதாகிறது.

சாணை செய்தலின் போது உளியை பிடித்தலுக்கு காட்டன் கழிவு அல்லது மற்ற பொருள் பயன்படுத்தக் கூடாது.

சாணை சக்கரத்தில் பக்கங்களில் அல்ல, முகத்தை மட்டும் சாணை செய்ய பயன்படுத்தவும். (Fig 3)

கிரைண்டிங் மெஷினை சுவிட்ச் ஆன் செய்யவும்

Fig 3




Fig 4




சிசல் முனையினை கிரைண்டிங் வீல்-க்கு இணையாக பிடித்துக் கொள்ள வேண்டும். சிசலின் கோணம் 30º உள்ளவாறு (இதனால் வெட்ஜ் ஆங்கில் 60º உருவாகும்) பிடிக்க வேண்டும். (Fig 5)

டூல் ரெஸ்டின் (A)-ன் மீது Fig 5-ல் உள்ளவாறு சிசல் முனை வீலின் மீது வைக்க வேண்டும்.

சிசல் விளிம்புகள் அதிக வெப்பமடைவதை தவிர்க்க குறைந்த அளவு அழுத்தம் அளிக்கவும். (நீல நிறம் ஏற்படுவதை தவிர்க்க-அதாவது அனீலிங் விளைவு).

சிசலின் முனையில் குவி அமைப்பு ஏற்படுத்த இரண்டு பக்கங்களிலும் சிசலினை இடவலமாக ஆர வளைவு (C) திசையில் கிரைண்டிங் செய்ய வேண்டும். (Fig 5)

சிசலினை கிரைண்டிங் செய்யும் போது ஏற்படும் வெப்பத்தினை பொருத்து குளிர்விக்க வேண்டும்.

கிரைண்டிங் செய்தலை சிசலின் இரு பக்கங்களிலும் திரும்ப செய்யவும். ஊ

பிவல் பாகைமானியை கொண்டு சிசல் முக்கோண வடிவ கோணத்தை சரி பார்க்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5




© NIMI
NOT TO BE REPUBLISHED

## 0.5 மிமீ-ன் துல்லியத்திற்கு மெல்லிய உலோகத்தினை பைலிங் செய்தல் (File thin metal to an accuracy of 0.5mm)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- பாஸ்டர்டு பைல் மற்றும் கட் பைல் கொண்டு ± 1 mm -அளவிற்கு சமமான மற்றும் சதுரத்திற்கு பைலிங் செய்தல்
- அவுட் சைடு காலிப்பர் பயன்படுத்தி தடிமன் சரிபார்த்தல்
- டிரை ஸ்கொயர் பயன்படுத்தி சமதளம் மற்றும் சதுரத்தை சரிபார்த்தல்




© NIMI NOT TO BE REPUBLISHED

### வேலையின் வரிசை (Job sequence)

- பிலேட் செகன்ட் கட் பைல் கொண்டு பணிப்பொருளில் சிறு பிசுறுகளை நீக்கவும் மற்றும் பணிப்பொருளின் பரப்புகளின் மீது ஆயில் மற்றும் கிரீஸ் இருந்தால் சுத்தம் செய்யவும்.
- ஸ்டீல் அளவுகோல் பயன்படுத்தி பணிப்பொருளின் அளவுகளை சரிபார்க்கவும்.
- பணிப்பொருளை வைஸில் கிடைமட்டமாக இருக்குமாறு பிடித்துக் கொள்ளவும்.

**வைஸில் பணிப்பொருளை மிக அதிக அழுத்தம் கொடுத்து இறுக்கக் கூடாது**

- பிலேட் பாஸ்டர்டு பைலினைக் கொண்டு பணிப்பொருளின் மேற்பரப்பில் பைலிங் செய்யவும்.
- டிரைஸ்கொயர் கொண்டு பணிப்பொருளின் சமதளத்தைப் பரிசோதிக்கவும்.
- பிலேட் செகன்ட் கட் பைல் கொண்டு துல்லியமாக பைலிங் செய்யவும்.
- பணிப்பொருளின் நீளமான பக்கத்தை வைஸில் பிடித்துக் கொள்ளவும்.
- சமதளம் மற்றும் சதுரத்தன்மையை டிரை ஸ்கொயர் கொண்டு பரிசோதிக்கவும்.

| 1 | 65 ISF 6 x 105 | | Fe310-O | – | – | 1.2.30 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
| SCALE 1:1 | FILING THIN METAL | | | | TOLERANCE: ±0.5mm | TIME |
| | | | | | CODE NO. FI20N1230E1 | |

- பணிப்பொருளின் அடுத்தடுத்த பக்கத்தினை பைலிங் செய்து, டிரைஸ்கொயர் கொண்டு சரி பார்க்கவும்.
- பணிப்பொருளின் அளவானது கொடுக்கப்பட்ட வரைபடத்துடன் ஒப்பிட்டு செய்து முடிக்கவும்.

**பணிப்பொருளின் முடிக்கப்பட்ட பகுதிகளை வைஸில் இறுக்கும் போது மென்மையான தாடைகளை பயன்படுத்தவும்.**

- பணிப்பொருளின் அடுத்த இணைப் பக்கத்தை பைலிங் செய்யவும் மற்றும் தடிமனை அவுட் சைடு காலிப்பர் கொண்டு சரிபார்க்கவும்.

## அரங்களை சுத்தம் செய்தல் (Cleaning files)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது
- **பைலினை சுத்தம் செய்தல்.**

### அறிமுகம் (Introduction)

பைலிங் செய்யும் போது, உலோக பிசுறுகள் பைல்களின் பற்களிடையே தடையாக மாட்டிக் கொள்ளும். இதையே "பின்னிங்" என கூறலாம். இதனால் பைலிங்-ன் போது பினிஸிங் சரியாக இல்லாமல் இருக்கும்.

பைல் பிரஷ் பின்னிங் செய்ய பயன்படுத்தலாம். (Fig 1)

Fig 1




**பணிப்பொருளின் பினிஸிங் பைலிங்-ன் போது அதிக பின்னிங் இருக்கும் ஏனெனில் பற்களின் பிட்ச் மற்றும் ஆழம் குறைவாகிறது.**

**அரத்தின் முகத்தின் மேல் சுண்ணாம்பு கட்டியினை உபயோகிப்பதனால் பற்களின் ஊடுருவல் அளவு குறைகிறது, இதனால் பின்னிங் செய்முறை குறைக்கப்படுகிறது.**

அதிக வெட்டும் திசையினூடே பைல்பிரஸை இழுக்கவும் மற்றும் பித்தளை அல்லது செம்பு பட்டை கொண்டு எளிதில் சுத்தம் செய்ய பயன்படுத்தலாம். (Fig 2)

Fig 2




புதிய பைல்கள் சுத்தம் செய்தலுக்கு மென்மையான உலோக பட்டைகள் (பித்தளை அல்லது செம்பு) மட்டுமே பயன்படுத்தவும்.

**ஸ்டீல் பட்டைகள் கொண்டு சுத்தம் செய்தால் பைல்களின் வெட்டும் முனைகள் எளிதில் பாதிப்படையும்**

**பைல்-னை அதனில் பதிந்துள்ள chip மற்றும் burr களை சுத்தம் செய்ய chalk உபயோகிக்கலாம்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

## பல்வேறு வகையான குறுக்கு வெட்டுப் பரப்புக் கொண்ட உலோக பகுதிகளின் மேல் நேரான கோடு, வளைவுள்ள கோட்டின் மேல் அறுத்தல் (Saw along a straight line, curved line, on different sections of metals)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- உலோகங்கள், சேனல் மற்றும் 'T' பகுதியின் வெவ்வேறு பகுதிகளின்மேல் நேரான கோடுவில் அறுக்கவும்
- உலோகத்தின் சமமட்டமான பகுதியின் மேல் வளைவான கோடு அறுக்கவும்.




© NIMI NOT TO BE REPUBLISHED

NOTE : USE EX.NO : 1.2.16 FOR TASK 1

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 50 ISF 10 - 75 | | Fe 310 | | TASK 3 | 1.2.31 |
| 1 | ISNT 40 - 100 | | Fe 310 | | TASK 2 | 1.2.31 |
| - | - | | - | | TASK 1 | 1.2.31 |
| NO.OFF | STOCK SIZE | SEMI PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX NO : |

| | | | |
|---|---|---|---|
| SCALE : 1.2 | SAWING ON VARIOUS SECTION OF METAL IN STARAIGHT LINE AND CURVED LINE | TOLERANCE ±0.5mm | TAME : |
| | | CODE NO. FI20N1231E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **சேனல் அமைப்பை ஆக்சாயிங் செய்தல்**

- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு பணிப்பொருளை சரி பார்த்தல்.
- மேற்பரப்பின் மேல் 90x72x35mm marking media வை பூசவும்.
- ஜென்னி காலிப்பர் மற்றும் ஸ்டீல் அளவு கோலை கொண்டு ஆக்சாயிங் தேவையான எண்ணிக்கையை குறிக்கவும்.
- குறிக்கப்பட்ட கோடுவை பன்ச் செய்யவும்.
- வைஸின் மேல் உறுதியாக பணிப்பொருளை பிடிக்கவும்.
- சரியான பிட்ச் பிளேடு (1.0 மிமீ பிட்ச்) வை தேர்ந்தெடுத்தல்.
- முன்னோக்கு திசையில் பற்கள் நோக்கி இருக்குமாறு ஆக்சா பிரேமில் பிளேடு பொருத்தவும்.
- விங் திருகு நட்டை கொண்டு தேவையான இழுவிசை கொண்டு பிளேடு இறுக்கவும்.
- ஆக்சா பிளேடு விலகுவதை தவிர்பதற்கு வெட்ட வேண்டிய முனையில் சிறு குழி (slot) வெட்டு அரம் செய்யவும்.
- லேசான கீழ் நோக்கு அழுத்தத்தை கொண்டு வெட்டுதல் ஆரம்பிக்கவும்.
- பின்நோக்கி இழுவிசையில் அழுத்தத்தை விடுவிக்கவும்.
- தகடுவின் முழு நீளம் பயன்படுத்தவும்.

**எச்சரிக்கை**

**பிளேடுகளை பாதி வெட்டின நிலையில் உடைகிறது எனில், புதிய கத்தி பயன்படுத்தக் கூடாது. ஏற்கனவே பயன்படுத்திய பிளேடின் மூலம் நிறைவு செய்யவும்.**

**ஆக்சாயிங் போது சட்டத்தை (frame) சாய்க்க கூடாது.**

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **'T' வடிவ குறுக்கு வெட்டு தோற்றமுள்ள பணிப்பொருளை ஆக்சாயிங் செய்தல்**

- பென்ச் வைஸில் பணிப்பொருளை மார்க் செய்து பிறகு பிடிக்கவும்/பொருத்தவும்.
- நன்றாக தெரியுமாறு குறிக்கப்பட்டதின் மேல் பன்ச் செய்யவும்.
- தகடுவின் நழுவுதல் தவிற்தலுக்கு வெட்ட வேண்டிய முனையில் 'V' வடிவ குழி வெட்டி ஆக்சாயிங் செய்யவும்.
- ஆக்சா பிரேமில் 1.4 மிமீ பிட்ச் பிளேடு பொருத்தவும்.
- ஆக்சா பயன்படுத்தி 'T' வடிவ பகுதி மேல் லேசான கீழ்நோக்கு அழுத்தத்தை கொண்டு ஆக்சாயிங் ஆரம்பிக்கவும்.
- குறிக்கப்பட்ட கோடுகளினூடே ஆக்சாயிங் செய்த பகுதிகளை பிரித்தெடு.
- 'T' வடிவ பகுதி மேல் அறுத்தலின் போது இயக்கம் நிலையாக இருக்க வேண்டும்.
- ஆக்சாயிங் முடியும் போது, உங்களுக்கும் மற்றவர்களுக்கும் காயம் ஏற்படாமல் தவிர்க்க அழுத்தத்தை குறைக்கவும்.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு 'T' பகுதியின் வெட்டுதல் பகுதியின் அளவுகளை சரி பார்க்கவும்.

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **சமதளப் பகுதியை அறுத்தல்**

- மூலப்பொருளின் அனைத்து அளவுகளை சரி பார்க்கவும்.
- 70 x 45 x 9 மிமீ-ன் அளவிற்கு மூலப்பொருள் ஆக்சாயிங் செய்து பிறகு மேற்கண்ட அளவிற்கு நிறைவு செய்ய வேண்டும்.
- வரை படத்தில் உள்ளது போல சுண்ணாம்பு பூசி பிறகு அளவுகள் குறிப்பிடவும்.
- குறிக்கப்பட்ட கோடுகளின் மேல் நன்றாக தெரியுமாறு குறிப்பிடுகளின் மீது பன்ச் செய்யவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

- வைஸில் பணிப்பொருளை பிடிக்கவும்.
- முக்கோண பைல் பயன்படுத்தி பிளேடு விலகுவதை தவிர்த்தலுக்கு வெட்ட வேண்டிய முனையில் 'V' வெட்டு பைலிங் செய்தல்.
- ஆக்சாயிங் பிரேமில் 1.4 மிமீ பிட்ச் கொண்ட பிளேடு பொருத்தவும்.
- ஆக்சாயிங் பயன்படுத்தி உலோகம் மீது லேசான கீழ்நோக்கு அழுத்தத்தை கொண்டு அறுத்தலை ஆரம்பிக்கவும்.
- வளைவான கோடுகளினூடே அறுக்கப்பட்ட பகுதிகளை பிரித்தெடு.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு அறுக்கப்பட்ட பகுதிகளின் அளவுகளை சரி பார்க்கவும்.

## திறன் வரிசை (Skill sequence)

## வெளிப்புற ஆரத்தினை பைலிங் செய்தல் (Filing radius (external))

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது
- **வெளிப்புற ஆரத்தை பைலிங் செய்தல்**

ஆரத்தினை பைலிங் செய்தல் முற்றிலும் வேறுபட்ட நுட்பமாகும். மேலும் நல்ல பினிஸ்ங்குடன் துல்லியமான அரம் செய்தலுக்கு கணிசமான திறன் தேவைப்படுகிறது.

இந்த பைலிங்கின் வகையில், பைல் கிடைமட்டமாக அகலப் பகுதி சரியாக பொருந்திருக்க வேண்டும். பிறகு அதே நேரம் நீளவாக்கில் முன்பின் ஆடும் இயக்கம் கொடுக்கவும். பைலிங் செய்த முன்பின் மேற்பரப்பு தட்டையான மேற்பரப்பு இல்லாமல் ஒரே சீரான வளைவு அமைப்பு இருக்க வேண்டும். வெளிப்புற மேற்பரப்புகளின் ஆரத்தினை பைலிங் செய்தல் பல்வேறு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

**மூலைகளில் ரஃப் பைலிங் செய்தல் (Rough filing of corners**

மூலைகளை பிலேட் பாஸ்டர்டு பைல் பயன்படுத்தி கோடுவிற்கு (குறிப்பிடு செய்த) நெருக்கமான முறையில் பைலிங் செய்ய வேண்டும். (Fig 1)

Fig 1




**மூலைகளில் வட்டமாக்குதல் (Rounding of corners)**

சமதளமான மேற்பரப்புகள் முடிவுற்ற அளவிற்கு ஏறக்குறைய நெருக்கமாக பிலேட் செககண்ட் கட் **(2nd cut)** பைல் பயன்படுத்தி வட்டமாக்கச் செய்யப்படுகிறது. இதில், பைல் வளைவு மீது குறுக்காக திருப்புதல் இயக்கம் போன்று செய்து பைல் செய்யவும். (Fig 2)

Fig 2




ரேடியஸ் கேஜ் கொண்டு அவ்வப்போது அமைப்பினை சரி பார்க்கவும்.

**ஆர வளைவில் நிறைவு செய்தல் (Final finishing of radius)**

பினிஸிங் செய்முறைகளுக்கு, மென்மையான அரம் பயன்படுத்தவும். ஸ்மூத் பைலினை தேவையான ஆரம் ஏற்படும் வரை வளைவு கோடுவினூடே மேலும் கீழும், முன்னும் பின்னும் ஒருங்கிணைந்த இயக்கம் கொடுக்கப்படுகிறது. (Fig 3)

Fig 3






© NIMI NOT TO BE REPUBLISHED

**பைலிங் செய்தலின் போது கடைப்பிடிக்க வேண்டியவை (While filing make sure)**

– ரேடியஸ் கேஜ் கொண்டு அடிக்கடி ஆரத்தை சரி பார்த்தல்.
– அளவினை சரி பார்க்க பணிப்பொருளின் அகலமான பரப்பில் ரேடியஸ் கேஜ் உபயோகிக்கவும்.
– ஆரத்தினை பைலிங் செய்யும் போது அதிக அழுத்தம் கொடுக்காமல் பைல் நழுவுதலை தவிர்க்கவும்.

Scan the QR Code to view the video for this exercise

## ஆரத்தை சரி பார்த்தல் (Checking the radius)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

**• ஆர அளவியை கொண்டு ஆரத்தை பரிசோதித்தல்.**

ரேடியஸ் கேஜ் கொண்டு சரி பார்த்தல் முன்பு ரேடியஸ் கேஜ் சரியாக சுத்தம் செய்திருக்கிறதா என உறுதி செய்யவும். ஏதாவது தேவையற்ற சிறு பிசிறு துகள்கள் உள்ளது எனில், பணிப்பொருளிலிருந்து நீக்கவும். ரேடியஸ் கேஜ் வளைவு பாதிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தி சரி பார்க்கவும்.

ரேடியஸ் கேஜ்-யை சரி பார்க்க வேண்டிய ஆரத்திற்கு செங்குத்தாக பிடித்திருக்க வேண்டும். (Fig 1 & 2)

Fig 1



FI20N1231J1

Fig 2




FI20N1231J2

சரி பார்க்கும் மேற்பரப்பு வெளிச்சத்தின் பின்னணியில் இருந்து ஏதாவது ஒளி தெரிகிறதா என மேற்பரப்புகளைப் பார்வையிடவும். கேஜ் சரி பார்த்தலுக்கு ஆரத்தின் அமைப்பு நீளத்தினூடே நகர்த்தச் செய்ய வேண்டும். (Fig 3 & 4) மற்றும் ரேடியஸ் கேஜ் ஏற்ப படிப்படியாக

Fig 3



FI20N1231J3

Fig 4



FI20N1231J4

ஆரத்தை பைல் செய்து ஒளி பின்னணியில் ஒளி தெரியாமல் பைல் செய்து சரி செய்யவும்.

சரியான ஆரம் அமைப்பு என்பது கேஜ் கொண்டு சரியாக பொருத்தக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். (Fig 5)

Fig 5



FI20N1231J5

ரேடியஸ் கேஜ் பயன்படுத்தி பிறகு, அதனை சுத்தமான துணியை கொண்டு சுத்தம் செய்து, பிறகு பெட்டியில் வைப்பதற்கு முன்பு லேசாக ஆயில் போடவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

# மைல்டு ஸ்டீல்-கோண குறுக்கு வெட்டு பரப்பு மற்றும் G.I-வட்ட குறுக்கு வெட்டுப் பரப்புக் கொண்ட குழாயின் மேற்பரப்பில் நேராக அறுத்தல் (Straight saw on thick section of M.S.angle and pipe)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- சமமான கோண குறுக்கு வெட்டுப் பரப்பு பணிப்பொருளில் அளவு குறித்து அறுத்தல்.
- வட்ட குறுக்கு வெட்டுப் பரப்பு குழாய் பணிப்பொருளில் அளவு குறித்து அறுத்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | PIPE Ø 50 x 3 x 100mm | - | GI PIPE | - | TASK -2 | 1.2.32 |
| 1 | ISA 60x 6 x100mm | - | Fe310 | - | TASK -1 | 1.2.32 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | STRAIGHT SAW ON M.S ANGLE AND PIPES | TOLERANCE : ±0.5mm | TIME |
| | | CODE NO. FI20N1232E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **கோண குறுக்கு வெட்டுப்பரப்புக் கொண்ட மைல்டு ஸ்டீல் (M.S) பணிப்பொருளின் மீது அளவு குறித்து ஆக்சாயிங் செய்தல்.**

Scan the QR Code to view the video for this exercise

- ஸ்டீல் அளவு கோலை பயன்படுத்தி பணிப்பொருளினை சரி பார்க்கவும்.
- 100 மிமீ நீளத்திற்கு M.S. கோண தகடினை ஆக்சாயிங் செய்தல்.
- அறுத்தலின் கோடுகளை குறிக்கச் செய்து பன்ச் செய்யவும்.
- படம் 1-ல் உள்ளது போல பென்ச் வைஸ்-இல் பணிப்பொருளை பிடிக்கவும்.
- ஆக்சா பிரேமில் 1.8 மிமீ கோர்ஸ் பிட்ச் ஆக்சா பிலேடு பொருத்தவும்.
- ஆக்சா பிரேம் கொண்டு அறுத்தல் கோடுகளின் மேலே ஆக்சாயிங் செய்யவும்.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு சேனல் அளவுவை சரி பார்க்கவும்.
- மேலே பிசிறுவை சுத்தம் செய்து மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

**எச்சரிக்கை**

**சரியான பிட்ச் பிளேடை வெட்ட வேண்டிய பணிப்பொருள் மற்றும் உருவம் அமைப்பிற்கு ஏற்ப தேர்ந்தெடுத்தல்.**

**அறுத்தலின்போது, பிலேடின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பற்கள் உலோக பகுதியின் மேல் தொடுதலில் இருக்க வேண்டும்.**

Fig 1



FI20N1232H1

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 1: **கால்வனைஸ்டு ஐயர்ன் (G.I) -வட்ட வடிவ குறுக்கு வெட்டுப் பரப்பு கொண்ட குழாயினை அறுத்தல்**

- ஸ்டீல் அளவுகோலை பயன்படுத்தி குழாயின் அளவுவை சரி பார்த்தல்.
- 90 mm நீளம் அளவிற்கு குழாய் முனைகளை அறுத்தல்.
- அறுத்தல் கோடுகளை குறிக்கச் செய்து பிறகு நன்றாக தெரியுமாறு பன்ச் செய்யவும்.
- படம் 2-ல் உள்ளது போல பென்ச் வைஸில் பணிப்பொருளை பொருத்தவும்.
- ஆக்சா பிரேமில் 1.0 மிமீ பிட்ச் பிலேடு பொருத்தவும்.
- பிறகு அறுத்தல் கோடுகளின் மேலே ஆக்சாயிங் செய்யவும்.
- அறுத்தலின் போது குழாயின் அமைப்புவை சுழற்றி பிறகு மாற்றவும்.
- அளவு கோல் பயன்படுத்தி குழாயின் அளவுவை சரி பார்த்தல்.
- பிசிறுகளை நீக்கி பிறகு அதை மதிப்பீடுதலுக்கு சரி பார்க்கவும்.

**எச்சரிக்கை**

**வைஸில் குழாயினை அதிக அளவு இறுக்குதலை தவிர்க்கவும். அது அதன் அமைப்பை பாதிக்கும்.**

**மிக வேகமாக ஆக்சாயிங் செய்யக் கூடாது.**

**ஆக்சாயிங் முடியும் தருவாயில் மெதுவாக மற்றும் குறைந்த அழுத்தம் கொடுத்து அறுக்கவும்.**

Fig 1



FI20N1232J1

— — — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

## ± 0.25 மிமீ-ன் துல்லியத்திற்கு ஸ்மூத் பைல் கொண்டு படி அமைப்பு பணிப்பொருளின் மீது பைலிங் செய்து நிறைவு செய்தல் (File steps and finish with smooth file to accuracy of ±0.25mm)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- வெர்னியர் உயர அளவி கொண்டு படிவரிசைகள் குறித்தல்
- உலோகத்தை ஆக்சாயிங் செய்தல்
- ± 0.25 மிமீ-ன் துல்லியத்திற்கு படிவரிசைகள் பைலிங் செய்து மற்றும் நிறைவு செய்தல்.




© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 50 ISF 20 x 50 | - | Fe310 | - | 1 | 1.2.33 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
| SCALE 1:1 | STEP FILING AND MATCHING | | | | TOLERANCE : ±0.25mm | TIME |
| | | | | | CODE NO. FIN1233E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- ஸ்டீல் அளவுகோலை கொண்டு பணிப்பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- 45 x 45 x 18 mm அளவிற்கு பணிப்பொருளை ஆக்சாயிங் செய்து நிறைவேற்றுதல்.
- வரை படத்தில் போல வெர்னியர் உயர அளவு கொண்டு படி அமைப்புகளை குறிப்பிடுதல்.
- ஆக்சாயிங் மூலம் தேவையற்ற பகுதிகளை அறுத்து எடுக்கவும். (Fig 1)

Fig 1




- சேஃப் எட்ஜ் பாஸ்டர்டு, செகண்ட் கட் மற்றும் ஸ்மூத் வகை பைல்களைக் கொண்டு படி அமைப்புகளை பைலிங் செய்தல்.
- ± 0.25 mm துல்லியமாக பராமரித்தலில் வெளிப் பக்க மைக்ரோ மீட்டர் கொண்டு செய்பொருள் அளவுகள் சரிபார்த்தல்.
- டிரைஸ்கொயர் கொண்டு சதுரத் தன்மையை சரி பார்க்கவும்.
- இதே போல், Fig 2-ல் ஆக்சாயிங் கொண்டு தேவையற்ற பகுதிகளை அறுத்தல்.
- வெளி பக்க மைக்ரோ மீட்டர் கொண்டு பணிப்பொருள் அளவுவை அளவிடுதல்.

Fig 2




- டிரைஸ்கொயர் கொண்டு சதுரத் தன்மையை சரி பார்க்கவும்.
- பணிப்பொருளை நிறைவு செய்து பிறகு தேவையற்ற பிசிறுகள் நீக்கவும்.
- இதே போல், மற்றொரு பகுதி 'B' ஒன்று போல அளவில் இணையுமாறு பைலிங் செய்து நிறைவு செய்தல். (படம் 3)
- ஆயில் பூச்சு பூசவும் மற்றும் அதை மதிப்பீடுவிற்கு பாதுகாக்கவும்.

Fig 3




© NIMI NOT TO BE REPUBLISHED

# M.S. சதுரம் மற்றும் சதுர குழாய் பணிப்பொருளின் மேல் ஆக்சாயிங் மற்றும் பைலிங் செய்தல் (File and saw on M.S. square and pipe)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- படத்தில் உள்ளதைப் போல M.S. சதுரத்தில் குறிக்கப்பட்டு, அறுத்தல் மற்றும் பைலிங் செய்தல்.
- கொடுக்கப்பட்ட அளவுகளுக்கு ஏற்ப M.S. சதுர துவார குழாயில் குறித்தல், அறுத்தல் மற்றும் பைலிங் செய்தல்.

TASK 1




TASK 2




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ◘ 40-78 HOLLOW PIPE | - | Fe310 | - | TASK 2 | 1.2.34 |
| 1 | ■ 40-78 | - | Fe310 | - | TASK 1 | 1.2.34 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | FILE AND SAW ON M.S SQUARE AND PIPE | TOLERANCE : ±0.5mm | TIME |
| | | CODE NO. FI20N1234E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **சதுர பகுதி மேல் அறுத்தல் மற்றும் பைலிங் செய்தல்**

- ஸ்டீல் அளவுகோலை பயன்படுத்தி பணிப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- 75 x 38 x 38 மிமீ-க்கு M.S. சதுரத்தின் அனைத்து பக்கங்கள் பைலிங் செய்து நிறைவு செய்யவும் மற்றும் ஒவ்வொன்றிற்கும் பக்க இணைத் தன்மை மற்றும் செங்குத்துத் தன்மை பெறச் செய்தல்.
- படத்தில் உள்ளதுப் போல குறிக்கப்பட்டு பிறகு பன்ச் செய்யவும்.
- பென்ச் வைஸில் பணிப்பொருளை பிடிக்கவும், அதைப் போல மேஜை இடுக்கியின் தாடை மேல் 35 மிமீ வெளிப்பக்கம் நீண்டவாறு அமைக்கவும்.
- தேவையான ஆழத்திற்கு குறிப்பிட்ட கோடு 1, 2 மற்றும் 3-னூடே ஆக்சாயிங் செய்யவும். (படம் 1)

Fig 1




- மற்ற 3 துண்டுகளை அறுத்தலுக்கு படம் 2-ல் உள்ளது போல பணிப்பொருளை பொருத்தவும்.

Fig 2




- குறிக்கப்பட்ட கோடுகளின் மேல் அறுத்தல் மற்றும் பணிப்பொருளின் செங்குத்து தன்மை மற்றும் பக்க இணைத் தன்மை பராமரிக்கவும்.

**வெட்டிய துண்டுகளின் பக்கங்கள் இணையாக இருக்க வேண்டும் மற்றும் சரி சமமான அறுத்தல் குறிப்பீடு கொண்டிருக்க வேண்டும்.**

**அடிக்கடி கத்தி (Blade) ஐ தகடுவை கரையக் கூடிய ஆயிலில் ஈரப்படுத்தவும்.**

- பணிப்பொருளின் தேவையில்லாத பிசிறுவை நீக்கி பிறகு அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

**திடமான பணிப்பொருளுக்கு சொர சொரப்புள்ள பிட்ச் கத்தி தகடு மற்றும் துவார பகுதிக்கு மென்மையான பிட்ச் தகடு பயன்படுத்தவும்.**

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **சதுர வடிவ குழாய் மேல் இரம்ப அறுத்தல்**

- ஸ்டீல் அளவு கோல் பயன்படுத்தி பணிப்பொருள் அளவுவை சரி பார்க்கவும்.
- 75 x 38 x 38 மிமீ-ற்கு M.S. சதுர குழாயினை ஆக்சாயிங் மற்றும் பைலிங் செய்து நிறைவு செய்யவும் மற்றும் ஒன்றுக்கொன்று பக்க இணைத் தன்மை மற்றும் செங்கத்து தன்மை பராமரிக்கவும்.
- படத்தில் உள்ளதுப் போல குறிக்கப்பட்டு பிறகு பன்ச் செய்யவும்.
- பென்ச் வைஸில் பணிப்பொருளை பிடிக்கவும் மற்றும் பணிப்பொருள் படத்தில் உள்ளதுபோல தேவையான ஆழத்திற்கு குறிப்பிட்ட கோடுகளினூடே அறுக்கவும்.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு அறுக்கப்பட்ட உலோகத்தை சரி பார்க்கவும்.
- பணிப்பொருள் மேல் தேவையில்லாத பிசிறுகள் நீக்கி பிறகு அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

— — — — — — — — —

©NIMI NOT TO BE REPUBLISHED

## குறிக்கப்பட்ட கோடு (குழி மற்றும் குவி)-வினூடே ஆரம் பைலிங் செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் (File radius along a marked line (convex and concave) and match)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- குவி மற்றும் குழி ஆரம் குறித்தல்
- அளவு ஏற்ப குவி மற்றும் குழி ஆரம் பைலிங் செய்தல்
- படத்தில் உள்ளதுப் போல குவி மற்றும் குழி ஆரம் ஒருங்கிணைத்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 50 ISF 10-50 | - | Fe310 | - | PART 'B' | 1.2.35 |
| 1 | 65 ISF 10-65 | - | Fe310 | - | PART 'A' | 1.2.35 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | FILE CONVEX & CONCAVE RADIUS AND MATCH | TOLERANCE : ±0.1 mm | TIME |
| | | CODE NO. FI20N1235E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

### பகுதி 'A'

- ஸ்டீல் அளவு கோலை பயன்படுத்தி பணிப்பொருளின் அளவுவை சரி பார்க்கவும்.
- பக்க இணைத் தன்மை மற்றும் செங்குத்து தன்மை பராமரித்து 60 x 60 x 9 மிமீ அளவிற்கு தேய்த்து பிறகு நிறைவு செய்யவும்.
- Fig 1-ல் உள்ளது போல பாகம் A-ல் குறிக்கப்பட்டு மற்றும் பன்ச் செய்யவும்.

Fig 1




- பணிப்பொருளின் குறிக்கப்பட்ட கோட்டில் இருந்து 1 மிமீ தூரம் உலோகம் விட்டு விட்டு படம் 2-ல் உள்ளது போல கோடு குறிப்பிடவும்.

Fig 2




- அறுத்தல் செய்து தேவையற்ற உலோகம், நீக்கவும்.
- படம் 3-ல் உள்ளது போல கோடுகள் குறிப்பிடவும் மற்றும் குறிக்கப்பட்ட கோட்டினிலேயே அறுத்து பிறகு தேவையற்ற உலோகம் நீக்கவும்.

Fig 3




- சேஃப் எட்ஜ் பைல் மற்றும் அரை வட்டம் பைல்களின் பல்வேறு தரவகைகளைக் கொண்டு பகுதி 'A' -வ்பைலிங் செய்து வெர்னியர் கொண்டு சரி பார்க்கவும்.
- இதே போல், பாகம் 'B' அரம் செய்து மற்றும் அளவுவை சரி பார்க்கவும். (Fig 4)

Fig 4




- அரை வட்ட பைல் பல்வேறு தரங்கள் பயன்படுத்தி கொண்டு 30 மிமீ-க்கு குவி ஆரம் 'C' பைல் செய்யவும், மற்றும் டெம்பிளேட் கொண்டு ஆர வளைவுவை சரி பார்க்கவும்.

**பயிற்றுநர் அரத்தை சரி பார்த்தலுக்கு டெம்பிளேட் ஏற்பாடு செய்யலாம்.**

**எச்சரிக்கை**

**சமமட்டமான மேற்பரப்புகள் அரை வட்ட செகண்ட் கட் பைல் பயன்படுத்தி, இறுதி அளவிற்கு ஏற்றவாறு பினிஸிங் செய்யவும். இதில் பைல் சுற்றி சுழல்கிற இயக்கத்தை கொண்டு வளைவின் குறுக்கே நகர்த்தச் செய்ய வேண்டும்.**

**அடிக்கடி டெம்பிளேம்டை கொண்டு ஆரத்தை சரி பார்க்கவும்.**

**பையில் நழுவுதலைத் தவிர்க்க, தேய்த்தலின் போது மிக அதிக அழுத்தம் கொடுக்கக் கூடாது.**

### பகுதி 'B'

- பக்க இணைத் தன்மை மற்றும் செங்குத்து தன்மை பராமரித்து 45 x 45 x 9 மிமீ அளவிற்கு பைலிங் செய்து மற்றும் நிறைவு செய்யவும்.
- படம் 5-ல் உள்ளது போல பகுதி 'B'-யை குறிக்கச் செய்து பிறகு நன்றாக தெரியுமாறு பன்ச் செய்யவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5




- படம் 6-ல் உள்ளது போல கோடு குறிப்பிடவும் மற்றும் குறிக்கப்பட்ட கோடுகளின் மேலே ஆக்சாயிங் செய்து தேவையற்ற உலோகம் நீக்கவும்.

Fig 6




- படம் 7-ல் உள்ளது போல கோடு குறிப்பிடவும் மற்றும் குறித்த கோடினிலேயே வெட்டி பிறகு மீதமுள்ள உலோகம் நீக்கவும்.

Fig7




- பாதி வட்ட வடிவ பைல்-ன் பல்வேறு தரவகைகளைப் பயன்படுத்தி கொண்டு குழி ஆரம் அரம் செய்து பிறகு வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.
- டெம்பிளேட் கொண்டு குழி ஆரத்தை சரி பார்க்கவும்.
- அரம் தேய்த்தல் நிறைவு செய்து பிறகு பகுதி 'A' மற்றும் 'B'-யில் தேவையில்லாத பசிறுகளை நீக்கவும்.
- பணிப்பொருள் வரை படத்தில் உள்ளது போல பகுதி 'A' மற்றும் 'B' ஒருங்கிணைத்தல்.
- லேசான ஆயில் மேற்பரப்பில் பூசவும் மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI
NOT TO BE REPUBLISHED

## உலோக தகடு செதுக்குதல் (கத்ததிரித்தல்) (Chip sheet metal (shearing))

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- வடிவியல் வடிவங்களின் வெவ்வேறு வகைகள் வரைதல்
- சமமட்டமான உளி கொண்டு வெவ்வேறு வடிவியல் வடிவங்களை செதுக்குதல் அல்லது கத்ததிரித்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

A . SQUARE
B . CIRCLE
C . HEXAGON
D . PENTAGON
E . TRIANGLE

| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ISSH 160 x 160 x 0.5 | - | G.I STEEL | - | - | 1.2.36 |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | **CHIPPING DIFFERENT GEOMETRICAL SHAPES** | TOLERANCE : ± 1mm | TIME |
| | | CODE NO. FI20N1230E1 | |

Fig 1




SQUARE

Fig 2




CIRCLE

Fig 3




HEXAGON

Fig 4




PENTAGON

Fig 5




TRIANGLE

## வேலையின் வரிசை (Job sequence)

- மர சுத்தியல் பயன்படுத்தி டின்மேன் அன்வில்-இல் உலோக தகடை மட்டமாக்கவும்.
- ஸ்டீல் அளவு கோல் பயன்பனடுத்தி 150 x 150 x 0.5 மிமீ தகடுவின் அளவுவை சரி பார்க்கவும்.
- பணிப்பொருள் படத்தில் உள்ளது போல கோடுவை குறிப்பிடவும்.
- பிரிக் பன்ச் கருவி 30º மற்றும் பந்து முனை சுத்தியல் (Ball pein hammer) பயன்படுத்தி மைய புள்ளியை பன்ச் செய்யவும்.
- அளவுகோல், ஸ்டிரைட் எட்ஜ், 'L' சதுரம் மற்றும் ஸ்கிரைபர் பயன்படுத்தி 150 மிமீ பக்கத்தின் சதுரத்தை குறிக்கவும்.
- அளவுகோல் மற்றும் பகுப்பான் பயன்படுத்தி அதே மைய புள்ளியிலிருந்து ϕ 120 மிமீ-ன் வட்டத்தை வரையவும்.
- பணிப்பொருள் வரை படத்தில் உள்ளது போல வட்டத்தில் 50 மிமீ பக்கத்தின் அறுங்கோணத்தை குறிப்பிடவும்.
- பணிப்பொருள் வரை படத்தில் உள்ளது போல அறுங்கோணத்தினுள் 40 மிமீ பக்கத்தின் ஐங்கோணத்தை குறித்தல்.
- பணிப்பொருள் வரை படத்தில் உள்ளது போல ஐங்கோணத்தினுள் 30 மிமீ பக்கத்தின் சமபக்க முக்கோணம் குறித்தல்.
- அன்வில் இல் தகடுவை வைக்கவும்.
- பிளேட் சிசல் உளி மற்றும் பந்து முனை சுத்தியல் பயன்படுத்தி 150 மிமீ பக்கம் சதுரத்தை வெட்டுதல்.
- இதை போல், மற்ற வடிவியல் வளைவுகளை வெட்டவும்.
- ஸ்டீல் அளவு கோல் கொண்டு பல்வேறு வடிவியல் வளைவுகளை சரி பார்க்கவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

| 1 | ISSH 160 x 160 x 0.5 | - | G.I STEEL | - | - | 1.2.36 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | CHIPPING DIFFERENT GEOMETRICAL SHAPES | TOLERANCE : ± 1mm | TIME |
|---|---|---|---|
| | | CODE NO. FI20N1236E2 | |

# ஸ்டெப் அமைப்பு செதுக்குதல் மற்றும் பைலிங் தேய்த்தல் (Chip step and file)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- படத்தைப் போல குறியிட்டு செதுக்குதல்
- கொடுக்கப்பட்ட அளவிற்கு ஸ்டெப் அமைப்பு பைல் செய்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

**பயிற்றுநர், பயிற்சியாளர்களுக்கு வேலையை ஒதுக்க வேண்டும்**

- வேலை செய்வதற்கு செய்முறை விளக்கம் எழுதவும்.
- தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்களை பட்டியலிடுக.
- சிசல் பயன்படுத்தி வளைவுவை குறிப்பிட்டு வெட்டவும் மற்றும் ± 0.5 மிமீ-ன் துல்லியத்திற்கு வளைவுவை பைலிங் செய்தல்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ISSH 125 x 125 x 0.5 | - | STEEL SHEET | - | - | 1.2.37 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX NO. |
| SCALE 1:1 | PROFILE MARKING AND CUTTING | | | TOLERANCE ±0.5mm | | TIME |
| | | | | CODE NO. FI20N1237E1 | | |

# துளைகள் குறிப்பிட்டு மற்றும் துளையிடுதல் (Mark off and drill through holes)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- வெர்னியர் உயர கேஜ் பயன்படுத்தி அளவுகள் குறித்தல்.
- பில்லர் / பென்ச் துளையிடுதல் இயந்திரம் பயன்படுத்தி துளைகள் துளையிடுதல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

NOTE: USE EX.NO: 1.2.31 TASK 1

| 1 | | 1.2.31 ← | Fe310-O | - | - | 1.2.38 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | DRILLING THROUGH HOLES | TOLERANCE : ±0.1mm | TIME |
| | | CODE NO. FI20N1238E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு பணிப்பொருளின் அளவினை சரி பார்த்தல்.
- நன்றாக தெரியுமாறு Marking media வை பூசவும்.
- வரை படத்தில் உள்ளது போல அளவுகளை குறிப்பிடவும் மற்றும் சென்டர் பன்ச் கருவி கொண்டு துளைகளின் மையத்தை பன்ச் செய்யவும்.
- பெரிய துளைகளின் சுற்றளவு பிரிக் பன்ச் கருவி கொண்டு பன்ச் செய்ய வேண்டும்.
- இயந்திர வைஸ் மேல் பணிப்பொருளை பிடிக்கவும்.
- டிரில் சக்கில் Ø 4 மிமீ டிரில் கருவியை பொருத்தவும்.
- Ø 4 மிமீ டிரிலிற்கு ஸ்பிண்டில் வேதத்தை அமைக்கவும்.
- Ø 4 மிமீ துளை அளவானது அனைத்து துளைகளுக்கு அடிப்படை போல பயன்படுத்த முடிகிறது.
- ஒன்றன்பின் ஒன்றாக Ø 8, Ø 10 மற்றும் Ø 16 மிமீ டிரில் கருவி பொருத்தி, மேலும் பணிப்பொருள் படத்தைப் போல் துளைகளை துளையிடுதல்.
- துளையிடுதலின் போது குளிர்விப்பான் பயன்படுத்தவும்.

**எச்சரிக்கை**

**டிரில் மெஷினின் சக்கில் டிரில் கருவியை இறுக்குதலுக்கு சக்-கீ பயன்படுத்தவும்.**

- துளையிடுதல் இயந்திர ஸ்பிண்டிலிருந்து டிரிப்ட் தண்டு டிரில் கருவியை நீக்குதலுக்கு பயன்படுத்தவும். (படம் 1)

Fig 1




- அதை வெளியே எடுத்தலில் சுத்தியால் டிரிப்ட்டை அடிக்கச் செய்யக் கூடாது.
- டிரில் கருவியின் விட்டத்திற்கு ஏற்ப ஸ்பிண்டிலின் rpm-யை சரி செய்தலை உங்களுடைய பயிற்றுநரிடம் கேளுங்கள்.
- பணிப்பொருளை நிறைவு செய்து பிறகு அனைத்து மூலைகளில் தேவையில்லாத பிசிறுகளை நீக்கவும்.
- எண்ணையினை மெல்லியதாக பூசி மற்றும் இதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

## திறன் வரிசை (Skill sequence)

### துளைகளைத் துளையிடுதல் (Drilling through holes)

**நோக்கம்:** இது உங்களுக்கு உதவுவது

- **துளையிடுதல் இயந்திரத்தில் வெவ்வேறு விட்டத்தில் துளைகளைத் துளையிடுதல்.**

சென்டர் பன்ச் கருவியைக் கொண்டு துளை செய்ய வேண்டிய துளையின் மையத்தை பன்ச் செய்யவும்.

டிரில் கருவிக்கு தடையில்லாது இரண்டு பக்க இணை சட்டங்கள் பயன்படுத்தி கொண்டு பாதுகாப்பாக இயந்திர வைஸ் பணிப்பொருளை அமைக்கவும். (Fig 1)

துளையிடுதல் இயந்திரத்தின் ஸ்பிண்டிலினுள் துளைக் கருவி பிடிப்பானை பொருத்தவும்.

இதன் வழிகாட்டி துளைக்கு துளை கருவி பிடிப்பானில் 4 மிமீ விட்ட துளைக் கருவியை பொருத்தவும்.




பொருத்தமான டிரிலிங் மெஷினில் வேக மாற்றம் செய்யவும். ஸ்பிண்டில் வேகத்தை தேர்ந்தெடுத்து. (Fig 1)




4 மிமீ துளைக் கருவி கொண்டு முதலில் அனைத்து துளைகளும் துளையிடவும். இது 8 மிமீ, 10 மிமீ மற்றும் 16 மிமீ விட்ட துளைக்கு அடிப்படை போல பணியாற்றுவதாகும்.

Ø 8 ,Ø 10, Ø 12 மிமீ துளையிடவும்

டிரில் கருவியை சக்கில் இருந்து நீக்கவும்.

**எச்சரிக்கை**

**உங்களுடைய வெறும் கைகளை கொண்டு பிசுறு துண்டுகளை நீக்கம் செய்யக் கூடாது.**

**இயந்திரம் சுற்றிக் கொண்டிருக்கும் நேரத்தின் போது பெல்ட்டை மாற்றுதலுக்கு முற்படக் கூடாது.**

டிரில் கருவி வைஸில் ஊடுருவச் செய்யாதிருத்தலை உறுதி செய்யவும்.

சக்கில் டிரில் கருவி ஆழமாக சென்று விடாது பாதுகாப்பாக பொருத்தவும். (Fig 2)

பெரிய விட்டமுடைய டிரில் -ஆனது, சரியாக




பன்ச் மார்க்கின் மீது ஒருங்கிணைப்பதில் சிரமம் ஏற்படும். இதனை தவிர்க்க pilot hole (அடிப்படை டிரில் -சிறிய விட்டமுடைய டிரில் கருவி) ஏற்படுத்தப்படுகிறது. (Fig 3)




© NIMI NOT TO BE REPUBLISHED

## M.S. தகட்டின் மேல் துளையிட்டு மறையிடுதல் (Drill and tap on M.S.flat)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- **வெர்னியர் உயர அளவி கொண்டு மறையிடும் துளைகளை குறித்தல்**
- **மறையிடும் துளைக் கருவி அளவை கண்டறிதல்**
- **பணிப்பொருளின் மேல் மறை துளைக் கருவி கொண்டு துளையிடுதல் மற்றும் துளைகளின் முனையில் கூர்மை விளிம்பு போக்கி சாய்வாக்குதல்**
- **ஹேண்ட் டேப்பிங் கொண்டு உள் மறையிடுதல்**




## வேலையின் வரிசை (Job sequence)

- பணிப்பொருளை சரி பார்த்து பிறகு 75 x 50 x 9 மிமீ அளவிற்கு பைலிங் செய்தல்.
- வெர்னியர் உயர அளவி கொண்டு டேப்/மறை துளையிடும் துளைகளுக்கு துளை மையங்களை குறித்தல்.

**துளையிடுதல் (Drilling)**

- துளையிடுதல் செய்முறைக்கு பில்லர் துளையிடுதல் இயந்திரத்தை அமைத்தல்.
- இயந்திர இடுக்கியின் மேல் பணிப்பொருளை அமைக்கவும்.
- துளைக் கருவி பிடிப்பானில் சென்டர் டிரில் கருவியை பொருத்தவும்.
- வரைபட இயந்திரத்தில் சென்டர் டிரில் கருவி சீரமைத்து பிறகு அனைத்து இடங்களில் மைய துளையிடவும். (இது பெரிதளவு விட்டம் துளைக் கருவிகளுக்கு வழிகாட்டி துளை போல பணிபுரியும்)
- 5மிமீ விட்டமுள்ள ட்ரில்லினை ட்ரில் சக்கினில் கொண்டு அனைத்து ட்ரில் மையத்தில் வைத்து துளையிடவும்.
- M8 டேப்பிற்கு Ø 6.8 மிமீ இரண்டு துளைகள் துளையிடவும்.
- M10 டேப்பிற்கு Ø 8.5 மிமீ இரண்டு துளைகள் துளையிடவும்.
- M16 டேப்பிற்கு பணிப்பொருளின் மையத்தில் Ø 14.0 மிமீ துளையிடவும்.

| 1 | 60 ISF 10 x 78 mm | - | Fe310 | - | - | 1.2.39 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | DRILLING AND TAPPING | TOLERANCE : ±0. 1mm | TIME |
|---|---|---|---|
| | | CODE NO. FI20N1239E1 | |

© NIMI NOT TO BE REPUBLISHED

- துளையிடும் இயந்திரத்தில் கவுன்டர் சிங் கருவியை பொருத்தவும் மற்றும் 1.0 மிமீ ஆழத்திற்கு இரண்டு பக்கங்களின் டேப் துளையிட்ட துளைகள் அனைத்தும் விளிம்பும் சாய்வு சேம்பர் செய்யவும்.

**டேப்பிங்/மறைபோடுதல் (Tapping)**

- மேஜை இடுக்கியில் பணிப்பொருளை பொருத்தவும்.
- M6 கை டேப் மற்றும் டேப் ரின்ச் பயன்படுத்தி M6 உட்புற மறை வெட்டவும்.
- இதைப் போல், M8, M10 மற்றும் M16 கை டேப் மற்றும் டேப் ரின்ச் பயன்படுத்தி உட்புற மறைகள் வெட்டவும்.
- பணிப்பொருளின் அனைத்து மேற்பரப்புகளும் நிறைவு செய்து, தேவையில்லாத பிசிறுகளை அகற்றவும்.
- தேவையில்லாத பிசிறுகள் இல்லாது அனைத்து மறைகளை சுத்தம் செய்யவும்.
- லேசாக ஆயிலை பூசி பிறகு மதிப்பீடுதலுக்கு பணிப்பொருளை பாதுகாக்கவும்.

## துளைகளில் மறையிடுதல் (Tapping through holes)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

**• ஹேண்ட் டேப்களை பயன்படுத்தி உட்புற மறைகள் வெட்டுதல்.**

டேப் துளைக் கருவி அளவை சூத்திரம் அல்லது அட்டவணையை பயன்படுத்தி கண்டு பிடிக்கவும்.

தேவையான டேப் துளைக் கருவி அளவிற்கு துளையிடவும். (டேப் துளை அளவினை விட குறைந்த அளவு துளையிட்டு டேப் செய்தால் கருவி உடைந்து விடும்).

டிரில் செய்த துளையின் முனையில் சேம்பர் செய்தல், டேப் ஆனது எளிதில் செய்ய வழிவகைச் செய்கிறது. (Fig 1)

Fig 1




வைஸில் உறுதியாக மற்றும் கிடை மட்டமாக பணிப்பொருளை பிடித்தல். பணிப்பொருளின் மேற்பரப்பு இடுக்கி தாடைகளின் அளவு மேலாக சிறிதளவு இருக்க வேண்டும். இது டேப்பை சீரமைத்தலின் போது எந்த தடையும் இல்லாது மூலவிட்டத்தை பயன்படுத்த உதவுவதாகும். (Fig 2)

சரியான அளவு டேப் ரின்ச்-ல் முதல் டேப்பை (சாய்வு டேப்) பொருத்தவும். மிகவும் சிறிய ஒரு ரின்ச் டேப்பை சுற்றுதலுக்கு அதிக விசை தேவையாகும். மிகவும் பெரிய மற்றும் கனமான ரின்ச்கள் டேப்பிற்கு சுற்ற தேவையான உணர்வை கொடுக்காது பிறகு டேப் உடைந்து போகலாம்.

கிடைமட்ட தளத்தில் ரின்ச்சை-அமைக்க சேம்பர் செய்த துளையானது உதவுகிறது.

நிலையான கீழ்நோக்கி அழுத்தத்தை செலுத்தி மற்றும் மறையை ஆரம்பித்தலுக்கு வலதுபுற திசையில் டேப் ரின்ச்சை மெதுவாக சுற்றவும். டேப் ரின்ச்சை மையத்திற்கு அருகாமை பிடிக்கவும். (Fig 4)

Fig 2




Fig 3




© NIMI NOT TO BE REPUBLISHED

டேப் அமைப்பு பொருத்தப்பட்டவுடன் டேப் நிலையை டிரை ஸ்கொயர் கொண்டு சரிசெய்து கொள்ளவும்.

டேப்பை ஒவ்வொன்றிற்கும் 90º-யில் இரண்டு நிலைகளில் டிரைஸ்கொயர் பயன்படுத்தி செங்குத்தாயிருக்கிறதை சரி பார்க்கவும். தேவை எனில் திருத்தம் செய்யுங்கள். (Fig 4 & 5)

Fig 4




Fig 5




டேப் திரும்பவும் அதன் சீரமைப்புவை முதல் சில சுற்றுகளுக்கு பிறகு நிலையை சரிபார்க்கவும். இல்லையெனில் பின்னர் டேப் ஆனது உடையும் நிலை ஏற்படலாம்.

டேப் செங்குத்தாக அமைய் செய்த பிறகு எந்த கீழ் நோக்கு அழுத்தமும் தராது முனைகளில் பொருத்துதல் கொண்டு லேசாக ரின்ச்சை சுற்றவும். கைகளை கொண்டு செலுத்திய ரின்ச் அழுத்தத்தை நன்றாக சமநிலைபடுத்த வேண்டும். ஏதாவது ஒரு பக்கம் மேல் அதிக அழுத்தம் டேப் சீரமைப்புவை கெடுக்கும் மற்றும் மேலும் டேப்பின் முறிவு ஏற்படலாம். (Fig 6)

மறையை வெட்டுதல் தொடரவும். அடிக்கடி ஏறக்குறைய கால் சுற்று பின்னோக்கி சுற்றி, மெட்டல் சிப் பிரித்து எடுக்கலாம். (Fig 7)

Fig 6




Fig 7




சுற்றும் இயக்கங்களில் ஏதாவது தடை உணரும் போது நிறுத்தி பிறகு பின்நோக்கி சுற்றவும்.

**மறையை வெட்டுதலின் போது உராய்வு மற்றும் வெப்பம் குறைத்தலுக்கு குளிர்விப்பான் திரவத்தை பயன்படுத்தவும்.**

துளையை முழுவதுமாக மறை செய்யும் வரை மறையை வெட்டவும்.

நடுத்தர மற்றும் பிளக் டேப்பை பயன்படுத்தி நிறைவு செய்து மற்றும் சுத்தம் செய்து மூடி வைக்கவும். முதல் டேப் துளை முழுவதுமாக உட்புக செய்து கொண்டதெனில், நடுத்தர மற்றும் கடைசி பிளக் டேப் வெட்டாது.

பணிப்பொருளில் இருந்து சிப் துண்டுகளை நீக்கி பிறகு பிரஸை கொண்டு டேப்பை சுத்தம் செய்யவும்.

**டேப்/மறை செய்ய வேண்டிய துளையின் விட்டத்திற்கு கொடுக்கப்பட்ட டேப்பின் அளவுக்கு சரியாயிருக்கிறதா உறுதி செய்யுங்கள்.**

**ஒவ்வொரு கால் சுற்றின் பிறகு சீவல் துண்டுவை உடைதலுக்கு மற்றும் வெளியேற்றுவதற்கு பின்னோக்கி சுற்றவும்.**

**ரின்ச் நீளம், டேப்பின் அளவிற்கு பொருத்தமான நீளத்தை தேர்ந்தெடுக்கவும். ரின்ச் அதிக நீளம் டேப்பின் உடைதல் காரணமாகலாம்.**

©NIMI NOT TO BE REPUBLISHED

# எழுத்து மற்றும் எண் முத்திரையிடுதல் (எழுத்து முத்திரை மற்றும் எண் முத்திரை) (Punch letter and number (letter punch and number punch))

நோக்கம்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
• எழுத்துக்கள் மற்றும் எண்கள் முத்திரையிடுதல்.




©NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

- பணிப் பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- படத்தில் உள்ளதை போல குறிப்பிட்டு வெட்டவும்.
- உருவம் மற்றும் அளவிற்கு பைலிங் செய்து நிறைவேற்றுதல்.
- வரை படத்தில் உள்ளது போல Ø 5 மிமீ துளை துளையிடவும்.
- உங்களுடைய பெயர் மற்றும் தொடர்பு எண் முத்திரையிடவும்.
- தேவையில்லாத பிசிறுவை நீக்கி, அதை பினிஷ் செய்யவும்.

| 1 | SS 110 x45 x 2mm | - | STAINLESS STEEL | - | - | 1.2.40 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | LETTER AND NUMBER PUNCHING PRACTICE ON KEY CHAIN TALLY | TOLERANCE : NIL | TIME |
| | | CODE NO. FI20N1240E1 | |

## திறன் வரிசை (Skill sequence)

## எழுத்து மற்றும் எண் முத்திரைகள் (Letter and number punches)

**நோக்கம்:** இது உங்களுக்கு அறிய உதவுவது

**• எழுத்துக்கள் மற்றும் எண்கள் முத்திரையிடுதல்.**

**எழுத்து மற்றும் எண் முத்திரைகள் (Letter and number punches)**

இவ்வகை கடினமுள்ள மற்றும் டெம்பர்டு எஃகு முத்திரைகள் பணிப்பொருளின் வேலையில் தேவையான அடையாளங்கள் எழுத்துக்கள் அல்லது எண்கள் அடையாளம் காண முத்திரை செய்தலுக்கு பயன்படுகிறது.

அவை 0.8 மிமீ முதல் 13 மிமீ வரை அளவு வரிசையில் குறியீடுகள் கொண்டு கிடைக்கும்.

அவை பெட்டியில் மொத்தமாக வைக்கப் படுகிறது.

செய்வேலை பொருள் பன்ச்/முத்திரையைவிட மென்மையாக இருக்கிறதா என சரி பார்த்தலுக்கு முத்திரை செய்ய வேண்டிய வேலைப்பொருளின் மேல் பைலிங் செய்து பார்க்கவும். கடின பணிப்பொருள் முத்திரைக்கு முயற்சித்தால் முத்திரை / பன்ச் சேதமாகும். கடின பணிப்பொருள்கள் குறித்தலுக்கு மின்சார பென்சில் அல்லது அமில அரிமான முறையை பயன்படுத்தவும். (Fig 1)

Fig 1




ஒவ்வொரு குறியீடுவும் கண்டிப்பாக ஒருமுறை அடியை கொண்டு உருவாக்கவும். இரண்டாவது அடி சிதைந்த இரண்டாவது முத்திரை குறியை கொடுக்கிறது.

எழுத்துக்கள் போன்ற 'M' மற்றும் 'W' போல எழுத்துக்கள் 'L' மற்றும் 'T' உருவாக்கும் தடயத்தின் அதே ஆழத்தை உருவாக்குதலுக்கு உறுதியான அடி தேவையாகலாம்.

கொடுக்கப்படும் அடியிற்கு தடயத்தின் ஆழம், பணிப்பொருளின் மென்மை தன்மையை கொண்டு மாறுபடும்.

வெவ்வேறு உலோகங்கள் மேல் பயிற்சிக்கவும்.

பின்வரும் முறையில் முத்திரைகளை பயன்படுத்தவும்.

– குறியீடுகளுக்கு வழிகாட்டுதல்களை குறிப்பிடவும்.

– நீங்கள் சரியான குறியீடு கொண்டிருத்தலை சரி பார்க்கவும்.

– முத்திரையை பன்ச் கோட்டில், சதுரமாக, சரியான இடைவெளியுள்ள மற்றும் சரியாக வழி அமைப்பதால் நேரான நிலையான முத்திரைக் கிடைக்கும். (Fig 2)

Fig 2




செங்குத்து நிலையில் பன்ச் முத்திரையை பொருத்தவும். (Fig 3)

முத்திரை (பன்ச்) மேலே செங்குத்தாக சுத்தியலை பிடிக்கவும். (Fig 3)

Fig 3




முத்திரையின் முனையை பார்க்கவும்.

ஒரு உறுதியான அடி ஏற்படுத்தவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

## வெவ்வேறு பன்ச்கள் பயன்படுத்துதல் மூலம் பயிற்சி செய்தல் (Practice use of different punches)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ஹாலோ பன்ச் கருவி கொண்டு கேஸ்கட் மீது துளைகள் குறிப்பிட்டு மற்றும் துளைகள் பன்ச் செய்தல்
- கோர்த்திணைப்பில் சாய்வு பின்/டவல் பின் கழற்றுதல்.




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | GASKET 100 x 70 x 3.0mm | - | RUBBER | - | - | 1.2.41 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | PRACTICE WITH HOLLOW AND PIN PUNCH | TOLERANCE : NIL | TIME |
| | | CODE NO. FI20N1241E1 | |

© NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **கேஸ்கட் மேல் துளைகள் குறிப்பிட்டு துளைத்தல்.**

- கேஸ்கட்டில், படத்தில் உள்ளதுப் போல அளவுகள் குறிப்பிடுதல்.
- பென்சில் பயன்படுத்தி துளைகளில் பன்ச் புள்ளியின் செய்ய கோடு அமைக்க வேண்டும்.
- பகுப்பான் கொண்டு Ø 8 mm துளை வட்டங்கள் வரைதல்.
- Ø 8 mm துவார பன்ஞ்ச் கொண்டு துவாரத்தை பன்ச் செய்து உருவாக்கவும். (படம் 1)

Fig 1




USING A HOLLOW PUNCH

**செய்ய வேண்டிய வேலை 1 பயிற்சிற்கு கேஸ்கட்/ செயற்கை தோல்/ரப்பர் (அ) கார்க் போன்றவைகளை பயன்படுத்தலாம்.**

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **சாய்வு டவல் பின் பிரித்தெடுத்தல்**

- டேப்பர் பின்-ஐ பிரித்தெடுக் ஏற்ற பொருத்தமான பின் பன்ஞ்ச்சை தேர்ந்தெடுத்தல். (Fig 1)

Fig 1




- எப்போதும் இயந்திரத்தில் இணைப்பில் உள்ள டேப்பர் பின்னை பிரித்தெடுத்தலுக்கு முதலில் டிரிப்ட் பன்ச்சை பயன்படுத்தவும். (Fig 2)
- பின்னர் கோர்த்திணைப்பில் டேப்பர் பின்னை பிரித்தெடுத்தலுக்கு குறுகிய (அ) நீண்ட பின் பன்ஞ்ச் பயன்படுத்தி மேலும்

Fig 3




பின்னை பிரித்தெடுக்க மெதுவாக சுத்தியல் கொண்டு அடிக்கவும்.

- டவல் டேப்பர் பின்னை பிரித்தெடுத்தலின் போது, லேசான அடியுடன் டவல் பின் மேல் சுத்தியல் கொண்டு அடிக்கவும்.

**செய்ய வேண்டிய வேலை 2 டவல் பின் பிரித்தெடுத்தல் பயிற்சிக்கு ஜிக்ஸ் அண்ட் பிக்சரில் உள்ள டவல் பின் இருக்கும் இடத்தினை உபயோகிக்கலாம்.**

— — — — — — — — —

© NIMI NOT TO BE REPUBLISHED

# நேரான கோடுகள், வட்டங்கள், வளைவுகள் மற்றும் பல்வேறு வடிவியல் உருவங்களில் குறித்தல், பிறகு வெட்டும் கருவி (அ) கத்தரி (Snips) கொண்டு தகடுகளை வெட்டுதல் (Marking of straight lines, circles, profiles and various geometrical shapes and cutting the sheets with snips)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- மரச் சுத்தியல் பயன்படுத்தி தகடை சமமட்டமாக்குதல்
- பக்க இணை கோடுகள், வளைவான கோடுகள், வட்டங்கள் மற்றும் வடிவியல் உருவங்களை குறித்தல்
- ஸ்டெர்யிட் ஸ்னைப்/வெட்டுகருவி பயன்படுத்தி நேரான கோடுகளின் மேல் உலோக தகடை வெட்டவும்
- வளைவான ஸ்னைப் (Curved snipes) பயன்படுத்தி வளைவான கோடுகளின் மேல் உலோக தகடு வெட்டுதல்
- பல்வேறு வடிவியல் உருவங்கள் மேல் உலோக தகட்டினை வெட்டுதல்,.

Task 1




MARKING AND CUTTING ON STRAIGHT LINES

© NIMI NOT TO BE REPUBLISHED

| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ISSH 105 x 105 x 1.00mm | - | G.I. SHEET | - | TASK 6 | |
| 1 | ISSH 75 x 75 x 1.00mm | - | G.I. SHEET | - | TASK 5 | |
| 1 | ISSH 75 x 75 x 1.00mm | - | G.I. SHEET | - | TASK 4 | |
| 1 | ISSH 125 x 125 x 1.00mm | - | G.I. SHEET | - | TASK 3 | |
| 1 | ISSH 105 x 105 x 1.00mm | - | G.I. SHEET | - | TASK 2 | |
| 1 | ISSH 155 x 80 x 1.00mm | - | G.I. SHEET | - | TASK 1 | 1.3.42 |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | TITLE: MARKING AND CUTTING VARIOUS GEOMETRICAL SHAPES IN G.I. SHEET | DEVIATIONS ±1.00mm | TIME |
| | | CODE NO. FI20N1342E1 | |

TASK 2




**MARKING AND CUTTING ON CIRCLES**

TASK 3




**MARKING AND CUTTING ON CURVED LINES**

© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | – | - | – | – | 1.3.42 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | MARKING AND CUTTING VARIOUS GEOMETRICAL SHAPES IN G.I. SHEET | DEVIATIONS ±1mm | TIME |
| | | CODE NO. FI20N1342E2 | |

Task 4




MARKING AND CUTTING TRIANGLE

Task 5




MARKING AND CUTTING SQUARE

Task 6




MARKING AND CUTTING HEXAGON

© NIMI
NOT TO BE REPUBLISHED

| 1 | - | - | - | - | - | 1.3.42 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | TITLE: MARKING AND CUTTING VARIOUS GEOMETRICAL SHAPES IN G.I. SHEET | DEVIATIONS ±1mm | TIME |
|---|---|---|---|
| | | CODE NO. FI20N1342E3 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **நேரான கோடுகள் குறிப்பிடுதல் மற்றும் வெட்டுதல்**

அளவுகோல் பயன்படுத்தி படத்தில் உள்ளது போல உலோக தகடுன் அளவுகளை சரி பார்க்கவும்.

மரச்சுத்தியல் மற்றும் வொர்க்பென்ச் அல்லது பென்ச் ஸ்டேக்கைக் கொண்டு தகடை சமமட்டமாக செய்யவும்.

'L' சதுரம், அளவுகோல், மற்றும் ஸ்கன்ரபர் பயன்படுத்தி படத்தை போல உலோக தகடின் மேல் செவ்வகத்தை குறிப்பிடவும்.

25 மிமீ-க்கு தகடின் வெளிப்புற சுற்றளவு மேல் அளவுகோலை அமைத்தல்.

ஒவ்வொரு நீளமான பக்கத்திலிருந்து 25 மிமீ-ல் 'V' குறியீடு இரண்டு குறிக்கவும்.

'V' குறியீடுகளின் இணைத்தவாரு, 150 மிமீ-ன் முழு நீளத்திற்கு வரையவும்.

இதே போல், ஒவ்வொன்றிலிருந்து மற்றவை தூர 20 மிமீ, 15 மிமீ, 10 மிமீ மற்றும் 5 மிமீ கோடுகளை குறிக்கவும்.

இடது கை கொண்டு தகட்டினை பிடிக்கவும்.

நேரான வெட்டும் கருவி/கத்தரி பயன்படுத்தி கோட்டின் மேல் வலது கையை கொண்டு தகடினை வெட்டவும்.

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **வட்டங்கள் குறிப்பிடுதல் மற்றும் வெட்டுதல்**

அளவுகோலை பயன்படுத்தி படத்தில் உள்ளதை போல சதுர தகடின் அளவுகளை சரி பார்க்கவும்.

மரசுத்தியல் பயன்படுத்தி சமநிலைப்படுத்தும் தகடின் மேல் தகடினை சமமட்டமாக்கவும்.

படத்தில் உள்ளது போல உலோக தகடின் மேல் சதுரத்தை குறித்தல்.

சதுர தகடின் மையத்தை குறிப்பிட்டு பஞ்சிங் செய்யவும்.

சதுரத்தின் மையத்தில் Ø 12 mm ஒரேமையமுள்ள வட்டம் வரையவும்.

இதே போல், சம தூர ஆரம் கொண்டு மற்ற 7 ஒற்றை வட்டம் வரையவும்.

வளைந்த ஒரேமையமுள்ள வெட்டுக்கருவி பயன்படுத்தி வட்ட கோடுகளை வெட்டவும்.

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **வளைவுள்ள கோடுகள் குறிப்பிடுதல் மற்றும் வெட்டுதல்**

மரச்சுத்தியல் மற்றும் தகர வேலையாள் கூர் முனை பயன்படுத்தி உலோக தகடுவை சமமட்டமாக்கவும்.

அளவுகோல் பயன்படுத்தி தகடின் அளவுகளை சரி பார்க்கவும்.

அளவுகோல், நேரான விளிம்பு மற்றும் 'L' சதுரத்தை பயன்படுத்தி 100 x 100 சதுரம் குறித்தல்.

Fig 1-ல் உள்ளது போல மைய கோடு குறிக்கவும்.

'A' புள்ளி குறித்தல் மற்றும் பன்ச் (Punch) கருவி மற்றும் பந்துமுனை சுத்தியல் பயன்படுத்தி பஞ்ச்ங் செய்தல்.

'A' புள்ளியை மையமாக எடுத்தக்கொண்டு, விங் காம்பஸ்சை பயன்படுத்தி 10 மிமீ ஆரம் வளைவு கோடு குறித்தல்.

பணிப்பொருளில் வரை படத்தில் உள்ளது போல மற்ற வளைவுள்ள கோடுகளை குறிக்கவும்.

Fig 1




அளவுகோலை பயன்படுத்தி குறித்த கோடுகளை சரி பார்க்கவும்.

ஸ்டெரய்ட் ஸ்னிப் பயன்படுத்தி 1 முதல் 4 குறிப்பிட்ட வெளிபக்க வளைவுள்ள கோடுகளின் மேலே வெட்டவும். (Fig 2)

பென்ட் ஸ்னிப் பயன்படுத்தி 5 முதல் 9 குறிப்பிட்ட உட்பக்க வளைவுள்ள கோடுகளின் மேலே வெட்டவும். (Fig 2)

அளவுகோலை பயன்படுத்தி வெட்டிய துண்டுகளின் அளவுகளை சரி பார்த்தல்.

மரச் சுத்தியல் கொண்டு ஏன்வில் ஸ்டேக் மேல் தகடை சமமட்டமாக்கவும்.

அளவுகோலின் விளிம்பு கொண்டு மேற்பரப்பு மட்டத் தன்மையை சரி பார்க்கவும்.

Fig 2




— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **முக்கோண வடிவினை குறிப்பிட்டு மற்றும் வெட்டுதல்**

அளவுகோலை பயன்படுத்தி படத்தை போல தகடின் அளவுகளை சரி பார்க்கவும்.

மரசுத்தியல் பயன்படுத்தி பென்ச் ஸ்டேக் மேல் வைத்து தகடை சமமட்டமாக்கவும்.

பிரி பஞ்ச் கொண்டு தகடின் மையத்தை பஞ்சிங் செய்யவும்.

தகடுடின் மேல் டிவைடர் பயன்படுத்தி Ø 65 mm வட்டத்தை வரைதல்.

பிரிக் பன்ச்சை கொண்டு வட்டத்தின் சுற்றளவின் மேல் புள்ளியை பதிய வைக்கவும்.

சம பக்க முக்கோணத்தின் பக்கத்திற்கு சமமாக மூன்று வளைவுகள் குறித்து பிறகு கோடுகளை வரைந்து வளைவுகளை இணைக்கவும்.

ஸ்டெர்ய்ட் ஸ்னிப் பயன்படுத்தி குறிக்கப்பட்ட கோடுகளின் மேலே வெட்டவும்.

அளவுகோல் கொண்டு முக்கோணத்தின் அளவினை சரி பார்க்கவும்.

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 5: **சதுரத்தினை குறிக்கப்பட்டு மற்றும் வெட்டுதல்**

அளவுகோலை பயன்படுத்தி படத்தில் உள்ளது போல தகடின் அளவுகளை சரி பார்த்தல்.

மைய கோடுகளை குறிக்கவும்.

பிரிப் பன்ஞ்ச்சைனைக் கொண்டு தகடுவின் மையத்தை புள்ளியிடவும்.

புள்ளி 'O'-வில் தகடுவின் மேல் டிவைடர் பயன்படுத்தி Ø 60 mm வட்டத்தை வரையவும்.

புள்ளி A, B, C, D இணைத்து பிறகு உள் வரைவது சதுரமாகும்.

ஸ்டெர்ய்ட் ஸ்னிப் (Stright snip) பயன்படுத்தி குறிக்கப்பட்ட கோடுகளின் மேல் வெட்டவும்.

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 6: **அறுங்கோணம் குறிப்பிட்டு பிறகு வெட்டுதல்**

அளவுகோலை பயன்படுத்தி படத்தை போல தகடின் அளவுவை சரி பார்க்கவும்.

சமநிலைப்படுத்தும் ப்ளேடின் மேல் தகடை சமமட்டமாக்கவும்

மைய கோடுகள் குறிப்பிடுதல்.

தகடின் 'O' புள்ளியை மையமாக புள்ளியிடவும்.

Ø 90 மிமீ வட்டம் வரையவும்.

சுற்றளவின் மேல் வளைவுகள், வட்டத்தின் ஆரத்தை சமமாக கொண்டு ஒவ்வொரு வரைவும் வரைதல்.

A, B, C, D, E & F புள்ளிகளை இணைக்கவும் மற்றும் அறுங்கோணத்தை நிர்மானித்தல்.

ஸ்டெரெய்ட் ஸ்னிப் பயன்படுத்தி குறிக்கப்பட்ட கோடுகளினூடே வெட்டவும்.



©NIMI NOT TO BE REPUBLISHED

## திறன் வரிசை (Skill sequence)

## உலோக தகடை சமதளமாக்குதல் (Flattening the sheet metal)

**நோக்கம்:** இது உங்களுக்கு உதவுவது
- **பல்வேறு அளவுகளில் உலோக தகடுகளை சமதளமாக்குதல்.**

ஆன்வில்லின் (Anvil) கூர்முனை தளம் மற்றும் செய்பொருளை சுத்தம் செய்தல்.

கூர்முனை (Anvil) தளத்தின் உச்சியில் பணிப்பொருளை அமைத்தல். (Fig 1)

Fig 1




உலோக தகடின் அளவு, தளத்தின் முகத்தைவிட சிரியது எனில் (stake face)- ன் மத்திய பகுதியில் எங்கேயாவது தகடை அமைக்கவும். (Fig 2)

Fig 2




தகடின் அளவு வேலையாள் கூர்முனை தளத்தின் முகத்தைவிட பெரியதாகிறது எனில், ஸ்டேக் முகத்தின் மையத்தில் தகடுவின் விளிம்பினை அமைத்தல்.

தகடின் முழு மேற்பரப்பு சமமட்டமாகிற வரை முன்புறமிருந்து பின்புறம் மற்றும் பின்புறமிருந்து முன்புறம் மரசுத்தியல் கொண்டு தகடினை அடிக்கவும். (Fig 3)

Fig 3




அளவுகோலின் விளிம்பை கொண்டு உலோக தகடின் சமமட்டத் தன்மையை சரி பார்க்கவும். சமமட்டத் தன்மை சரி பார்த்தலின் போது, தகடின் மேற்பரப்பின் மேல் அளவுகோலின் விளிம்பை வைத்து பிறகு அளவுகோல் விளிம்பு மற்றும் உலோக தகடுவின் மேற்பரப்பினிடையே இடைவெளியை கவனிக்கவும். (Fig 4)

Fig 4




எந்த ஒரு இடைவெளியும் ,இல்லாவிட்டால் பிறகு தகடு சரியான சமமட்டமாயிருக்கிறது.

இடைவெளி இருக்கிறது எனில், பிறகு தகடு இடைவெளியின் புள்ளிகளில் சமமட்டமாயில்லாதிருக்கிறது.

இடைவெளி இருப்பின் இடைவெளியின் புள்ளிகளின் மேற்பரப்புகளை சமமட்டமாக்கவும்.

## உலோக தகடினை அளவிடுதல் மற்றும் குறிப்பிடுதல் (Measuring and marking the sheet metal)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது

- **அளவுகோலை பயன்படுத்தி உலோக தகடுடின் நேர்க்கோட்டுஅளவுகளை அளவிடுதல்**
- **அளவுகோல், ஸ்டெரெய்ட் எட்ஜ் மற்றும் ஸ்கிரைபர் பயன்படுத்தி பக்க இணை கோடுகள் குறிப்பிடுதல்.**

### அளவிடுதல் (Measuring)

– பழைய துணியை பயன்படுத்தி அளவுகோலின் விளிம்புகளை சுத்தம் செய்யவும்.

– ஸ்டீல் ரூலின்அளவுகள் உள்ள பக்கத்தை பணிப்பொருளின் விளிம்பிற்கு அல்லது கோடுகளுக்கு செங்குத்தாக வைக்கவும். (Fig 1)

Fig 1




– அளவுகோல் மேல் பெரிதான அளவீடு செய்த கோட்டை (சென்டிமீட்டர் கோடு) கொண்டு ஒரு கோடினை சரியாக பொருத்தவும்.

– இதுவே குறிப்பிடு அளவு எனக்கொண்டு, தூரம் சரி பார்க்கச் செய்ய வேண்டியிருக்கிற தினிடையே கோடு/விளிம்பினை கொண்டு சரியாக ஒத்திருத்தல் அளவுகோலின் (reverse dimension) மேல் அளவுகளை குறிக்கவும்.

– இரண்டு கோடுகளினிடையே தூரத்தை கண்டு பிடிக்கவும். உதாரணத்திற்கு, 50 மிமீ குறிப்பிடு அளவாகிறது எனில் சரி பார்க்கச் செய்ய வேண்டியிருக்கிற தூரத்தினிடையே உள்ள கோட்டினைக்கொண்டு சரியாக ஒத்திருத்தலின் அளவு 100 மிமீ என்பது, பிறகு 100 - 50 = 50 மிமீ இரண்டு கோடுகளினிடையே தூரமாகிறது.

### தகடின் மேல் நேரான கோட்டினை குறித்தல் (Mark a straight line on the sheet)

அளவுகோல் மற்றும் வரைவினை (scriber) பயன்படுத்தி, அளவீடுகளுக்கு, தேவையான தூரத்தில் "XX" அடிப்படையாக கொண்டதிலிருந்து இரண்டு "V" குறித்தல் குறிக்கவும். "YY" அடிப்படையிற்கு சரியான கோணத்தில் "XX" அடித்தளம் இருக்கவும். (Fig 2)

Fig 2




"V" குறிகளிற்கு இடையே நேரான விளிம்பினை அமைக்கவும், மற்றும் உங்களுடைய விரல்கள் கொண்டு நேரான விளிம்பினை அழுத்தவும். (Fig 3)

Fig 3




கோடுகள் வரைதலின்போது, Fig 4-ல் உள்ளவாறு நேரான விளிம்பிற்கு அருகாமையில் வரைவியை (scriber) பிடிக்கவும்.

Fig 4




Fig 5-ல் உள்ளது போல ஏறக்குறைய $45^{o}$-ன் கோணத்தில் வரைவியை சாய்க்கவும். பிறகு நேரான விளிம்பின் விளிம்பினூடே உங்களை நோக்கி கோட்டை வரையவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

Fig 5



FI20N1342J5

ஸ்கிரைபரை சாய்க்கும் போது உங்களுக்கு எதிர்புறம் இருக்கிறது எனில், இது தகடிற்கு சேதம் ஏற்படுத்தும் பிறகு உலோகத்தின் உச்ச/ மேலடுக்கனை நீக்கிவிடும்.

உலோகத்தின் நீக்குதலை தவிற்பதற்கு வரைவியை பயன்படுத்தி கோடுகள் வரைதலின் போது மிதமிஞ்சிய அழுத்தம் தரக் கூடாது. (Fig 6)

Fig 6



FI20N1342J6

கோடு 'AB', ஆனது 'XX' அடித்தள கோட்டிற்கு பக்க இணை கோடு ஆகிறது. (Fig 7)

Fig 7



FI20N1342J7

**பொருளாதார குறிப்பிடுதலை செய்ய (For economical marking)**

**வீணாக்குவது தவிர்பதற்கு, எப்போதும் Fig 8-ல் உள்ளது போல இடது கை அடிப்புற முனையிலிருந்து கோடுகள் வரையவும். ஆனால் Fig 9-யை போல் அல்ல.**

Fig 8



FI20N1342J8

Fig 9



FI20N1342J9

**பணிப்பொருள் படத்தில் உள்ளது போல அளவுகளுக்கு ஏற்ப படம் 10-யை போல பக்க இணை கோடுகள் வரையவும். (பயிற்சி / பணி 4, பயிற்சி எண் 1.3.42-ன் செய்முறை விளக்கத்தில் ஆலோசிக்கவும்)**

Fig 10




FI20N1342JA

## விங் காம்பஸ் கொண்டு குறிப்பிடுதல் (Marking with wing compass)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது
- **விங் காம்பஸில் தேவையான அளவுகளை அமைத்தல்**
- **விங் காம்பஸை கொண்டு வட்டங்கள் மற்றும் வளைவுகள் வரைதல்.**

**விங் காம்பஸ் (Wing compass)**

காம்பஸின் கால்கள் ஒரே நீளத்தில் சம அளவில் இருப்பதை சரி பார்க்கவும். (Fig 1)

**இல்லையெனில், விங்காம்பஸின் தாடை / Leg ன் கூர்மை ஓர் ஆயில் கல் கொண்டு காம்பஸின் காலினை சாணை செய்து, கூர்மையாக்கவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 1




குறிக்கப்பட்ட (Marked lines) கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டும் இடத்தில் பஞ்ச் செய்யவும் . (Fig 2)

Fig 2




**ஒரு சிறிய புள்ளி மட்டும் காம்பஸ் நழுவாமல் இருக்க தேவைப்படுகிறது.**

சிறிய நீளங்களுக்கு, விங் திருகு நட்டை தளர்த்தி, பிறகு காம்பஸை திறந்து மேலும் சரி செய்தலுக்கு உங்களுடைய வலது கை கொண்டு நெருக்கி பிறகு அளவுகோலின் மேல் வைத்து தேவையான நீளத்தை பொருத்தவும். (Fig 3)

Fig 3




**காம்பஸின் அளவை சரி செய்வதற்கு ஸ்டீல் ரூலின் மைய பகுதியில் உள்ள அளவீடுகளை பயன்படுத்தவும், ஓரங்களில் உள்ள அளவு கோடுகளை தவிர்க்கவும்**

பெரிய நீளங்களுக்கு, வொர்க் டேபிளின் மேல் அளவுகோலை அமைத்து மற்றும் காம்பஸ் திறத்தலை சரி செய்து அளவுகோலின் இரண்டு முனைகளிலும் அளவு எடுக்கவும்.

மிகச் சிறிய அளவு கால்களைஅருகில் கொண்டு வருவதற்கு, லேசாக காலின் வெளிப் பக்கத்தை தட்டவும்.

காம்பஸை சிறிய அளவு திறப்பதற்கு, தலை கீழாக காம்பஸை திருப்பி பிறகு தலையை லேசாக தட்டவும். (Fig 4)

Fig 4




அளவுகளை அமைத்த பிறகு, விங் திருகு நட்டை பயன்படுத்தி கால்களை லாக் செய்த பின்பு மீண்டும் அளவுகளை சரி பார்க்கவும்.

வட்டத்தின் மையத்திலிருந்து காம்பஸ் முனை நழுவுதலை தவிற்பதற்கு உங்களுடைய உள்ளங்கையை கொண்டு காம்பஸின் தலையை பகுதியை பிடிக்கவும்.

விங் திருகு நட்டை அழுத்தக் கூடாது.

கட்டை விரல் அழுத்திக் கொண்டு வலமிருந்து இடது பக்கத்திலிருந்து ஓர் மேலான அரை வட்டம் வரைதல். (Fig 5)

காம்பஸின் மேல் கட்டை விரல் அமைப்புவை மாற்றி, இடமிருந்து வட்டத்தின் மீதியை வரையவும். (Fig 6)

## ஒற்றை ரிவிட் செய்த லேப் இணைப்பிற்கும் ரிவிட் துளைகளுக்கும் இடைவெளியை அமைத்திடுதல் (Layout the spacing for rivet holes to make a single riveted lap joint)

நோக்கங்கள்: இது உங்களுக்கு உதவுவது
- **லேப்பின் தூரத்தை, கணக்கிடுதல் முதல் ரிவிட்டின் மையத்திலிருந்து விளிம்புகள் வரை தூரம் மற்றும் BIS தரத்தின் கீழ் பிட்ச்சின் தூரம் கணக்கிடவும்.**
- **ஒற்றை ரிவிட் செய்த லேப் இணைப்பை உருவாக்குவதற்கு ரிவிட் துளைகளின் இடைவெளியை அமைத்திடுதல்.**

இணைக்க வேண்டிய பணிப்பொருளின் விளிம்புகளில் தேவையில்லாத பிசிறுகள் இல்லாமல் நேராக இருப்பதை உறுதிபடுத்தவும்.

லேப்பின் தூரத்தை கணக்கிடவும்.

லேப்பின் தூரம் = 4 x ரிவிட்டின் விட்டம் (D)

தெரிந்த பருமனிலிருந்து ரிவிட்டின் விட்டம் = 2.5 (அ) 3t, ரிவிட்டின் விட்டத்தினை கணக்கிடவும், மற்றும் லேப்பின் தூரத்தினை கணக்கிடவும்.

ஒரு ஸ்க்ரைபர் மற்றும் ஒரு அளவுகோல் பயன்படுத்தி இரண்டு பணிப்பொருளின் மேல் விளிம்பிற்கு பக்க இணையாக லேப்பின் தூரத்தின் கோடை குறிக்கவும். (Fig 1)

Fig 1




தகடின் விளிம்பிலிருந்து ரிவிட் கோட்டின் தூரத்தை கணக்கிடவும்.

விளிம்பிலிருந்து ரிவிட்டின் தூரம் = 2 x ரிவிட்டின் விட்டம் (D)

இரண்டு பணிப்பொருளின் மேல் விளிம்பிற்கு பக்க இணை ரிவிட் கோடுகளை குறிக்கவும். (Fig 2)

Fig 2




பக்க விளிம்பினிலிருந்து முதல் ரிவிட்டின் தூரத்தை கணக்கிடவும்.

விளிம்பினிலிருந்து முதல் ரிவிட்டின் தூரம் = 2 x ரிவிட்டின் விட்டம் (D)

பகுப்பான் பயன்படுத்தி இரண்டு பணிப்பொருளின் மேல், ரிவிட் கோடுட்டின் பக்க விளிம்புகளினிருந்து முதல் ரிவிட்களின் தூரத்தை குறிக்கவும்.

பிட்ச் அதாவது இரண்டு ரிவிட்களினிடையே தூரத்தை கணக்கிடவும்.

பிட்ச் = 3 x ரிவிட்டின் விட்டம் (D)

ஒரு டிவைடர் பயன்படுத்தி இரண்டு பணிப்பொருள் மேல் ரிவிட் கோடுகளில் பிட்சை குறித்தல். (Fig 2)

சென்டர் பஞ்ச் மற்றும் பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி ரிவிட்களின்மைய புள்ளிகளின் மேல் துளையிடவும்.

## ஸ்னாப் தலை ரிவிட்டை ரிவிட்டிங் செய்தல் (Riveting snap head rivet)

நோக்கங்கள்: இது உங்களுக்கு உதவுவது
- **சரியான ரிவிட் செய்தல் உருவாக்குதலுக்கு டாலி, ரிவிட் செட், மற்றும் ரிவிட் ஸ்னாபின் சரியாக பயன்படுத்துதல்**
- **பால்பீன் சுத்தியலை கொண்டு சரியாக அடிப்பதன் மூலம் உருளை வடிவத்தில் ரிவிட் தலையை உருவாக்குதல்**
- **அடித்தள உலோகம் பாதிக்காமல் இறுக்கமாக ரிவிட் செய்த இணைப்பை உருவாக்குவதற்கு ஸ்னாப் தலை ரிவிட்டை ரிவிட் செய்தல்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

ரிவெட் துளைகள் அனைத்தும் ஒரே தக◌டின் மேல் டிரில் செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும், ஒரு துளை மட்டும் மற்றொரு தகடில் இருக்குமாறு அமைக்கவும்.

ட்ரில்லிங் துளைகளில் தேவையில்லாத பிசிறுகளை நீக்க மற்றும் தகடு சமமட்டமாகிறதை உறுதி செய்யவும்.

பெஞ்ச் வைஸில் உறுதியாக டோலியை பிடிக்கவும்.

அனைத்து துளைகள் துளையிட்ட தகடின், மேல் மற்றெ◌ாரு தகடை வைத்து துளையிட்ட துளையை நேர் செய்து, விளிம்புகளை லேப்பிற்கு மார்க் செய்த கோடுகளை அலைன் செய்யவும்.

மைய துளையில் ரிவிட்டை உட்சொருகவும் மற்றும் மடிக்கும் போது விலகி செல்வதை தவிர்க்க இடுக்கி டாலியின் மேல் ரிவிட் தலையை அமைத்தல். (Figs 1&2)

Fig 1




Fig 2




ரிவெட் செட்டிங் தண்டின் மேல் ரிவெட் செட்டில் ஆன துளையை வைக்கவும் (Fig 3)

ரிவிட் செய்வதற்கு உறுதியாக இணைப்பு அமைப்பதற்கு, அருகாமையில் தகடுகளை கொண்டு வருதலுக்கு குண்டுதலை சுத்தியலை கொண்டு அமைத்த ரிவிட்டை அடித்தல். (Fig 3)

ரிவிட்டின் தண்டுவின் மேல் அமைத்த ரிவெட் செட்டை நீக்கவும்.

பால்பீன் சுத்தியலை கொண்டு சீட்டின் நெருக்கத்தில், ரிவெட் செட்டை அடித்து இறுக்கமாக செய்யவும். (Figs 4&5)

Fig 3




Fig 4




Fig 5




ரிவிட்டின் உருளை தலையின் மேல் ரிவிட் ஸ்னாப்பை அமைத்து, சுத்தியை கொண்டு அடிக்கவும். பிறகு பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி ரிவிட் தலையை நிறைவு செய்யவும். (Fig 6)

Fig 6




©NIMI NOT TO BE REPUBLISHED

## ஒற்றை ஸ்ட்ராப் ஒற்றை ரிவிட் செய்த பக்க இணைப்பை உருவாக்க ரிவிட் துளைகளுக்கு இடைவெளியை அமைத்திடுதல் (Layout the spacing for rivet holes to make single strap single riveted butt joint)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது
- **மூடி தகடின் அகலம், முதல் ரிவிட் மற்றும் விளிம்புகளின் மையத்தினிடையே உள்ள தூரம் மற்றும் BIS தர நிலைக்கு ஏற்ப பிட்ச்சின் தூரம் கணக்கிடவும்**
- **ஒற்றை பட்டை ஒற்றை வரிசை ரிவிட் செய்ய பக்க இணைப்பு உருவாக்குவதற்கு ரிவிட் துளைகளுக்கு தேவையான இடைவெளியை அமைத்திடுதல்.**

இணைக்கச் செய்ய வேண்டிய பணிப்பொருளின் விளிம்புகளை ஏதாவது பிசிறு இல்லாது மற்றும் நேராக இருக்கிறது என்பதை உறுதிபடுத்தவும். முதலில் இணைக்க வேண்டிய பணிப்பொருளின் மேல் ரிவிட் துளைகளின் இடைவெளியை அமைத்திடவும்.

ரிவிட்டின் விட்டத்தை கணக்கிடவும்.

ரிவிட்டின் விட்டம் (D) = 2.5 T (அ) 3T, இதில், T = இணைக்க வேண்டிய தகடுகளின் மொத்த பருமன்.

லேப் / தூரத்தை கணக்கிடவும்.

லேப்பின் தூரம் = 8 x D

ஒரு ஸ்க்ரைபர் மற்றும் அளவுகோலை பயன்படுத்தி இரண்டு பணிப்பொருளின் மேலும் லேப் தூரக் கோட்டை மார்க் செய்யவும். (Fig 1)

Fig 1




தகடின் விளிம்பினிலிருந்து ரிவிட் கோட்டின் தூரத்தை கணக்கிடவும்.

விளிம்பினிலிருந்து ரிவிட் கோட்டின் தூரம் = 2 x ரிவிட்டின் விட்டம் (D)

பணிப்பொருளின் மேல் விளிம்பிற்கு பக்க இணை ரிவிட் கோடுகளை குறிக்கவும். (Fig 1)

பட்டின் பக்க விளிம்புவிலிருந்து முதல் ரிவிட்டின் தூரத்தை கணக்கிடவும்.

பக்க விளிம்பினிலிருந்து முதல் ரிவிட்டின் தூரம் = 2 x ரிவிட்டின் விட்டம் (D)

பணிப்பொருளின் மேல் ரிவிட் கோட்டின் பக்க விளிம்பினிலிருந்து முதல் ரிவிட்களின் தூரத்தை குறிக்கவும்.

இரண்டு ரிவிட்களினிடையே தூரத்தை கணக்கிடவும், அதுவே பிட்ச்.

பிட்ச் = 3 x ரிவிட்டின் விட்டம்

டிவைடரை பயன்படுத்தி பணிப்பொருளில் ரிவிட் கோடுகளின் மேல் ரிவிட்டின் பிட்ச்சை குறிக்கவும். (Fig 1)

சென்டர் பஞ்ச் மற்றும் பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி ரிவிட்களின் மைய புள்ளியின் மேல் துளையிடவும்.

கத்திரி மேல் ரிவிட் துளைகின் இடைவெளியை அமைத்திடவும்.

### ஸ்டாரப் ரிவிட் துளைகளின் இடைவெளி களை அமைத்திடுதல் (Layout the spacing of rivet holes on strap)

மேலே குறிப்பிட்ட Fig 2-ல் பட்டை மேல் 4D தூரத்தில் ரிவிட் துளைகளின் இரண்டு வரிசையை காட்டுதல்.

Fig 2



## புனல் உருவாக்குதல் மற்றும் இணைப்புகளை சால்டர் செய்தல் (Make funnel as per development and solder joints)

**நோக்கம்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- நேரான கம்பி விளிம்பை உருவாக்குதல்
- வளைவான கம்பி விளிம்பை உருவாக்குதல்
- ஆங்கிலை பயன்படுத்தி உலோக தகடை மடித்தல்.



© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| – | – | – | SOFT SOLDER 60:40 | - | – | - |
| 1 | Ø2 - 360 | – | G.I WIRE | - | – | - |
| 1 | ISSH 160 x 25 x 0.5 | – | G.I SHEET | - | 4 | - |
| 1 | ISSH 335 x 30 x 0.5 | | – | - | 3 | - |
| 1 | ISSH 125 x 80 x 0.5 | | TINNED SHEET | - | 2 | - |
| 1 | ISSH 250 x 140 x 0.5 | | TINNED SHEET | - | 1 | 1.353 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | |
|---|---|---|
| SCALE: NTS | **MAKE A FUNNEL**<br>(BY SOLDERING) | DEVIATIONS ±1   TIME : |
| | PROJECT: FUNNEL   PART: **1, 2, 3 & 4** | CODE NO. FI20N1353E1 |

TASK-1




TASK-3




TASK-2




TASK-4






© NIMI
NOT TO BE REPUBLISHED

| - | – | – | - | - | - | 1.3.53 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:2 | **MAKE A FUNNEL**<br>(SEAMING THE BODY AND THE TAIL) | DEVIATIONS ±1 | TIME |
|---|---|---|---|
| | PROJECT: FUNNEL PART: **1. BODY 2. TAIL** | CODE NO. FI20N1353E2 | |






© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| - | - | - | - | - | - | 1.3.53 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:2 | **MAKING A FUNNEL** (BODY PATTERN CUTTING) | DEVIATIONS ±1 | TIME |
| | PROJECT: FUNNEL PART: **BODY** | CODE NO. FI20N1348E5 | |




TASK-5






© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| - | - | | - | - | - | - |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | **MAKING A FUNNEL**<br>(TAIL PATTERN CUTTING) | DEVIATIONS ±1 | TIME : |
| | PROJECT: FUNNEL PART: **TAIL** | CODE NO. FI20N1348E6 | |

## வேலையின் வரிசை (Job sequence)

**செய்ய வேண்டிய வேலை 1: புனலை உருவாக்குதல் பகுதி 1 (புனல் உடல் பகுதி)**

கொடுக்கப்பட்ட படத்தில் உள்ளதைப் போல வெற்று தாளில் வடிவியல் உபகரணங்களை பயன்படுத்தி அனுமதிக்கப்பட்ட அளவுகளுடன் புனல் மாதிரி வரைந்து உருவாக்கம் செய்யவும்.

கத்தரிக்கோல் பயன்படுத்தி வெள்ளை தாளில் வரைந்த மாதிரியின் அளவை வெட்டி எடுத்து கொடுக்கப்பட்டுள்ள உலோகத்தகட்டின் மீது பசையை கொண்டு ஒட்டவும்.

மாதிரியில் உள்ளவாறு உலோகத் தகட்டினை நேரான மற்றும் வளைந்த கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டி நிறைவு செய்யவும்.

— — — — — — — — —

**செய்ய வேண்டிய வேலை 2: புனலின் அடிப்பகுதி உருவாக்குதல்**

கொடுக்கப்பட்ட படத்தில் உள்ளவாகறு வெள்ளை தாளில் புனலின் அடிப்பகுதியை அனுமதிக்கப்பட்ட அளவுகளுடன், வடிவியல் உபகரணங்களை பயன்படுத்தி மாதிரி வரைந்து உருவாக்கம் செய்யவும்.

கத்தரிக்கோல் பயன்படுத்தி வெள்ளை தாளில் வரைந்த மாதிரியின் அளவை வெட்டி எடுத்து கொடுக்கப்பட்ட உலோகத் தகட்டின் மீது பசையை கொண்டு ஒட்டவும்.

மாதிரியில் உள்ளவாறு உலோகத் தகட்டினை நேரான மற்றும் வளைந்த கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டி நிறைவு செய்யவும்.

— — — — — — — — —

**செய்ய வேண்டிய வேலை 3: புனல் உலோகத் தகட்டினை வளைத்தல்**

- 335 x 30 மிமீ அளவிற்கு உலோக தகட்டினை வெட்டவும். இதனை மரச்சுத்தியல் கொண்டு சமமட்டமாக்கவும் பிறகு அதன் விளிம்புகளில் உள்ள பிசிறுகளை நீக்கவும்.
- உருளை உருவாக்கத்திற்கான திறன் வரிசை 1.3.43 ஐ கருத்தில் கொள்ளவும்.
- உலோக தகட்டினை அனுமதியளிக்கப்பட்ட கம்பி விளிம்பின் அளவான 2 மி.மீ விட்டத்தையும் கணக்கில் கொண்டு மாதிரியை உருவாக்கம் செய்யவும். மேலும் சிமிங் செயல்முறைக்கான 4 மிமீ லாக்கு குருவ் இணைப்பையும் சேர்த்து உலோக தகட்டினை கத்தரிக்கோல் கொண்டு வெட்டவும்.
- உருளை வடிவில் உலோகத்தகட்டினை, வட்ட வடிவ மேன்டிரில் ஸ்டேக், ஹேண்டு குருவர், பால் பீன் சுத்தியல் மற்றும் மரச்சுத்தியல் கொண்டு வளைக்கவும்.
- 2 மி.மீ விட்டமுள்ள கம்பியை அதன் விளிம்பில் வைத்து அரை வட்ட ஸ்டேக் மற்றும் அமைப்பு சுத்தியல் கொண்டு வட்ட வடிவில் வளைக்கவும்.
- சரியான முறையில் டிரெஸ்ஸிங் (Dress) செய்து அளவுகளை சரிபார்க்கவும்.

— — — — — — — — —

**செய்ய வேண்டிய வேலை 4 புனலின் கைப்பிடி உருவாக்குதல்**

- படம் 1ல் காட்டியுள்ளவாறு புனலின் கைப்பிடியை ஸ்டேக் மற்றும் மரசுத்தியல் கொண்டு உருவாக்கவும்.
- நிறைவு செய்து முடிக்கப்பட்ட உலோகத்தகட்டின் பாகங்களின் விளிம்புகள் சரியாக உள்ளனவா என சரிபார்க்கவும், பிசிறுகள் ஏதேனும் இருப்பின் அதனை வெட்டி சரிசெய்யவும்.
- குளிர்ந்த நீரினால் பொருளினை பாகங்களை சுத்தம் செய்யவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

- **Assembly funnel :** புனலினை கோர்த்திணைத்தல்

Fig 1




செய்ய வேண்டிய வேலை 5: **உலோகத் தகட்டினை 90° ல் வளைத்தல் மடித்தல்**

- ஸ்ட்ரைட் ஸ்னிப் கொண்டு 135 x 48 மிமீ உலோக தகட்டினை வெட்டவும்.
- ஸ்கிரைபர் பயன்படுத்தி பணிப்பொருளில் ஸ்டீல் ரூல் கொண்டு (Fig 1ல்) உள்ளவாறு மார்க் செய்யவும்.

Fig 1




- மடி கோட்டை 90° ல் குறிக்கவும்.
- ஹேட்செட் ஸ்டேக் பயன்படுத்தி நிலையான புள்ளியில் குறியீட்டிற்கு ஏற்றவாறு செய்யவும்.
- மரசுத்தியல் பயன்படுத்தி உலோகத் தகட்டினை அடித்து 90° ல் மடிக்கவும்.
- பணிப்பொருளின் செங்குத்து தன்மையை Trysquare மூலம் சோதிக்கவும்.
- தேவை ஏற்படின் மரச்சுத்தியல் ஹேட்செட் ஸ்டேக் பயன்படுத்தி மீண்டும் செய்யவும்.

## திறன் வரிசை (Job sequence)

## வட்ட வடிவ கூம்பின் உருவாக்கம் Development for a circular cone

நோக்கம்: இது உங்களுக்கு உதவுவது

- **ரேடியல் லைன் உருவாக்க முறையில் வட்ட வடிவ கூம்பினை உருவாக்கம் செய்தல்.**

**ரேடியல் லைன் உருவாக்க முறையில் வட்ட வடிவ கூம்பினை உருவாக்கம் செய்தல் (Fig 1)**

Fig 1




**கூம்பு வடிவ வட்டகம் Circular cone**

இதனுதடைய முன் வெட்டுத் தோற்றம் மற்றும் மேல்பக்க தோற்றம் ஆகியவற்றை வரையவும். (Fig 2)

Fig 2




- மேல் பக்க தோற்றத்தினை வரையும் போது, இதன் நியூட்ரல் பிளேனின் அடிப்படை சர்கிளின் வெளிவிட்டத்தை கணக்கில் கொள்ளவும்.
- பிளேட்டின் தடிமன் 0.5 மிமீ க்கும் குறைவானது எனில் நியூட்ரல் பிளேனின் விட்டுவிடலாம் கணக்கில் கொள்ள தேவையில்லை.
- சுற்றளவினை சமமான 12 பகுதிகளாக பிரிக்கவும் (Fig 3)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 3




- வட்டத்தின் ஆர அளவை பயன்படுத்தி அதன் விளிம்பில் சுற்றளவை சமமான 6 பாகங்களாக பிரிக்கவும்.
- ஒவ்வொரு பகுதியையும் இரண்டு பாகங்களாக பிரிக்கவும்.
- பணிப்பொருளின் மீது செங்குத்து கோட்டினை படத்தில் உள்ளவாறு வரையவும் (Fig 4)

Fig 4




- இச்செங்குத்துக் கோட்டினை மெட்டீரியலின் மையப்பகுதியில் வரையவும்.
- இதனுடைய நீளத்தை மாற்றி காம்பஸ் உதவியுடன் முடிவுபெறும் கோட்டினை வரையவும். (Fig 5)

Fig 5




- துல்லியமாக அதனை மாற்றவும்.
- மத்திய மையப் புள்ளியை மையமாக வைத்து அதன் உயரத்திற்கு ஆர்க் வெட்டவும் மற்றும் அதன் சாய் உயரத்தை இணைக்கவும். (Fig 6)

Fig 6




- ஒவ்வொரு பிரிவு டிவைடரைப் பயன்படுத்தி செய்யும் போது, கரு கால்களுக்கு இடையே உள்ள தூரத்தை பரிசோதிக்கவும். அவ்வாறு வரையும் போது தவறுகள் குறைக்கப்படும்.
- சுற்றளவின் நீளத்தை சரிசமமாக 12 புள்ளிகளாக / பகுதிகளாக காம்பஸ் பயன்படுத்தி பிரிக்கவும்.
- 12 புள்ளிகளையும் ஆர்க் கொண்டு வெட்ட செய்யவும்.
- ஸ்கிரைபயர் பயன்படுத்தி இடது மற்றும் வலது புறமாக 6 பாகங்கள் பிரிக்கவும் (Fig 7ல் உள்ளவாறு)

Fig 7




- ஏற்கனவே காம்பஸ் மூலம் குறிக்கப்பட்ட புள்ளிகளைப் பயன்படுத்தி ஆர்க் வெட்டவும்.
- மையத்திலிருந்து இடது மற்றும் வலதுபுற ஆர்க்களை மையப் புள்ளியுடன் உள்ளவாறு இணைக்கவும் (Fig 8)
- கூம்பு வடிவத்தில் உருவாக்கம் ஆனது Fig 8 ல் உள்ளவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

Fig 8




© NIMI NOT TO BE REPUBLISHED

# ரேடியல் லைன் முறையில் கூம்பின் ஒரு துண்டில் மாதிரியை வரைந்து உருவாக்கம் செய்தல் (Develop and layout the pattern for the frustum of a cone by radial line method)

நோக்கம் இது உங்களுக்கு உதவுவது

- **ஒரு துண்டின் மூலம் கூம்பு வடிவ மாதிரியை ரேடியல் லைன் முறையில் உருவாக்கம் செய்யவும்.**

- ஒரு வெற்று வரைபடத்தாளை பெற்று அதில் படத்தினை வரையும் அளவிற்கு அதனை சமமட்டப்படுத்தவும்.
- ஒரு கூம்புத் துண்டின் உயர அளவிற்கு மாதிரியின் அளவை படம் 1ல் உள்ளவாறு AGMN வரையவும்.
- இதன் புள்ளிகளை O என்ற புள்ளியை வெட்டும் வரை அதன் கோடுகளை இணைக்கவும். O என்ற புள்ளிஅபெக்ஸ் என அழைக்கப்படுகிறது. (Fig 1)

Fig 1




- O ஐ மையமாகவும் அதன் அளவை ஆர அளவாகவும் கொண்டு AG க்கு ஒரு அரைவட்டம் வரையவும். இதனை 6 சமபாகங்களாக Fig 2ல் உள்ளவாறு பிரிக்கவும்.

Fig 2




- O வை மையமாகக் கொண்டு AX மற்றும் Ny. X மற்றும் Y ஆனது கூம்பின் மையக்கோட்டு பகுதியாகும். (படம் 3)
- X ன் நீளத்தை அளந்து 12 சரிசமமான நீளத்திற்கு ஆர்க் AX வரையவும். பிறகு X தூரத்தை பயன்படுத்தி $A^1$-$B^1$-$C^1$-$D^1$ ... to $D^2$-$C^2$-$B^2$...$A^2$ படம் 3
- $A^1$, $B^1$, $C^1$, புள்ளிகளை இணைக்கவும், இதேபோல் $C^2$, $B^2$,$A^2$ புள்ளிகளை O உடன் இணைக்கவும்.
- இதனை $A^1 A^2 N^1 N^2$ ற்கு விரிவாக்கம் செய்யவும்.

Fig 3




- இந்த மாதிரியானது கூம்பின் ஒரு துண்டின் அளவானது அனுமதிக்கப்பட்ட அளவை தவிர்த்து பெறப்பட்ட மாதிரியாகும்.
- பிறகு இணைக்கும் அனுமதி அளவை சேர்த்து 'a' மற்றும் 'b' யை கோட்டிற்கு இணையாக $A^1$ $N^1$ மற்றும் $A^2$ $N^2$ (Fig 4ல் உள்ளவாறு)

Fig 4




**பகுதி 1 Body தோற்றம்**

- கொடுக்கப்பட்டுள்ள உலோக தகட்டினை மரச்சுத்தியல் மற்றும் டின் மான்ஸ் ஆன்வில் ஸ்டேக் பயன்படுத்தி (படம் 5ல் உள்ளவாறு சமமட்டமாக்கவும்.

Fig 5




© NIMI NOT TO BE REPUBLISHED

- அனுமதியளிக்கப்பட்ட அளவுகளை லாக்ட் குருவ் இணைப்பிற்கு ஸ்டீல் ரூல் கொண்டு சோதிக்கவும்.
- கொக்கி போன்ற அமைப்பினை இருபுறமும் எதிர்எதிர் திசைகளில் ஹேட்செட் ஸ்டேக் மற்றும் மரசுத்தியல் மற்றும் 1/2 அங்குல பால்பீன் சுத்தியல் கொண்டு உருவாக்கவும்.
- புனல் ஸ்டேக் பயன்படுத்தி உலோகத் தண்டினை மடித்து கூம்பு உருவாக்கம் செய்ய வேண்டும். (Fig 3)

Fig 2




Fig 3




- புனல் ஸ்டேக் பயன்படுத்தி லாக்டு குருவ் இணைப்பை உருவாக்கவும். ஹேண்ட் குருவ்வர் மற்றும் 1 1/2 lbs பால் பீன் சுத்தியலைப் பயன்படுத்தவும். (Fig 4)
- மரச்சுத்தியல் பயன்படுத்தி பணிப்பொருளை நிறைவு செய்யவும்.

Fig 8




**பகுதி 2 (டெய்ல் பகுதி)**

- மரச்சுத்தியல் மற்றும் டின்மேன்ஸ் ஆன்வில் ஸ்டேக் பயன்படுத்தி உலோக தகட்டினை சமமட்டப்படுத்துதல் (Fig 5)

Fig 9




- பக்க இணைப்பிற்கான அனுமதி அளிக்கப்பட்ட அளவை ஸ்டீல் ரூல் கொண்டு பரிசோதிக்கவும்.
- உலோக தகட்டின் பகுதியை நீளமான ஹார்னுடு ஸ்டேக் கொண்டு நீளமான சாய்ந்த கூம்பின் அமைப்பை உருவாக்கவும். (Fig 6)

Fig 10




© NIMI NOT TO BE REPUBLISHED

## கூம்பு வடிவ துண்டினை லாக்டு குருவ்டு இணைப்பில் உருவாக்குதல் (Forming a frustum of a cone with locked grooved joint )

**நோக்கங்கள்** இது உங்களுக்கு உதவுவது

- புனல் ஸ்டேக் மற்றும் மரசுத்தியல் பயன்படுத்தி கூம்பு வடிவ துண்டினை உருவாக்குதல்
- புனல் ஸ்டேக் ஹேண்ட் குரூவர் மற்றும் பால்பீன் சுத்தியல் பயன்படுத்தி சாய்வான வளைந்த அமைப்பில் லாக்டு குரூவ் இணைப்பை உருவாக்குதல்.

- பணிப்பொருளின் மாதிரியை அனைத் அளவுகளுடன், அனுமதிக்கப்பட்ட அளவையும் சேர்த்து மேலும் மாதிரியை ஸ்டீல் ரூல் கொண்டு அளவீடுகளை சரிபார்க்கவும். (Fig 1ல் உள்ளவாறு)
- பிசிறுகளை பிளாட் பைல் அரம் கொண்டு நீக்கவும். ஹேட்செட் ஸ்டேக் ஐ மேசைத் தகட்டில் பொருத்தவும்.
- உலோகத் தகட்டினை கிடைமட்டமாக ஹேட்செட் ஸ்டேக்ல் வைத்து ஏற்கனவே அதில் குறிக்கப்பட்ட கோட்டிற்கு சமமாக வைத்து மடிக்கவும்.

Fig 1




- மரச்சுத்தியல் கொண்டு பணிப்பொருளின் விளிம்புகளில் அடித்து மடிக்கவும். படம் 2ல் உள்ளவாறு ஏதேனும் சேதம் ஏற்பட்டுள்ளதா என கண்டறியவும்.

Fig 2




- குறைந்த அளவிலான அழுத்தத்தில் உலோகத்தகட்டினை மரசுத்தியல் கொண்டு அடித்து அதே கோண அளவுகளில் செய்து முடிக்கவும். அதன் திருப்புதல் கோண அளவை சிறிது சிறிதாக உயர்த்தவும்.

- மேற்கூறிய செயல்முறையை தேவையான கோண அளவிற்கு அதன் விளிம்புகள் கிடைக்கப் பெறும் வரை திரும்பச் செய்யவும். (Fig 3)

Fig 3




- 90° க்கு அதிகமான திருப்புதல் கோணத்தை பெறுவதற்கு ஸ்டேக்ஸ் ன் முகத்திற்கு எதிர் திசையில் பணிப்பொருளை தாங்கிப் பிடிக்கவும்.

- ஸ்டேக்ஸ் ஐ விரல்களினால் அழுத்தி A என்றவாறு பிடிக்கவும், மேலும் பணிப்பொருளினை கட்டைவிரல் கொண்டு Fig 4ல் காட்டியவாறு நிலையில் தாங்கிப் பிடிக்கவும்.

Fig 4




- மரச்சுத்தியல் கொண்டு அதன் விளிம்புகளில் தேவையில்லாத டின் தகட்டை வைத்து அடித்து மடிக்கவும்.

Fig 5




- இதே செயல் முறையை அடுத்த பக்க விளிம்பை மடிக்கும் வரை செய்து உலோகத்தட்டில் நிறைவு செய்யவும். படம் 6

Fig 6




- புனல் ஸ்டேக் ஐ மேசை தகட்டின் மீது பொருத்தவும். (படம் 7a ல் நீண்ட சாய்தள டேப்பர் பீக் ஹார்ன்டு அயன் ஸ்டேக் பயன்படுத்தி சிறிய அளவிலான கோணத்தை உடையதாக தகட்டினை மாற்றவும். (Fig 7b & 7c)

- பணிப்பொருளின் ஒரு முனையை அடுத்த பகுதியின் அச்சுடன் இணையாக இருக்குமாறு வைத்து ஸ்டேக்ஸ் பயன்படுத்தி வளைக்கவும் / மடிக்கவும். (Fig 8)

- இந்த செயல்முறையைள திரும்பச் செய்து அடுத்த பக்கமும் இதேபோல் பணிப்பொருளில் நிறைவு செய்யவும். படம் 9 ல் காட்டியவாறு பணிப்பொருளை சீராக வளைக்கவும் / மடிக்கவும்.

- வளைக்கப்பட்ட விளிம்பை வட்டவடிவ முனையில் (ஆன்வில்லில்) பயன்படுத்தி அடுத்த முனையை/எதிர்முனையை இணைக்கும் படி சிறிறு சிறிதாக Fig 10 ல் காட்டியவாறு வளைக்கவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

Fig 7




Fig 8




Fig 9




Fig 10




- அனைத்து வளைக்க/மடிக்கப்பட்ட விளிம்புகள் பணிப்பொருளிற்கு இணையாக உள்ளதா என உறுதிபடுத்திக்கொள்ளவும். படம் 11ல் உள்ளவாறு இணை சரியில்லாமல் இருக்கக்கூடாது.

Fig 11




- Fig 12ல் காட்டியவாறு மடிக்கப்பட்ட விளிம்புகள் இணைப்புகளை இணைக்கவும்.

Fig 12




- மெதுவாக விளிம்புகளை மரச்சுத்தியல் கொண்டு இணைத்து லாக் செய்யவும். Fig 13ல் உள்ளவாறு இணைத்து முனை ஆரம்பம் முதல் இறுதி வரை இணை மடித்து இணைக்கவும். (தற்போது குருவ்டு சீம் ஆனது உருவாக்கப்பட்டுள்ளது)

Fig 13




- சரியான அளவுள்ள குரூவர் பயன்படுத்தவும்.
- குருவரை படத்தில் காட்டியவாறு வைத்து குருவ்டு இணைப்பை ஏற்படுத்தவும் (Fig 14)

Fig 14




- குருவரை சிறிதளவு சாய்வாக நிலையில் வைக்கவும்.இணைப்பின் முனை குருவரை (சீராக வைத்து) அடித்தளமாக/அடிப்படையாக வைத்து செயல்படுகிறது. (Fig 15)

© NIMI
NOT TO BE REPUBLISHED

குருவரை செங்குத்தான நிலையில் வைக்கவும் (Fig 16)

Fig 15




Fig 16




- குரூவரின் தலைப்பகுதியில் (உச்சியில் திடமான பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி அடிக்கவும். இதே செயல்முறையை பாகத்தின் இறுதிவரை செய்யவும். (Fig 17)

Fig 17




- மீண்டும் முனையை பரிசோதித்து அதன் அமைப்பில் சீராக நேர்க்கோட்டில் உள்ளதா என சோதித்து உறுதிப்படுத்தவும். பிறகு தொடர்ச்சியாக சீம் அமைப்பை கை குரூவரை பயன்படுத்தி குரூவ் ஐ லாக் செய்யவும்.
- இப்போது அந்த இணைப்பானாது முழுமையாக லாக் நிலையில் இருக்கும். (Fig 18)

Fig 18




- இறுதியாக மரசுத்தியலை கொண்டு மென்மையாக அதன் முழுத்தோற்றத்திற்கும் அளவுகளை ஸ்டீல் ரூல் மூலம் அளந்து பிறகு அடித்து இணைப்பை இறுக்கவும்.
- தேவையான அளவு சீம் ஏற்படுத்துவதற்காக சரியான அளவில் குரூவர் பயன்படுத்தி நிறைவு செய்யவும். சீம் ஆனது மிக அதிகமான (அ) அகலமாகவோ இருத்தல்கூடாது. (Figs 19, 20, 21)

Fig 19




Fig 20




Fig 21




©NIMI NOT TO BE REPUBLISHED

## ரிவிட் செய்தலுக்கு துளையிடுதல் (Drill for riveting)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- படத்தில் உள்ளதை போல துளைகளைத் துளையிடுவதை குறித்தல்
- எலக்ட்ரிக் போர்டேபிள் ட்ரில்லிங் இயந்திரத்தை பயன்படுத்தி ரிவிட் செய்வதற்கு தகர உலோகத்தை இறுக்கி துளையிடுதல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

### வேலையின் வரிசை (Job sequence)

- அளவுகோலை பயன்படுத்தி 48 x 50 mm தகட்டின் அளவை சரி பார்த்தல்.
- மரச்சுத்தியல் பயன்படுத்தி டிரஸ்ஸிங் தகடின் மேல் தகடை சமமட்டுப்படுத்தவும்.
- துளையிடும் துளைகளுக்கு இடைவெளியை அமைத்திடுதல், மற்றும் சென்டர் பஞ்ச் மற்றும் பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி துளையிடும் துளைகளின் மைய புள்ளிகளை குறிக்கவும்.
- 'C' இறுக்கி பயன்படுத்தி உறுதியாக தகடை பிடித்துக் கொள்ளவும்.
- படத்தை போல φ 3.2 mm துளையிடவும்.
- கையினால் துளையிட்ட துளைகளின் மேல் பெரிதான அளவுள்ள டிரில் பிட் கொண்டு சுற்றுதல் மூலம் துளைகளில் தேவையில்லாத பிசிறுகளை நீக்கவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | ISSH 50 x 48 x1.2 | – | G.I SHEET | – | – | 1.3.54 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
| SCALE 1:1 | DRILL FOR RIVETING | | | | DEVIATIONS ±0.5mm | TIME : |
| | | | | | CODE NO. FI20N1354E1 | |

## திறன் வரிசை (Skill sequence)

## திறன் இயக்கத்திலான கையடக்க போர்டபிலின் துளையிடுதல் இயந்திரம் கொண்டு தகர உலோகத்தின் மேல் துளையிடுதல் (Drilling on sheetmetal by power operated portable drilling machine)

**நோக்கம்:** இது உங்களுக்கு உதவுவது

- **சென்டர் பஞ்ச் கருவி மற்றும் பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி லேசாக துளையிட வேண்டிய துளைகளின் குறிப்பிட்ட மைய புள்ளிகளை துளையிடவும்.**

போர்டபில் கிரைண்டிங் இயந்திரத்தின் டிரில் ஹோல்டிரில் டிரில்பிட்டை (ஸ்ட்ரெய்ட்) உட்சொருகவும். (Fig 1)

Fig 1




**கையடக்க போர்டபிலின் துளையிடுதல் இயந்திரத்தின் டிரில் ஹோல்டரில் துளைக் கருவியை உட்சொருகும் முன்பு, சுவிட்ச் ஆப் செய்யவும் மற்றும் எர்திங் வழங்கப்பட்டிருப்பதை நிச்சயிக்கவும்.**

பொருத்தமான மரச்சட்ட தாங்கியின் மேல் பணிப்பொருளை அமைத்து மற்றும் 'C' கிளாம்பின் உதவியை கொண்டு இறுக்கவும். (Fig 2)

ஒரு கையால் போர்டபிள் கிரைண்டிங் துளையிடுதல் இயந்திரத்தை பிடிக்கவும் மற்றொரு கையின் ஆட்காட்டி விரல் மற்றும் கட்டை விரல் கொண்டு இயந்திர கன்னை பிடித்து, அதே நேரத் துளைக்கருவி துளையிட வேண்டிய உலோகத்தின் மேற்பரப்பிற்கு செங்குத்தாக வைக்க வேண்டும். (Fig 2)

இரண்டாவது விரல் கொண்டு சுவிட்ச் தூண்டி மூலம் சுவிட்ச் ஆன் செய்யவும்.

Fig 2




துளையை துளையிடும் வரை டிரில்லிங் இயந்திரத்தின் மேல் அழுத்தம் செலுத்தவும்.

தகர உலோகம் மேல் மின்சார இயக்கமுள்ள கையேந்து துளையிடுதல் இயந்திரம் கொண்டு துளையிடும் போது, லேசான அழுத்தம் செலுத்த வேண்டும். இல்லையெனில், துளைக் கருவி நிற்கும் அல்லது பணிப்பொருளை தூக்கச் செய்யும். (Fig 3)

Fig 3




துளையிடுதல் நிறைவு செய்த பிறகு துளையிடும் இயந்திரத்தை சுவிட்ச் ஆப் செய்யவும்.

கை கொண்டு துளையிட்ட துளையின் மேல் பெரிய அளவுள்ள துளைக்கருவி கொண்டு சுற்றுவதன் மூலம் துளையிட்டு தேவையில்லாத பிசிறுகளை நீக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

# கவுன்டர் சங்க் ஹெட் ரிவிட்களின் பல வகைகளுடன் ரிவிட் செய்தல் (Riveting with as many types of rivet as available, use of counter sunk head rivets)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- படத்தில் உள்ளதை போல ரிவிட் செய்வதற்கு துளைகள் மார்க்கிங் செய்தல் மற்றும் துளையிடுதல்
- கவுன்டர் சங்க் ஹெட் ரிவிட், ஃபிளட் ஹெட் ரிவிட், ஸ்னாப் ஹெட் ரிவிட் மற்றும் ஃபேன் ஹெட் ரிவிட்கள் ரிவிட்களை செய்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | ISSH 50 x 48x 1.2 | – | G.I SHEET | – | TASK 2 | - |
| 2 | ISSH 50 x 48x 1.2 | – | G.I SHEET | – | TASK 1 | 1.3.55 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | **RIVETING WITH TYPES OF RIVETS** | DEVIATIONS ±0.5mm | TIME : |
| | ( COUNTER SUNK HEAD AND FLAT HEAD RIVETS ) | CODE NO. FI20N1355E1 | |

TASK 3




RIVETING WITH SNAP HEAD RIVET

TASK 4




RIVETING WITH PAN HEAD RIVET

© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | ISSH 50 x 48x 1.2 | – | G.I SHEET | – | TASK 4 | - |
| 2 | ISSH 50 x 48x 1.2 | – | G.I SHEET | – | TASK 3 | 1.3.55 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

SCALE 1:1

**RIVETING WITH MANY TYPERS OF RIVETS**

( SNAP HEAD AND PAN HEAD RIVETS)

DEVIATIONS ±0.5

TIME:

CODE NO. FI20N1355E2

## வேலையின் வரிசை (Job sequence)

- அளவுகோலை பயன்படுத்தி 50 x 48 மிமீ தகடுகளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- மரச்சுத்தியலை பயன்படுத்தி டிரஸ்ஸிங் தகடின் மேல் தகடுகளை சமமட்டப்படுத்தவும்.
- படத்தில் போல துளைகள் மார்க் செய்து துளையிடவும்.
- அனைத்தும் துளையிட்ட துளைகள் கொண்டிருக்கும் மற்றொரு தகடின் துண்டை அமைத்தல், அதே நேரம் தகடுகளின் ஒன்றின் மீது ஒன்றுள்ள விளிம்புகள் குறிப்பிட்ட கோடுகளை கொண்டு ஒத்திருக்கும்.
- மையத்தில் துளையிட்ட துளைகளை ஒழுங்கு செய்தல்.
- மைய துளையில் 3 மிமீ விட்ட கவுன்டர் சங்க் ஹெட் ரிவிட் உள் சொருகவும். (Fig 1)

Fig 1




- பால்பீன் சுத்தியலை பயன்படுத்தி ரிவிட் அமைப்பின் உதவியை கொண்டு ரிவிட் ஹெட்டை உருவாக்கவும்.
- தகடின் மேல் துண்டில் ஏற்கனவே துளையிட்ட, துளைகளின் மூலம் தகடின் அடிப்புற துண்டின் மீதமுள்ள துளைகளை துளையிடவும்.
- ஏற்கனவே கையினால் துளையிட்ட துளைகளின் மேல் பெரிய அளவுள்ள துளைக் கருவியை சுற்றுவதன் மூலம் துளைகளின் தேவையில்லாத பிசிறுகளை நீக்கவும்.
- மாற்று துளைகளில் ரிவிட்களை உட்சொருகவும் மற்றும் ஒரு ரிவிட் செட் மற்றும் ஒரு பால்பீன் சுத்தியலின் உதவியை கொண்டு ஒற்றை ரிவிட் செய்த லேப் இணைப்பு (செயின்) உருவாக்குவதற்கு ஒன்றன் பின் ஒன்றாக ரிவிட் ஹெட்களை செய்யவும்.
- இதே போல், பணி 2-ல் பிளாட் ஹெட் ரிவிட், பணி 3-ல் ஸ்னாப் ஹெட் ரிவிட், மற்றும் பணி 4-ல் ஸ்பேன் ஹேட் ரிவிட் பயன்படுத்தி துளையிட்டு பிறகு ரிவிட் செய்தலை நிறைவேற்றவும்.

**கவுன்டர் சங்க் ஹெட் ரிவிட், பேன் ஹெட் ரிவிட், ஸ்னாப் ஹெட் ரிவிட் மற்றும் பிளாட் ஹெட் ரிவிட் உருவாக்குவதற்கு, டிரஸ்ஸிங் தகடு, ரிவிட் செட், ரிவிட் ஸ்னாப் மற்றும் குண்டுதலை சுத்தியலை பயன் படுத்தவும் மற்றும் ரிவிட் செய்தலை நிறைவேற்றவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஆர்க் பற்றிணைப்பு முறையில் சீரான நேர்கோடு முறையை பயிற்சி செய்தல் (Striking and maintaining arc, laying straight - line bead)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- ஓர் AC மற்றும் DC ஆர்க் வெல்டிங் இயந்திரம் அமைத்தல் மற்றும் இயக்குதல்
- கீறி (ஸ்கராட்ச்) உராய்தல் மற்றும் டேப்பிங் முறையில் தீப்பொறி ஏற்படுத்தி சீராக பராமரித்தல்
- சீரான நேர்கோடு பற்றவைப்பு படிகளை படியச் செய்தல் மற்றும் குறைபாடுகளை சோதித்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 50 ISF 6-150 | - | Fe310-O | - | - | - |
| 1 | 50 ISF 6 -150 | - | Fe310-W | - | - | 1.4.56 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | STRIKING AND MAINTAINING ARC LAYING STRAIGHT LINE BEADS BY ARC WELDING | DEVIATIONS : ± 0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1456E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **ஆர்க்கை ஸ்பரைக் செய்தல் மற்றும் பராமரித்தல்**

- கொடுக்கப்பட்டுள்ள பணிப்பொருளின் அளவை சரி பார்க்கவும்.
- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு மார்க் செய்து அரம் செய்யவும்.
- எஃகு கம்பி பிரஸ்ஸை கொண்டு உலோக மேற்பரப்பை சுத்தம் செய்தல் ஆயில் மற்றும் கிரீஸ் ஒட்டி இருப்பின் துடைத்து எடுக்கவும்.

**அழுக்கு மற்றும் துரு குறையுள்ள இணைப்புகளை உருவாக்கும்.**

- பாதுகாப்பு ஆடைகள் அணியவும் (பாதுகாப்பு ஆடை).
- இயந்திரம் மற்றும் பணிப்பொருளினை கொண்டு பற்றவைப்பு/வெல்டிங் கேபிள்களில் இணைத்தல்.

**கேபிள்கள் சேதமாகி உள்ளதா மற்றும் தளர்ந்து உள்ளதா என இணைப்புகளுக்கு சரி பார்க்கவும். எர்திங் இணைப்பு இணைக்கச் செய்திருப்பதை சரி பார்க்கவும்.**

- ஹோல்டரில் Ø 4 மிமீ M.S. மின்வாய் (Electrode) பொருத்தவும்.

**மின்வாய் (Electrode) வெறுமையான கம்பி முனையிலிருந்து உறுதியாக பிடித்து இருப்பதை உறுதி செய்யவும்.**

- வெல்டிங் மின்னோட்டத்தை (140 - 150 amps) (அம்பியர்) அமைக்கவும்.

**வெல்டிங் இயந்திரம் DC-யாக இருக்கிறதெனில், நெகடிவ் முனையில் எலக்ட்ரோடை இணைக்கவும்.**

- வெல்டிங் இயந்திரத்தை இயக்க ஆரம்பிக்கவும்.
- கீறி உரசுதல் (scratching) முறையை கொண்டு தீப்பொறியை அடித்து மற்றும் பராமரிக்கவும்.

**ஆர்க் வெல்டிங் போது, வெல்டிங் திரை மற்றும் சரியான நிறமுள்ள கண்ணாடிகளை பொருத்தி பயன்படுத்தவும்.**

- குறுகிய தூரத்தில் சரியான ஆர்க்கிற்கு பிடித்து பிறகு விரைவாக எலக்ட்ரோடை மேலே தூக்கி கொண்டு விடுவிக்கவும்.

**சரியான தீப்பொறி சீரான எரிதல் கூர்மை, விரிசல் ஒலி கொடுக்கும்.**

**எலக்ட்ரோடு உருகுதலில்லாது ஒவ்வொரு நேர தாக்குதலில் தீப்பொறி உருவாக்கும் வரை இந்த பயிற்சி தொடர்ந்து செய்யவும்.**

**எலக்ரோடானது ப்ளேட்டில் ஒட்டிக்கொண்டால் உடனடியாக அசைத்து எடுக்க வேண்டும், இல்லை எனில் எலக்ட்ரோடு உருக்குலையும்.**

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **ஆரக்/தீப்பொறி வெல்டிங் கொண்டு நேர் கோடு பற்றவைப்பு மணிகளாக கிடத்துதல்**

- கொடுக்கப்பட்டுள்ள பணிப்பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- பணிப்பொருளை கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு மார்க் செய்து அரம் செய்யவும்.
- படத்தை போல அளவு அமைப்பை மார்க் செய்யவும்.
- சமமட்டமாக வெல்டிங் மேஜையின் மேல் செய்பொருளை அமைத்தல்.
- ஆர்க் வெல்டிங் இயந்திரத்தை அமைத்தல் மற்றும் வெல்டிங் கேபிள்களை இணைத்தல்.
- ஹோல்டரில் Ø 4 மிமீ M.S. எலக்ட்ரோடு தேர்ந்தெடுத்து பொருத்தவும்.

**எலக்ரோடு ஹோல்டரில் தாடைகள் சுத்தமாயிருப்பதை உறுதிபடுத்தவும்.**

- AC (அ) DC இயந்திரத்தின் மேல் வெல்டிங் மின்னோட்டம் 140 - 150 amps-யை செட் செய்யவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

**DC திறன் மின்சாரத்தால் இயங்குகிறது எனில், நெகடிவ் நேர் போலாரிட்டி கொண்டு கொண்டு எலக்ரோடை இணைக்கவும்.**

- முழுமையான பாதுகாப்பு ஆடைகளை அணியவும் மற்றும் வெல்டிங் திரையின் வடிகட்டி லென்ஸ்சை சரி பார்க்கவும்.
- பயிற்சிக்கு பழைய இரும்பு துண்டின் மேல் தீப்பொறியை அடித்து பிறகு மின்னோட்ட அமைத்தலை கவனிக்கவும்.

**எலக்ட்ரோடின் எரிதல் சாதாரணமாயிருக்கிறதை (நிச்சயிக்கவும்) உறுதி செய்யவும்.**

- விளிம்பு ஒன்றின் மேல் ஆர்க் அடிக்கவும் (செய்பொருள்) மற்றும் சீரான சாதாரண குறுகிய ஆர்க்கை பராமரிக்கவும்.
- நேரான கோடில் எலக்ட்ரோடை நகர்த்தி மற்றும் தகடின் மற்றொரு விளிம்பில் பற்றவைப்பு மணி (பீட்) தடத்தை முடிக்கவும்.
- வெல்டிங் போது $70^o$ - $80^o$-ல் எலக்ட்ரோடை சரியான கோணத்தை பராமரிக்கவும்.
- ஆர்க்கின் நீளம் நிலையாக கூர்மை கிராகிங் ஒலியை உற்பத்தி செய்யவும்.
- 150 mm/நிமிடம் என்ற வேக விகிதத்தில் ஏறக்குறைய செல்லவும்.
- வெல்டு தடத்தில் கழுவி அசுத்த கசடுகளை நீக்கவும் பிறகு சோதிக்கவும்,
  - சீரான அகலம் மற்றும் உயரம் - கசடு உட்கொண்டது (slag).
  - Fusion னின் சாதாரண ஆழம்.
  - நேரான தன்மை.
- நீங்கள் நல்ல நிறைவான முடிவுகள் பெறும் வரை இந்த பயிற்சியை திரும்ப செய்யவும்.

## திறன் வரிசை (Skill sequence)

## வெல்டிங் செய்வதற்காக ஆரக் வெல்டிங் இயந்திரத்தை அமைத்தல் (Setting of arc welding machine for welding)

நோக்கங்கள்: இது உங்களுக்கு உதவுவது
- **ஆர்க் வெல்டிங் இயந்திரத்தை அமைத்தல்**
- **எலக்ட்ரோடின் அளவிற்கு ஏற்ப மின் அளவு சரிசெய்தல்**
- **கீறி உரசல் மற்றும் டேப்பிங் முறையை கொண்டு ஆர்க் ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.**

ஒரு ஆர்க் அடித்தல் என்பது ஆர்க் பற்றவைப்பில் முதல் படியாகும். இது வெல்டிங் ஆரம்பிக்க வேண்டிய ஒவ்வொரு முறையும் செய்ய வேண்டும்.

இது ஆர்க் வெல்டிங்கில்/தீப்பொறி பற்றவைப்பில் கற்றுக் கொள்வதற்கான அடிப்படை திறனாகிறது.

**ஆர்க் பற்றவைப்பு நிலையத்தை அமைத்தல் (Setting of arc-welding plant) (படம் 1)**

வெல்டிங் இயந்திரத்திற்கு மின்சாரம் அளித்து வேலை செய்வதை சரி பார்க்கவும்.

**ஞாபகத்தில் கொள் - மின்சாரம் ஒரு நல்ல வேலையாள் ஆனால் ஒரு கெட்ட எஜமானி.**

Fig 1




**மின்சாரம் சார்ந்த பிரச்சனைகளுக்கு எலக்ட்ரீஸ்யனை அழைக்கவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

வெல்டிங் இயந்திரத்தில் வெல்டிங் கேபிள்களை இணைத்தல்.

> **கேபிள் இணைப்புகள் சுத்தமாக, உலர்ந்து, இறுக்கமாயிருப்பதை மற்றும் இயந்திரத்தின் சரியான முனையங்களிற்கு இணைக்கச் செய்வதை உறுதிபடுத்தவும்.**

சரியான இடத்தில் வெல்டிங் மேஜையினை கொண்டு எர்த் கேபிளை இறுக்கமாக இணைக்கவும்.

பாதுகாப்புபான இடத்தில் எலக்ட்ரோடு ஹோல்டரை வைக்கவும்.

> **இயந்திரம் DC மின்சாரத்தில் இயங்குவது எனில், கேபிள்களை சரியான போலாரிட்டியில் இணைத்தல்.**

வெல்டிங் கரண்ட் அமைத்தல்

வெல்டிங் கரண்ட் பயன்படுத்த வேண்டிய எலக்ட்ரோடின் விட்டத்திற்கு ஏற்ப அமைக்கவும். (அட்டவணை 1)

பணிப்பொருளின் பருமனுக்கு ஏற்ப எலக்ட்ரோடை தேர்ந்தெடுக்கவும் (பரிந்துரை உள்ளது)

**அட்டவணை 1**

| Plate | Electrode | Current |
|---|---|---|
| Thickness in mm (approx.) | Size mm | Range (amperes) |
| 1.6 | 1.6 | 40-60 |
| 2.5 | 2.5 | 50-80 |
| 4.0 | 3.2 | 90-130 |
| 6.0 | 4.0 | 120-170 |
| 8.0 | 5.0 | 180-270 |
| 25.0 | 6.0 | 300-400 |

எலக்ரோடுகள் சரியான அளவில் கிடக்காத போது அருகாமையான அளவில் மாற்று எலக்ட்ரோடுகளை பயன்படுத்தவும்.

> **எலக்ட்ரோடுகளின் விட்டம் பற்றவைக்க வேண்டிய உலோகத்தின் பருமனைவிட அதிகமாயிருக்காது.**

**ஓர் ஆர்க் அடித்தல் மற்றும் பராமரித்தல் (Striking and maintaining an arc)**

**கீறி உராய்தல் முறை (Scratching method) (படம் 2)**

Fig 2




எலக்ட்ரோடு, மேற்பரப்பிற்கு மேலே ஏறக்குறைய 25 mm பிடிக்கவும்.

உங்களுடைய கண்களின் முன்னால் பற்றவைத்தல்/வெல்டிங் திரையை கொண்டு வரவும்.

> **பாதுகாப்பு ஆடைகள் அணிந்திருப்பதை உறுதி செய்யவும்.**

மணிக்கட்டு நகர்த்தல் மட்டும் பயன்படுத்தி, வெல்டிங் செய்பொருளின் குறுக்கே விரைவாக மற்றும் மென்மையாக எலக்ட்ரோடை இழுத்துக் கொண்டு ஆர்க் அடிக்கவும்.

எலக்ட்ரோடு சில வினாடிகளுக்கு மேற்பரப்பி லிருந்து ஏறக்குறைய 6 மிமீ எடுக்கவும், மற்றும் பிறகு இது 4 மிமீ தூரத்திற்கு (ஏறக்குறைய) தாழ்த்தவும்.

> **ஆர்க் சரியாக பற்றி கொண்டிருக்கிறது எனில், ஒளியின் வெடிப்புடன் நிலையான கூர்மை விரிசல் ஒலி உற்பத்தி ஆகும்.**

**டேப்பிங் முறை (Tapping method) (படம் 3)**

Fig 3




© NIMI NOT TO BE REPUBLISHED

எலக்ட்ரோடை லேசாக கீழே பணிப்பொருளிற்கு முட்டவைத்து நகர்த்தி ஸ்ட்ரைசிங் செய்ய வேண்டும்

எலக்ட்ரோடை, சில வினாடிகளுக்கு ஏறக்குறைய 6 மிமீ மெதுவாக மேல் நோக்கி நகர்த்தவும், பிறகு மேற்பரப்பிலிருந்து ஏறக்குறைய 4 மிமீ தாழ்த்தவும்.

**டேப்பிங் முறை பொதுவாக பணிப்பொருளின் மேல் பிட் மார்க்கினை உருவாக்கச் செய்வது பரிந்துரைக் கப்படுகிறது.**

## ஆர்க் மூலம் நேர்கோடு பீடிங் பற்ற வைத்தல் (Straight line beading by arc (Flat position))

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது
- **மட்டமான அமைப்பில் நேரான பீடிங்கை பற்ற வைத்தல்**
- **பற்றவைப்பு பொருளை சுத்தம் செய்தல் மற்றும் தவறுகளை சோதித்தல்.**

**பணிப்பொருள் அமைத்தல் (Job setting)**

பற்றவைப்பு மேஜையின் மேல் சமமட்டமான அமைப்பில் பணிப்பொருளை அமைத்தல். (படம் 1)

Fig 1




பணிப்பொருள் மற்றும் வெல்டிங் மேஜையினிடையே நல்ல மின்சார தொடுதல் இருப்பதை உறுதி செய்யவும்.

**மின்னோட்டம் அமைத்தல் (Current setting) (படம் 2)**

Fig 2




M.S. எலக்ட்ரோடு Ø 4 mm-க்கு 140 - 150 amps அளவு வெல்டிங் இயந்திரத்தில் மின்னோட்டத்தை அமைக்கவும்.

மின்சார அளவு புள்ளியல் படத்தை பின்பற்றி எலக்ட்ரோடு மின்சார அளவை நிர்ணயிக்கவும்.

**மின்வாய் அமைத்தல் (படம் 3a & b) (Electrode position)**

Fig 3




அருகருகே உள்ளஇணைக்க வேண்டிய தகடின் பரப்பில் எலக்ட்ரோடை 70°-80° கோணத்தின் 90° வெல்டு கோணத்தோடு இணைக்க வேண்டும்.

**நேரான பீட்களை பற்றவைத்தல் (Depositing straight beads) (படம் 4)**

**பஞ்ச் செய்த கோட்டின் மேல் ஆர்க்கை பராமரித்து பின்வருவன கொண்டு நேரான பற்றவைப்பு மணிகள் பதிவு செய்தல் (Deposit straight beads by following the punched line and maintaining arc)**

- சரியான ஆர்க் நீளம்
- சரியான நகரும் வேகம்
- சரியான எலக்ட்ரோடின் கோணம்




**வெல்டிங் திரை லென்ஸ் சுத்தமாக இருப்பதை நிச்சயிக்கவும். அதனால் நீங்கள் தீப்பொறி மற்றும் வெல்டு கோட்டினை பார்க்க முடியும்.**

லென்ஸில் உடைந்திருப்பின் அதில் உள்ள கண்ணாடிகளை மாற்றவும்.

**ஆர்க்கை கவனிக்கவும். இது நிலையான கூர்மை விரிசல் ஒலியை உற்பத்தியாகிறது.**

உருகிய மெட்டல் ஓடி படிவதை கவனித்து எலக்ட்ரோடு ஓடும் வேகத்தை தேவைக்கு ஏற்ப மாற்றி அமைக்கவும். (Figs 5a & b)




**பற்றவைப்பு சாதனத்தை சோதித்தல் (Weldment Inspection) (படம் 6)**




சீவுதல்/சிப்பிங் சுத்தியல் மற்றும் கம்பி பிரஸை பயன்படுத்தி பற்றவைப்பு சாதனத்தினிலிருந்து கசடுகளை நீக்கவும்.

**கசடுகள் (slag) ஸ்லாக் நீக்கும் போது கண்ணாடிகள் பயன்படுத்தவும்.**

**படியும் பற்றவைப்பு மணிகளை சோதித்து கீழ் உள்ளவற்றில் ஏதாவது வேறுபாடுகள் இருப்பின் - குறிப்பிடவும் (Inspect the deposited beads and note any variations in the)**

- அகலம் மற்றும் உயரம்
- உருகி இணைந்த ஆழம்
- ஓட்டத்தின் நீளம் (நேரானத் தன்மை)

© NIMI NOT TO BE REPUBLISHED

# வாயு மற்றும் ஆர்க் வெல்டிங் மூலம் பட் மற்றும் 'T' பில்லட் இணைப்பை உருவாக்குதல் (Making square, Butt joint and 'T' fillet joint - gas and arc)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ஆர்க்கை கொண்டு சரியான ஒழுங்கில் பட் இணைப்பு மற்றும் T ஃபில்லட் இணைப்புகளை உருவாக்குவதற்கு பணிப்பொருளை அமைத்து வெல்டு செய்தல்
- பரிந்துரை செய்த எலக்ட்ரோடு மின்வாய், ஃபில்லர் கம்பி மற்றும் நாசில் அளவுகளை பயன்படுத்தி T ஃபில்லட் மற்றும் பட் இணைப்பை வெல்டு செய்தல்
- இணைப்பில் உள்ள திரிதலை நீக்குதல்
- வெல்டு மூலப்பொருளை சுத்தம் செய்து மற்றும் மேற்பரப்பு குறைபாடுகளுக்கு சோதித்தல்.



© NIMI NOT TO BE REPUBLISHED

| 2 | 50 ISF 6 -150 | - | Fe310-W | - | TASK 1 | 1.4.57 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE : NTS | TITLE: **SQUARE BUTT JOINT IN FLAT POSITION BY ARC WELDING** | DEVIATIONS : ±0.5mm | TIME 3hrs |
|---|---|---|---|
| | | CODE NO. FI20N1457E1 | |

TASK 3




TASK 4




© NIMI NOT TO BE REPUBLISHED

| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
|---|---|---|---|---|---|---|
| 2 | ISSH 150 x 50 x 2 | | Fe310 - W | | TASK 4 | - |
| 2 | ISSH 150 x 50 x 2.5 | - | Fe310 - W | - | TASK 3 | 1.4.57 |

| | | | |
|---|---|---|---|
| SCALE : NTS | **SQUARE BUTT AND FILLET WELD 'T' JOINT IN FLAT POSITION BY GAS WELDING** | DEVIATIONS: ±0.5mm | TIME : |
| | | CODE NO. FI20N1457E2 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1: **ஆர்க் பற்றவைத்தல் முறையை கொண்டு சமமட்டமான அமைப்பின் பக்க சதுர பட் இணைப்பு**

- கொடுக்கப்பட்டுள்ள பணிப்பொருளின் அளவை சரி பார்த்தல்.
- சதுர வடிவத்திற்கு மார்க் செய்து அரம் செய்தல்.
- சீரமைப்பில் 1.5 மிமீ இடைவெளி கொண்டு சதுர பக்க இணைப்பிற்கு வெல்டிங் மேஜையின் மேல் துண்டுகளை அமைத்தல்.
- M.S. எலக்ட்ரோடு φ 3.15 மிமீ-யை தேர்ந்தெடுத்தல் மற்றும் 120 amps-யை அமைக்கவும்.

**மின்திறன் சாதனம் DC எனில், நெகடிவ்வில் எலக்ட்ரோடை இணைக்கவும்.**

- துண்டுகளின் இரண்டு முனைகள் மற்றும் மையத்தில் பட் பற்ற வைக்கவும்.

**பாதுகாப்பு ஆடை அணிந்திருப்பதை உறுதிபடுத்தவும்.**

- பட் பற்றவைத்த துண்டுகளின் சீரமைப்பை சரி பார்த்தல், தேவை எனில் மறு அமைப்பு செய்யவும்.
- நல்ல எர்த்திங்/புவித் தொடர்புள்ள, வெல்டிங் மேஜையின் மேல் சமமட்டமான அமைப்பில் இணைப்பை அமைக்கவும். (கீழ் பக்கமும் பட் பற்றவைத்தல் - திறன் விளக்கம் ஆலோசிக்கவும்)
- M.S. மின்வாய் φ 4.0 மிமீ-யை தேர்ந்தெடுத்தல் மற்றும் 150 - 160 amps (ஆம்ப்ஸ்) மின்னோட்டத்தை அமைத்தல்.
- கீழ்கண்டவை கொண்டு இணைப்பு கோடுவினூடே முதல் பற்றவைப்பு ஃபீடை பதியவும்.
  - – சரியான தீப்பொறி நீளம்
  - – சரியான மின்வாய் கோணம்
  - – சரியான வெல்டிங் வேகம்
- கசடுகளை பீடிலிருந்து சிப்பிங் செய்து நீக்கி, பின் பிரஸ் செய்து சோதிக்கவும்.

**சூடான பணிப்பொருளை பிடிப்பதற்கு டாங், சீவுதலுக்கு மற்றும் சுத்தம் செய்தலுக்கு சீவுதல் சுத்தியல் மற்றும் கம்பிபிரஸ், கண்களின் பாதுகாப்பிற்க்கு கண்ணாடிகள் பயன்படுத்தவும்.**

- முழுவதுமாக முதல் பற்றவைத்த பீடை பின்புறம் சுத்தம் செய்தல்.
- அதே அமைப்பில் மற்றொரு பக்கத்தின் மேல் இரண்டாவது பற்றவைப்பு பீடை வெல்டிங் செய்யவும்.
- பற்றவைப்பு பீடிலிருந்து கசடை சீவல் செய்யவும், குறைபாடுகளுக்கு பிரஸ் செய்து பிறகு சோதிக்கவும்.
- நீங்கள் பட் பற்றவைப்பு நல்ல முறையில் உருவாக்க முடியும்வரை இந்த பயிற்சி பழக்கம் செய்யவும்.

**பக்க இணைப்பு வெல்டிங் போது இடைவெளியின் 1/3 பங்கு தகட்டின் பருமன் அல்லது உலோகத்தின் சமமட்டமான பகுதிக்கு ஏற்ப பராமரிக்கச் செய்ய வேண்டும்.**

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2: **ஆர்க் பற்றவைத்தல் கொண்டு சமமட்டமான அமைப்பில் 'T' ஃபில்லட் இணைப்பு**

- கொடுக்கப்பட்டுள்ள பணிப்பொருளின் அளவை சரி பார்க்கவும்.
- பணிப்பொருளை தேவையான அளவுக்கு குறித்து மற்றும் அரம் செய்தல்.
- ஃபில்லட் இணைப்பு போல இரண்டு முனைகளில் செய்பொருள்களை அமைத்து பிறகு பட் பற்றவைத்தல். (படத்தை ஆலோசிக்கவும்)
- Ø 3.15 mm மின்வாய் மற்றும் 130 ஆம்ப்ஸ் மின்னோட்டம் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தவும். பாதுகாப்பு ஆடை அணிய வேண்டும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

- முடிக்சு பற்றவைப்புகளை சுத்தம் செய்தல், சீரமைப்பு சரி பார்த்தல் மற்றும் தேவை எனில் செய்பொருளை மறு அமைத்தல்.
- சமமட்டமான அமைப்பில் வெல்டிங் மேஜையின் மேல் இணைப்பை அமைத்தல். (கீழ்பக்கம் உள்ள முடிச்சு பற்றவைத்தல் - திறன் விளக்கம் ஆலோசிக்கவும்)
- φ 4 mm M.S. எலக்ட்ரோடை தேர்ந்தெடுத்தல் மற்றும் 150 - 160 ஆம்ப்ஸ் மின்னோட்டத்தை அமைத்தல்.
- இணைப்பு கோட்டின் மேல் முதல் பீடை அமைக்க,

– சரியான ஆர்க் நீளம்

– சரியான எலக்ரோடு கோணம்

– சரியான வெல்டிங் வேகம்

**எலக்ட்லோடு கோணம் ஓரங்களில் 45° மற்றும் நகரும் திசையில் 70° to 80° இருப்பதை உறுதிப்படுத்தவும்.**

**பற்றவைப்பு பொருள்களை சுத்தம் செய்தல் மற்றும் குறைபாடுகளுக்கு சோதிக்கவும்.**

- இணைப்பின் மற்ற பக்கத்தை சுத்தம் செய்து முடிச்சுகளை சாணை செய்தல்.
- சமமட்டமான அமைப்பில் இணைப்பை அமைத்தல். (கீழ்பக்கம் பற்றவைத்தல்)
- அதே அமைத்தல் மற்றும் தொழிற்நுட்பத்தை கொண்டு இணைப்பு கோடுவினூடே இரண்டாவது வெல்டை உருவாக்குதல்.

**வெல்டை சுத்தம் செய்து பின்வரும் வெல்டு குறைகளை சோதித்தல்.**

– மென்மையாக சிற்றலை தோற்றம் சீரான அகலம் கால்களின் நீளம் சமமாக இருப்பதை சோதித்தல்.

– குழிவெட்டு இல்லாத ஒன்றின்மேல் ஒன்றில்லாத வெல்டுவின் முன்பாகத்தில் நல்ல உருகுதல் இருப்பதை சோதிக்கவும்.

– தகடு பருமனிற்கு சமமாக ஃபில்லட் வெல்டின் லெக்/கால் நீளம்.

- நல்ல வெல்டு உற்பத்தி செய்யும் வரை பயிற்சியை திரும்ப செய்யவும்.

— — — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 3: **வாயு பற்றவைத்தல் கொண்டு சமமட்டமான அமைப்பில் ஃபட் சதுர வடிவ இணைப்பு**

- கொடுக்கப்பட்டுள்ள பணிப்பொருளின் அளவை சரி பார்க்கவும்.
- பணிப்பொருளை தேவையான அளவிற்கு மார்க் செய்து அரம் செய்தல்.
- ரூட் கேப் 1.5 மிமீ-யை கொண்டு சதுர பட் இணைப்பை (திறந்தது) ஏற்படுத்த வெல்டிங் மேஜையின் மேல் பணிப்பொருள் துண்டுகளை அமைத்தல்
- நாசில்/குழாய் மூக்கு எண் 5, வாயு பற்றவைப்பு நிலையத்தை அமைத்தல் மற்றும் இரண்டு வாயுக்களும் 0.15 $Kg/cm^2$-ன் அழுத்தத்தை அமைக்கவும்.
- முடிச்சு பற்ற்வைத்தலுக்கு C.C. M.S. ஃபில்லர் ராடு மற்றும் பற்றவைப்பிற்கு Ø 3.00 மிமீ-யை தேர்ந்தெடுத்தல்.
- பாதுகாப்பு ஆடை அணியவும்.
- நியூட்ரல் சுவாலை அமைக்கவும்.
- இரண்டு முனைகளின் துண்டுகளை முடிச்சு பற்றவைத்தல் மற்றும் Ø 1.5 மிமீ ஃபில்லர் ராடை பயன்படுத்தி மையத்தில் முடிச்சு பற்ற வைத்தல். (சுருங்குதல் அனுமதியளவுவாக 2-யை வைத்தல்)

**மூடி பற்றவைப்புகள் நன்றாக உருகி, ஊடுருவி இருக்க வேண்டும்.**

- துண்டுகளினிடையே சீரமைப்பு மற்றும் இடைவெளியை சரி பார்த்து தேவை எனில் மறு அமைப்பு செய்யவும்.
- சமமட்டமான அமைப்பில் வெல்டிங் மேஜையின் மேல் பணிப்பொருளை மறு அமைப்பு செய்து முடிச்சு பற்றவைப்புகளை சுத்தம் செய்யவும்.
- ஊதுகுழாயின் சரியான கோணம் φ 3 mm ஃபில்லர் கம்பிகளை கொண்டு இடதுபுற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, வெல்டிங் ஆரம்பிக்கவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

- சீராக விளிம்புகளை உருகி மற்றும் ஃபில்லர் உலோகம் சேர்த்தல். (சீரான வெல்டு மணிதடத்தை உருவாக்குதலுக்கு, ஊதுகுழாய் மற்றும் ஃபில்லர் கம்பியின் சரியான நகர்த்தல் வேகம் மற்றும் இயக்கத்தை பராமரித்தல்)
- இடது விளிம்பில் நிறுத்தி, வெல்டை நிறைவு செய்வதற்கு கிராட்டரை நிரப்பவும்.
- ஜூவாலையை அனைத்து, நாசிலை குளிர்வித்து பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

**பற்றவைத்த இணைப்பை சுத்தம் செய்தல் மற்றும் பார்வையில் சோதித்தல் (Clean the welded joint and visually inspect for)**

– பற்றவைப்பு ஃபீடின் சீரான அகலம் மற்றும் உயரம் லேசான குவிமையத்தை சரி பார்க்கவும்.

– வேரின் அருகாமை ரிப்பில் இணைப்பின் பின் பக்கத்தின் மேல் லேசான ஊடுருவுதல் பற்றவைப்பை சரி பார்க்கவும்.

- நீங்கள் நல்ல முடிவுகள் பெறும் வரை இந்த பயிற்சி திரும்ப செய்யவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 4: **வாயு பற்றவைத்தல் கொண்டு சமமட்டமான அமைப்பில் 'T' இணைப்பு ஃபில்லட் வெல்டு**

- வரைபடத்தை போல பணிப்பொருள் துண்டுகள் தயார் செய்யவும்.
- பற்றவைப்பு செய்ய வேண்டிய தகடுகளின் மேற்பரப்பு மற்றும் விளிம்புகளை சுத்தம் செய்யவும்.
- வாயு பற்றவைப்பு மேஜையின் மேல் 'T' இணைப்பு உருவத்தில் தகடுகளை அமைக்கவும்.
- பாதுகாப்பு ஆடைகள் மற்றும் வாயு பற்றவைப்பு கண்ணாடிகள் அணியவும்.
- நாசில் எண் 5 பொருத்தி, வாயு பற்றவைப்பு நிலையத்தை அமைத்து இரண்டு வாயுக்களுக்கு 0.15 Kgf/cm$^2$-ல் அழுத்தம் அமைக்கவும்.
- நடுநிலையான சூவாலையை அமைத்து, மேலும் 1.6 மிமீ C.C.M.S. கம்பியை கொண்டு மையத்தில் இணைப்பின் இரண்டு முனைகளில் முடிச்சு பற்றவைத்தல்.
- மூலவிட்டத்தை கொண்டு இணைப்பின் சீரமைப்பை சரிபார்த்தல் மற்றும் முடிச்சு செய்த பகுதியை சுத்தம் செய்தல்.
- சமமட்டமான அமைப்பில் பற்றவைப்பு மேஜையின் மேல் பணிப்பொருளை வைத்தல்.
- இடதுபுற தொழிற்நுட்பத்தை கொண்டு வெல்டிங் ஆரம்பித்து பிறகு இணைப்பின் வலது கை பக்க முனையை உருகவும்.
- பற்றவைக்க வேண்டிய பரப்பை உருக்கவும் (கிடைமட்மான தகடு மற்றும் செங்குத்து தகடின் பாகத்தை சமமாக) மற்றும் இணைப்பில் ஃபில்லர் ராடை உருகிய மடுவில் செலுத்தவும்.
- சரியான நகர்த்தல் வேகம் பராமரித்து, சீரான வெல்டு தடமணியை உருவாக்குவதற்கு ஊதுகுழாய் மற்றும் ஃபில்லர் கம்பியை திறமையாகக் கையாளவும்.
- வெல்டின் முனையில் உருகிய குழம்பை நிரப்பிய பிறகு இணைப்பின் இடது கை முனையில் வெல்டை நிறுத்தவும்.
- ஜூவாலையை அனைத்துவிட்டு, நாசிலை குளிரச் செய்து, மற்றும் அதனுடைய இடத்தில் வைக்கவும்.
- பற்றவைத்த இடத்தில் சுத்தம் செய்து ஃபில்லட் வெல்டில் குறைபாடுகளுக்கு சோதித்தல்.

**பார்த்து சோதித்தல் (Visual inspection)**

- லேசான குவிதன்மை, சீரான அகலம், சீரான ரிப்பில் பரபரப்புகள் நல்ல வெல்டு பீடுகளை பரிசோதித்தல், வெல்டு குழிவெட்டு, இவ்வாறு ஒன்றின் மீது ஒன்று, திரவம் ஊறிவெளிப்படும் தன்மை இல்லாமல் இருப்பது நல்ல தரமான வெல்டுவை உறுதிப்படுத்துவதாகும்.
- அதிகமான பயிற்சிக்கு இணைப்பின் மற்றொரு பக்கத்தின் மேல் வெல்டு செய்யவும்.

©NIMI NOT TO BE REPUBLISHED

## திறன் வரிசை (Skill sequence)

## சமமட்டமான அமைப்பில் ஆர்க் வெல்டிங் கொண்டு சதுர பட் இணைப்பு (Square butt joint by arc in flat position

**நோக்கங்கள்: இது உங்களுக்கு உதவுவது**
- **சமமட்டமான அமைப்பில் சதுர பட் இணைப்பை வெல்டு செய்தல்**
- **முழுமையான பட் இணைப்பு பற்றவைப்பை சோதித்தல்.**

இந்த வகையான இணைப்பு தொழிற்சாலையில் மிகவும் பரவலாக பயன்படுகிறது. இரண்டு பக்கங்களிலும் பற்றவைப்பது எனில் (6 mm தகடு பருமன்) நல்ல பற்றவைப்பை பெற முடிகிறது.

**அமைத்தல் மற்றும் முடிச்சு பற்றவைப்பு (Setting and tacking)**

பற்றவைப்பில் இடைவெளி 3 மிமீ-யை கொண்டு பட் இணைப்புகள் போல துண்டுகளை அமைத்தல்.

முனைகளின் இரண்டு பக்கமும் மற்றும் மையத்தில் ஒன்றும் மூடி பற்றவைத்தல். (Fig 1)

Fig 1




Ø 3 மிமீ M.S. எலக்ட்ரோடை பயன்படுத்தவும். 120 - 130 ஆம்ஸ் மின்னோட்டம் மற்றும் 15 மிமீ டாக் பற்றவைத்தலின் நீளத்தை அமைத்தல்.

> **டாக் பற்றவைப்புகள் உருகி யிருக்கிறதா என உறுதிபடுத்தவும்.**

டாக் பற்றவைத்தல் பிறகு சீரமைப்பை சரி பார்த்தல் மற்றும் தேவை எனில் மறு அமைத்தல். (Fig 2)

Fig 2




முழுவதுமாக டாக் - வெல்டுகளை சரி பார்த்தல்.

**பட் இணைப்பு பற்றவைத்தல் (Welding butt joint)**

சமமட்டமான அமைப்பில் இணைப்பை அமைத்தல்.

M.S. எலக்ட்ரோடு Ø 4 மிமீ-யை மற்றும் சரியானதை கொண்ட 150 - 160 ஆம்ப்ஸ் மின்னோட்டம் பயன்படுத்தி முதல் ஃபீடை பதியவும்.

- எலக்ட்ரோடு கோணம்
- நகர்த்தல் வேகம் மற்றும்
- ஆர்க் நீளம் (படம் 3)

Fig 3




**கீழ்கண்டவைகளுக்கு வெல்டிங் கோட்டின் மேலே முன்னோக்கி மற்றும் பின்னோக்கி எலக்ட்ரோடை நகர்த்தல் (Move the electrode forward and backward along the line of the weld to)**

- வெல்டு அடிப்பதற்கு முன்பே மெட்டலை சூடாக்கவும்.
- இதன் மூலம் எரியும் போக்கு குறைக்கபடுகிறது.
- வெல்டின் உச்சி மேல் கசடு திரும்ப தள்ளுதல் மற்றும் கசடு சேர்த்தல் ஆகியவற்றை கட்டுப்படுத்த வேண்டும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

**வெல்டுவினை சோதித்தல் (Inspection of the weld)**

வெல்ட் அடித்த இடத்திலிருந்து கசடை நீக்கவும் வெல்டின் தன்மையை அறிய பின்வருவனவற்றை சோதித்தல். (Fig 4)

Fig 4




- பற்றவைத்த ஃபீடின் அகலம் மற்றும் உயரம் சீராக இருக்க வேண்டும்.
- தோற்றம் மென்மையாக மற்றும் சிற்றலை போல் (ரிப்பில்கள்) இருக்க வேண்டும்.
- வெல்டின் முகம் லேசான குவியாக இருக்க வேண்டும்.
- வெல்டுகளின் விளிம்பு நல்ல உருகி இருக்க வேண்டும். ஒன்றின் மீது ஒன்றில்லாது மற்றும் குழிவெட்டு இல்லாதும் இருக்க வேண்டும்.
- ஆரம்பம் மற்றும் நிறுத்தம் புள்ளிகளில் நன்கு ஊடுருவி உயர் முனைகள் இல்லாமல் இருக்க வேண்டும்.
- வெல்டின் வேர் மற்றும் தகடு மேற்பரப்பு நல்ல உருகுதல் மற்றும் ஊடுருவல் கொண்டிருக்க வேண்டும்.
- தகடின் மேற்பரப்பு தூவல்களில்லாமல் இருக்க வேண்டும்.

## சமமட்டமான அமைப்பில் ஆர்க் வெல்டிங் மூலம் 'T' ஃபில்லட் இணைப்பு செய்தல் ('T' fillet joint by arc in flat position)

**நோக்கங்கள்:** இது உங்களுக்கு உதவுவது

- **விரிசல் மற்றும் வெல்டு குறைபாடில்லாத சமமட்டமான அமைப்பில் ஆர்க் கொண்டு 'T' ஃபில்லட் இணைப்பு வெல்டு செய்தல்**
- **வெல்டின் இயல்புகளுக்கு ஃபில்லட்டை சோதித்தல்.**

'T' அல்லது லேப் இணைப்பின் மேல் வெல்டு படியச் செய்வதை ஃபில்லட் வெல்டு எனப்படும். அடிக்கடி 'T' இணைப்பை ஃபில்லட் இணைப்பு எனப்படும். (Fig 1) இந்த இணைப்பு தொழிற்சாலை ஃபேப்ரிகேஷன் வேலையில் பெரும்பாலும் பயன்படுகிறது.

Fig 1




**அமைத்தல் மற்றும் முடிச்சு பற்றவைத்தல் (Setting and tacking) (படம் 2)**

90° 'T'-யை உருவாக்குவதற்கு, சீரமைப்பில் துண்டுகளை அமைத்தல்.

இரண்டு முனைகளில் துண்டுகளை முடிச்சு பற்றவைத்தல்.

Ø 3.15 மிமீ M.S. எலக்ட்ரோடு பயன்படுத்தவும்.

150 - 160 ஆம்ப்ஸில் மின்னோட்டம் அமைத்தல்.

Fig 2




**இதன் டேக் பற்றவைப்புகள் 15 மிமீ நீளத்தை கொண்டு நன்றாக உள்ளதை உறுதி செய்யவும்.**

டேக் பற்றவைத்தல் சீரமைப்பை சரி பார்க்கவும்.

**ஃபில்லட் இணைப்பை பற்றவைத்தல் (Welding a fillet joint)**

சமமட்டமான அமைப்பு பற்றவைத்தலுக்கு இணைப்பை அமைத்தல். (படம் 3)

தகடு மேற்பரப்பிற்கு 45°- கோணத்தில் இணைப்பின் மூலையில் எலக்ட்ரோடை பொருத்தவும். (Fig 4)

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 3




Fig 4




எலக்ட்ரோடை நகரும் திசையில் 10°-20° வரை சாய்க்கவும் (Fig 5)

Fig 5




**ஒரே இடத்தில் அதிக வெல்ட் ஆவது அல்லது கீழ்வெட்டு தோற்றம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பாக உருகிய பீடு மற்றும் உறைந்து போன பற்றவைப்பு இடத்தில் சோதிக்கவும்.**

**இவ்வாறான பிழைகள் ஏற்படும் போது சரியாக்குவதற்கு எலக்ட்ரோடு கோணத்தை மாற்றுதல் அல்லது வேகத்தை அதிகரித்தல் செய்ய வேண்டும்.**

**வெல்டை சோதித்தல் (Inspect the weld)**

வெல்டு முழுவதையும் சுத்தம் செய்யவும்.

சரியான வடிவம் மற்றும் அளவிற்கு ஃபில்லட்டை சோதிக்கவும்.

- டை இருப்புதண்டில் M10 ஸ்பிளிட் டை அமைக்கவும்.
- டை இரும்பு தண்டு கொண்டு அறுங்கோண போல்ட் உருளை சட்ட முனையின் மேல் ஸ்பிளிட் டையை அமைக்கவும். மற்றும் வெளிப்புற மறை வெட்டுதலுக்கு வலது புற திசை மற்றும் இடதுபுறதிசையில் சுற்றவும். (Fig 3)

Fig 3




- வெளிப்புற மறை வெட்டுதலின் போது அறுங்கோணதலை போல்ட் தண்டுவிற்கு 90°-க்கு டையை சரிபார்க்கவும்.
- சீராக டை ஸ்டாக் தண்டுவின் (die stock ) மேல் அழுத்தத்தினை செலுத்தி, மற்றும் வெளிப்புற மறையை வெட்டவும்.
- திருகு பிட்ச் அளவி மற்றும் இணைப்புதல் திருகு நட் கொண்டு மறையை சரிபார்க்கவும்.

**மறை வெட்டுதலின் போது வெட்டுதல் ஆயிலை (lubricant) பயன்படுத்தவும்.**

## <u>திறன் வரிசை (Skill sequence)</u>

## டைகள் பயன்படுத்தி வெளிப்புற மறையிடுதல் (External threading using dies)

**நோக்கங்கள் :** இது உங்களுக்கு அறிய உதவுவது

**• டைகள் பயன்படுத்தி வெளிப்புற மறைகள் உருவாகுதல்**

பிளாங்கின் அளவினை சரிபார்த்தல்

Blank size = Thread size - 0.1 x pitch of thread

**செயல்முறை**

டை ஸ்மாக்கில் டையினைப் பொருத்தி, டையின் முதன்மை முனையினை டைஸடாக்கின் படி அமைப்பிற்கு எதிர் திசையில் பொருத்தவும்.

**வைஸ்ஸில் நல்ல பிடிமானத்தை உறுதி செய்தலுக்கு வைஸ் கிளாம்ப் பயன்படுத்தவும்.**

**பிளாங்கின் சிறிது தேவையான நீளம் மட்டும் நீண்டு இருக்குமாறு வைஸில் பொருத்த வேண்டும்.**

பணிப்பொருளில் சேம்பர் அமைக்கவும்.(Fig 3)

டை ஸ்டாக் /மைய திருகுவை இறுக்குதல் மூலம் டை முழுவதும் திறந்திருக்கிறதனை உறுதி செய்தல். (Fig 4)

டையை ஆரம்பித்து, போல்டின் மைய கோடுவிற்கு நேராக அமைத்தல். (Fig 5)

சீராக டை ஸ்டாக் மேல் அழுத்தம் செலுத்தி மற்றும் போல்ட் சட்டத்தின் மேல் டையை முன்னேற்றி வலதுபுற திசையில் சுற்றவும்.

(Fig 5)

மெதுவாக வெட்டவும் மற்றும் சீவல் துண்டுகளை உடைக்கும் பொருட்டு குறுகிய தூரத்தில் டையை பின்னோக்கி சுற்றவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 1




Fig 2




Fig 3




Fig 4




Fig 5




**வெட்டுதல் திரவத்தை பயன்படுத்தவும்.**

வெளிப்புற திருகுகளை சரிசெய்து படிப்படியாக வெட்டின் ஆழத்தை அதிகரித்தல்.

நட்டினினை கொண்டு மறையை சரிபார்த்தல்.

திருகு நட் சரியாக இணையும் வரை வெட்டுதலை திரும்பச் செய்யவும்.

**ஒரே நேரத்தில் அதிக ஆழத்திற்கு திரட் ஏற்படுத்தும் போது டை-யினைப் பாதிக்கும்.**

**டையில் மாட்டிவுள்ள சிப் சுத்தம் செய்து மரை-யினை பாதிப்படைதலின் இருந்து பாதுகாக்கவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

# நிலையான அளவுவிற்கு டைகளைக் கொண்டு வெளிப்புற மறைகளை உருவாக்குதல் (Form external threads with dies to standard size)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **வெளிப்புற மறை வெட்டுதலுக்கு வளைவு கம்பியில் தண்டின் அளவிற்கு அரம் செய்தல்**
- **தேவையான நீளத்திற்கு பிளவு டை மற்றும் டை இருப்பு நிலை பயன்படுத்தி M14 வெளிப்புற மறையினை வெட்டுதல்**
- **திருகு பிட்ச் அளவி (screw pitch gauge) மற்றும் இணைப்புதல் திருகுநட்டினைக் கொண்டு மறையினை சரிபார்க்கவும்.**




© NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்டுள்ள அளவுவிற்கு பணிப்பொருளை சரிபார்க்கவும்.
- படத்தில் உள்ளது போல Ø 13.9 mm x 40 mm நீளத்திற்கு கொடுக்கப்பட்ட சட்ட அளவிற்கு பைலிங் செய்யவும்.
- 2 mm x 45°-க்கு இரண்டு முனைகளில் சேம்பர் ஏற்படுத்தவும்.
- பென்ச் வைஸில் 90°-ல் செய்பொருளை பிடிக்கவும்.
- டை ஸ்டாக்-இல் M14 ஸ்பிளிட் டை அமைக்கவும்.
- பணிப்பொருளின் மேல் டையை அமைக்கவும், மற்றும் சமமாக அழுத்தம் அளித்து பிறகு மறை வெட்டுதலுக்கு மெதுவாக வலதுபுற திசையில் சுற்றவும்.
- உருளைக்கு 90° டையை சரிபார்க்கவும்.
- டை ஸ்டாக் நிலையின் (die stock) மேல் சமமாக அழுத்தம் செலுத்தவும் மற்றும் உருளை தண்டுவில் டையை முன்னோக்கி செல்கையில் வலதுபுற திசையில் சுற்றவும்.
- மெதுவாக வெளிப்புற மறையினை வெட்டி மற்றும் சீவல் துண்டுகள் குறுகிய தூரத்திற்கு உடைக்கும் பொருட்டு குறுகிய தூரத்திற்கு டையை பின்னோக்கி சுற்றவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ISR Ø 14 - 65 | – | Fe310 | – | – | 1.5.70 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | FORM EXTERNAL THREADS WITH DIES TO STANDARD SIZE | TOLERANCE : ±0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1570E1 | |

- திருகுகளினை சரி செய்தல் மூலம் படிப்படியாக வெட்டுதலின் ஆழம் அதிகரித்து மற்றும் மறையின் சரியான பிட்சிற்கு மறையை வெட்டவும்.
- திருகு பிட்ச் கேஜ் **(screw pitch gauge)** கொண்டு மறையை சரிபார்த்தல்.
- திருகு நட் சரியாக இணையும் வரை மறைவெட்டுதல் செய்முறையை திரும்ப செய்யவும்.
- லேசான ஆயிலினை apply செய்யவும், மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

**மறையினை வெட்டுதலின் போது (cutting fluid) எண்ணெயினை பயன்படுத்தவும்.**

© NIMI NOT TO BE REPUBLISHED

## Nuts உற்பத்தி செய்து Bolt's உடன் பொருத்துதல் (Prepare nuts and match with bolts)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- வெளிப்புற மறைகள் வெட்டுதலுக்கு ஏற்ப சதுர கம்பியினை தேவையான அமைப்பிற்கு மாற்றுதல்.
- படத்தில் உள்ளது போல சரியான அளவு மற்றும் வடிவத்திற்கு சதுர போல்ட் மற்றும் திருகு நட் பைலிங் செய்தல்
- அறுங்கோணம் மற்றும் சதுர திருகுநட்டிற்கு டேப் டீரில் அளவுகள் தீர்மானித்தல்.
- அறுங்கோணம் மற்றும் சதுர நட்டில் உட்புறமறைகள் ஏற்படுத்த துளையிடுதல்.
- டை (die) மற்றும் டை ஸ்டாக் பயன்படுத்தி சதுர தலை போல்டின் மேல் வெளிப்புற மறையிடுதல்.
- டேப் மற்றும் டேப் ரின்ச்-ஐ பயன்படுத்தி அறுங்கோணம் மற்றும் சதுர நட்களின் மேல் உட்புற மறைகளை வெட்டுதல்.
- போல்டுகளுடன் திருகுநட்களை இணைத்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | SQUARE 25 - 68 (BOLT & NUT) | – | Fe310 | – | 2 | |
| 1 | HEX A/F 18 - 15 (NUT) | 1.5.69 TASK-2 (BOLT) | Fe310 | – | 1 | 1.5.71 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | PREPARE NUTS AND MATCH WITH BOLTS | TOLERANCE : ±0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1571E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

### பாகம் - 1 அறுங்கோண தலை நட் (Hexagonal head nut)

குறிப்பு : அறுங்கோண திருகுநட்டுடன் இணைத்தலுக்கு அறுங்கோண மரையாணி பணி 2- பயிற்சி Ex:No 1.5.69-யை குறிக்கவும்.

**அறுங்கோண திருகுநட் (Hexagonal nut)**

- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு பணிப்பொருளை சரிபார்க்கவும்.
- 18 mm பிளாட்டில் 10 mm தடிமனுக்கு அறுங்கோண நட் பைல் செய்யவும்.
- 2 mm x 30°-க்கு ஒரு முனையில் சேம்பர் செய்யவும்.
- M 10 டேப்பிற்கு டேப் டிரில் சைஸ் தீர்மானித்தல்.
- Ø 8.5 mm விட்டமுள்ள டேப் துளையின் மையம் குறிப்பிடுதல்.
- சென்டர் பன்ச் 90° கொண்டு டேப் துளை மையம் மேல் பன்ச் செய்யவும்.
- துளை மையம் பெற சென்டர் டிரில் செய்யவும்.
- அறுங்கோண திருகுநட்டில் Ø 5 mm பைலட் துளையிடவும்.
- M 10 டேப்பிற்கு Ø 8.5 mm விட்டத்தினில் துளையிடவும்.
- 2 mm x 45°-க்கு துளையின் இரண்டு முனையில் சேம்பர் செய்யவும்.
- பென்ச் வைஸில் வைஸ் கிளாம்ப் பக்க இணைப்பில் திருகு நட்டை பிடிக்கவும்.
- டேப் wrench M10 முதல் டேப் பொருத்தி மற்றும் படத்தில் உள்ளது போல உட்புற மறை வெட்டவும்.
- இதேபோல், M10 இரண்டாவது டேப், மூன்றாவது டேப் பொருத்தி மற்றும் முழு மறையை வெட்டி உருவாக்கவும்.
- திருகு பிட்ச் கேஜ் (screw pitch gauge) மற்றும் இணையான போல்டு கொண்டு மறைசெய்த துளையை சரிபார்க்கவும்.
- (Bolt and Nut) ல் மறையை சுத்தம் செய்யவும்.
- Fig 1-ல் உள்ளது போல் போல்டுடன் திருகுநட்டை இணைத்தல்.
- லேசான ஆயிலை பூசி மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பராமரிக்கவும்.

Fig 1




### பாகம் - 2 சதுர தலை போல்ட்

- 53mm அளவிற்கு சதுர கம்பியை வெட்டவும்.
- பக்கம் 24 mm-ஆகவும், 50 mm நீளம் அளவுக்கு பைல் செய்யவும்.
- Fig 2- ல் உள்ளது போல் அளவு Ø 11.9 mm x 50 mm நீளத்திற்கு பைல் செய்யவும்.
- 2 mm x 45°-க்கு பணிப்பொருள் தண்டு முனை மற்றும் தலை பக்கம் 2 x 30°-யில் சாய்வு வெட்டு (chamfer) பைல் செய்யவும்.
- 90°-க்கு பென்ச் வைஸில் சதுர தலை போல்ட் சட்டத்தை பிடிக்கவும்.
- டை ஸ்டாக்கில் M 12 பிளவு (split) டை பொருத்தவும்.
- சதுர தலை மரையாணி சட்டமுனை மேல் M 12 பிளவு டை (split die ) அமைக்கவும் மற்றும் வெளிப்புற மரையினை வெட்டவும்.

Fig 1




- திருகு நட் பொருந்தும் வரை மரை வெட்டுதல் செய்முறையை திரும்ப செய்யவும்.
- திருகு பிட்ச் கேஜ் மற்றும் இணைப்புதல் திருகு நட் பயன்படுத்தி வெளிப்புற மரையை சரிபார்க்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

**சதுர திருகு நட் (Square Nut)**

- பணிப்பொருள் அளவு 15mm-யை சரி பார்க்கவும்.
- 25 mm பக்க சதுர கம்பியில் 12mm பருமன் அளவிற்கு திருகு நட் பைல் செய்யவும்.
- 2 mm x 30°-க்கு ஒரு முனையில் சாய்வு வெட்டு சேம்பர் செய்தல்.
- M 12 டேப்பிற்கு டேப் சைஸ் கண்டறியவும்.
- மறையிடுதல் துளையின் மையத்தை 90° பன்ச் கொண்டு பன்ச் செய்யவும்.
- மையத் துளை உருவாக்கவும்.

Fig 2




- சதுர திருகுநட்டில் Ø 6 mm பைலட் துளையிடவும்.
- மறையிடுலுக்கு Ø 10.5 mm துளையிடவும்.
- 2 mm x 45°-க்கு துளையின் இரண்டு முனைகளில் சேம்பர் செய்யவும்.
- பென்ச் வைஸில் தேவையான நிலையில் திருகு நட்டை பொருத்தவும்.
- டேப் திருகுகுறடுவில் M12 முதல் டேப் பொருத்தி உட்புற மறைவெட்டவும்.
- இதேபோல், M12 இரண்டாவது டேப், மூன்றாவது டேப் பொருத்தி மற்றும் முழு உட்புறமறை உருவாக்கவும்.
- திருகு பிட்ச் அளவி மற்றும் போல்ட் கொண்டு மறை செய்த துளையை சரிபார்க்கவும்.
- மரையாணி (bolt) மற்றும் திருகுநட் (nut)-ல் மரையை சுத்தம் செய்யவும்.
- Fig 2-ல் உள்ளது போல் மரையாணியுடன் திருகு நட்டை இணைத்தல்.
- லேசாக ஆயிலினை பூசி மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI
NOT TO BE REPUBLISHED

# ஸ்டெப் பிட், ஆங்குலர் பிட், ஆங்கிள், மேற்பரப்புகள் பைலிங் செய்து பொருத்துதல் (பெவல் கேஜ் 1 டிகிரிக்கு துல்லியம்) (File and make step fit, angular fit, angle, surfaces) (bevel gauge accuracy 1 degree)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- வெர்னியர் உயர் அளவி (vernier high gauge) பயன்படுத்தி கோடுகள் குறித்தல்
- ± 0.04 mm துல்லியத்திற்கு பராமரித்து பைலிங் செய்தல்
- வெர்னியர் சாய்வு பாகைமானியை பயன்படுத்தி 45° கோணத்திற்கு குறிப்பிடுதல்
- 1° துல்லியத்திற்கு பராமரித்து கோணத்தினை பைலிங் செய்தல்
- படி மற்றும் கோணம் உருவாக்குதல், தேவையில்லாத பிசிறுகளை நீக்கி மற்றும் நிறைவு செய்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

**பாகம் - 1**

- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு பணிப்பொருளை சரிபார்க்கவும்.
- பக்க இணைத்தன்மைகள் மற்றும் செங்குத்துத்தன்மைகளை பராமரித்து 70 x 50 x 9 mm அளவிற்கு பைலிங் செய்து நிறைவு செய்யவும்.
- Fig 1-ல் உள்ளது போல் பாகம் 1-ல் அளவுகள் குறிப்பிட்டு மற்றும் பன்ச் செய்யவும்.

Fig 1




| 2 | 75 ISF 10 - 55 | – | Fe310 | – | 1 & 2 | 1.5.72 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| SCALE 1:1 | FILE AND MAKE STEP FIT, ANGULAR FIT, ANGLE, SURFACES(BEVEL GAUGE ACCURACY 1 DEGREE) | TOLERANCE : ±0.04 | TIME |
|---|---|---|---|
| | | CODE NO : FI20N1572E1 | |

- பணிப்பொருள் படத்தில் உள்ளது போல் Ø 3 விட்டமுள்ள ரிலிப் துளைகளை (relief holes) துளையிடவும்.
- Fig 2-ல் உள்ளது போல் பாகம் 1-லிருந்து மிஞ்சிய பொருள் பிரித்தெடுத்தலுக்கு தொடர் துளையிடவும்.
- வெப் சிசல் (web chisel) மற்றும் பந்துமுனை சுத்தியல் பயன்படத்தி தேவையற்ற பகுதிகளை நீக்கவும்.

Fig 2




**பாகம் - 2**

- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துத்தன்மை பராமரித்து 70 x 50 x 9 mm அளவிற்கு பைலிங் செய்யவும்.
- Fig 4-ல் உள்ளது போல் பாகம் 2-ல் குறிப்பிட்டு மற்றும் பன்ச் செய்யவும்.
- படத்தில் உள்ளது போல் Ø 3 ரிலிப் துளையிடவும்.
- Fig 5-ல் உள்ளது போல் பாகம் 2-லிருந்து பொருள் நீக்குதலுக்கு தொடர்ச்சியாக துளையிடவும்.
- வெப் சிசல் (web chisel ) மற்றும் பந்துமுனை சுத்தியலினை பயன்படுத்தி தேவையற்ற பொருளை வெட்டி நீக்கவும்.

Fig 4




- Fig 3-இல் உள்ளது போல் தேவையான பைல்கள் கொண்டு 45° கோணப் பகுதியின் துல்லியம் 1° ஆகவும், மற்ற பரப்புகளின் துல்லியம் ± 0.04 mm ஆக இருக்குமாறு பினிஸிங் செய்யவும்.

Fig 3




- வெர்னியர் காலிப்பர் மற்றும் பிவல் புரோடக்டர் கொண்டு அளவுகளை ±0.04 mm சரிபார்க்கவும்.

Fig 5




- Fig 6-ல் உள்ளது போல பல்வேறு வகையான சேஃப் எட்ஜ் பைல்களினைக் கொண்டு படத்தில் உள்ளது போல 45° கோணத்திற்கு மற்ற அளவுக்கு பைல் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவு மற்றும் வெர்னியர் பிவல் புரோடக்டர் (bevel gauge) கொண்டு கோணத்தை சரிபார்க்கவும்.
- Fig 7-ல் உள்ளது போல பாகம் 1 மற்றும் 2 இணைத்து பிட்டிங் உருக்கவும்.
- ஆயில் லேசாக apply செய்யவும் மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED







© NIMI
NOT TO BE REPUBLISHED

# எளிய திறந்த மற்றும் நகரும் பொருத்துபவைகளை உருவாக்குதல் (Make simple open and sliding fits)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- ± 0.04 mm-ன் துல்லியத்திற்குள் சமமட்டமான மற்றும் பக்க இணைப்பிற்கு சமமட்டமான மேற்பரப்புகளை பைலிங் செய்தல்
- டாங்க் மற்றும் க்ரூவ் அமைப்பினை தேவையான துல்லியத்திற்கு இணைப்பு உருவாக்க பைலிங் செய்தல்.




© NIMI
NOT TO BE REPUBLISHED

| 2 | 50 ISF 10 - 55 | - | Fe310 | - | A&B | 1.5.73 |
|---|---|---|---|---|---|---|
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | Ex. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | MAKE SIMPLE OPEN AND SLIDING FITS | TOLERANCE : ± 0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1573E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

**பாகம்- A**

- கொடுக்கப்பட்ட அளவிற்கு பணிப்பொருளை சரிபார்த்தல்.
- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துத்தன்மை பராமரித்து 50 x 48 x 9 mm அளவிற்கு பைலிங் செய்தல்.
- குறிப்பிடுதலிற்காக (marking media) வை apply செய்யவும். பணிப்பொருளை படத்தில் போல குறிப்பிடவும், மற்றும் நன்றாக தெரியுமாறு குறிப்பிடுதலை பன்ச் செய்யவும்.
- பாகம் A-ல் பணிப்பொருளில் படத்தில் உள்ளது போல Ø 3 mm ரிலிப் துளையில் துளையிடவும்.

Fig 1




- பொருளின் கோடுவினிலிருந்து 1 mm இடைவெளி விட்டு Fig 2-ல் உள்ளது போல் கோடுகளை குறிப்பிட்டு அறுத்தல் மூலம் தேவையற்ற பகுதிகளை நீக்கவும்.
- ஸ்சேப் எட்ஜ் பைலினால் 14 mm x 24 mm அளவிற்கு படத்தில் காண்பது போல் பாகம் A- பைலிங் செய்து வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுவை சரிபார்க்கவும்.

**பாகம்- B**

- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துத்தன்மையில் பராமரித்து 50 x 48 x 9 mm அளவிற்கு பைலிங் செய்யவும்.
- குறிப்பிடுதல் ஊடக பவுடர் பூசி Fig 4-ல் உள்ளது போல் குறிப்பிட்டு, பன்ச் செய்யவும்.
- பாகம் B- மேல் Ø 3 mm ரிலிப் துளையிடவும்.

Fig 2




- இதேபோல், தேவையற்ற உலோகத்தை நீக்கவும் ஏற்ப மற்றும் அளவிற்கு B (step B) பைலிங் செய்து மற்றும் (Fig 3-ல்) வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுளை சரி பார்க்கவும்.

Fig 3




Fig 4




©NIMI NOT TO BE REPUBLISHED

செயின் டிரில்லிங் செய்து தேவையற்ற பகுதிகளை அறுத்து நீக்கவும். (Fig 5)

Fig 5




- Fig 6-ல் உள்ளது போல் சமமட்டத்தன்மை மற்றும் சதுரத்தன்மையை பராமரித்து அளவு மற்றும் வடிவத்திற்கு ஏற்ப பைலிங் செய்தல்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவை சரிபார்க்கவும்.
- Fig 7-ல் உள்ளது போல் பாகம் 'A' மற்றும் 'B' பொருத்தி இணைக்கவும்.
- மேறப்ரப்புகளில் தேவையில்லாத பிசிறுவை நீக்கவும்.
- ஆயில் பூசி, அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

Fig 6




Fig 7




© NIMI
NOT TO BE REPUBLISHED

## துளை பெரிதாக்குதல் மற்றும் உட்புறவிட்டத்தினை அதிகரித்தல் (Enlarge hole and increase internal dia)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- படத்தினில் உள்ளது போல துளையிடும் மையங்களை குறிப்பிடுதல்.
- மைய துளை மற்றும் பைலட் துளையிடல்
- Ø 25 mm-க்கு துளைகளை பெரிதாக்குதல்.




© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 65 ISF 10 - 82 | - | Fe310 | - | - | 1.5.74 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | Ex. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | ENLARGE HOLE AND INCREASE INTERNAL DIA | TOLERANCE : ± 0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1574E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்ட அளவிற்கு பணிப்பொருளை சரிபார்த்தல்.
- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்தன்மை பராமரித்து மற்றும் 80x63x9 mm அளவிற்கு பைலிங் செய்தல்.
- Marking media வை apply செய்யவும். மைய கோடுகள் குறிப்பிடவும், மற்றும் துளையின் மையத்தை அமைக்கவும்.
- பிரிக் துளையிடும் கருவி (prick punch) 30° பயன்படுத்தி கோடுகளின் மேல் பன்ச் செய்யவும். அளவுகோல் பயன்படுத்தி பகுப்பானில் (divider) 12.5 mm அமைத்து மற்றும் Fig 1-ல் உள்ளது போல் Ø 25 mm விட்டம் வரையவும்.

Fig 1




- துளையிடுதல் இயந்திர வைஸின் மேல் பணிப்பொருளை பொருத்தவும்.
- துளைக்கருவி பிடிப்பானில் மையதுளைக்கருவி பொருத்தவும் மற்றும் பணிப்பொருள் மையத்தில் துளையிடவும். (Fig 2)

Fig 2




- துளையிடுதல் இயந்திரத்தில் Ø 6 mm துளைக்கருவி பொருத்தவும், மற்றும் மைய துளையில் பைலட் (pilot hole) துளையிடவும். (Fig 3)

Fig 3




- துளைக்கருவியின் விட்டத்திற்கு ஏற்ப இயந்திர வேகத்தை அமைக்கவும்.
- இதே போல், துளையிடுதல் இயந்திரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வெவ்வேறு விட்டங்களில் Ø 10 mm, Ø 16 mm மற்றும் Ø 20 mm துளைக்கருவிகள் பொருத்தி (Fig 4-ல்) துளைகளை பெரிதாக்கவும்.
- இறுதியாக படம் 5-ல் உள்ளதுபோல Ø 25 mm-க்கு துளையை பெரிதாக்கவும்.

Fig 4




- பணிப்பொருளின் மேல் பைலிங் செய்து மேற்பரப்புகளில் தேவையில்லாத பிசிறுவை நீக்கவும்.
- மேற்பரப்பில் ஆயில் பூசி அதனை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

**துளையிடும் போது குளிர்விப்பான் (cutting fluid/coolant oil) பயன்படுத்தவும்.**

Fig 5




© NIMI NOT TO BE REPUBLISHED

## உருளையின் மேற்பரப்பில் பைலிங் செய்தல் (File cylindrical surfaces)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- பென்ச் வைஸில் உலோக உருளை பிடிக்கவும்
- ± 0.04 mm துல்லியத்திற்கு பராமரித்து உருளையின் மேற்பரப்பில் பைலிங் செய்தல்
- பணிப்பொருளில் பிசிறுகளை நீக்கி நிறைவு செய்தல்.




© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | Ø28 - 80 | – | Fe310 | – | – | 1.5.75 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | FILE CYLINDRICAL SURFACES | TOLERANCE : ±0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1575E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்ட அளவிற்கு பணிப்பொருளை சரிபார்க்கவும்.
- 75 mm நீளம் பராமரித்து சமமட்டத்தன்மை மற்றும் சதுரத்தன்மைக்கு உருளையின் இரண்டு முனைகளை பைலிங் செய்தல்.
- டிரைஸ்கொயரைக் கொண்டு சமமட்டத்தன்மை மற்றும் சதுரத்தன்மையை சரிபார்த்தல்.
- உருளைக் கம்பியின் இரண்டு முகப்புகளில் Marking media-வை apply செய்யவும்.
- Fig 1-ல் உள்ளது போல உருளை வளைவினை பைலிங் செய்தலுக்கு பகுப்பான் (divider) மற்றும் அளவுகோலைப் (steel rule) பயன்படுத்தி இரண்டு முகப்புகளின் மேல் Ø 25 mm விட்டத்தை குறித்தல்.

Fig 1




- குறிக்கப்பட்ட விட்டத்தின் மேல் நன்றாக தெரியுமாறு பன்சிங் செய்யவும்.
- வைஸில் உருளைக் பணிப் பொருளைப் மற்றும் மேலும் கீழும் முன்னும் பின்பும் (see saw) இயக்கத்தில் வெவ்வேறு தரங்களின் பிலேட் பைல் பயன்படுத்தி Ø 25 mm-க்கு பணிப்பொருள் பைலிங் செய்தல் வேண்டும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு பணிப் பொருளின் நீளம் மற்றும் விட்டத்தை சரிபார்த்தல்.
- பணிப்பொருளில் Ø 25 mm-க்கு வட்டமான வளைவினை பைலிங் செய்ய வேண்டும்.
- வெளிப்பக்க மைக்ரோமீட்டரைக் (outside micrometer) கொண்டு விட்டத்தை சரி பார்க்கவும்.
- உருளைக் கம்பியின் இரண்டு முனைகளில் தேவையில்லாத பிசிறுவை நீக்கவும்.
- லேசான ஆயிலை மேற்பரப்பில் apply செய்தபின் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI
NOT TO BE REPUBLISHED

# வளைவு அமைப்புக் கொண்ட திறந்த பொருத்துதலை செய்தல் (Make open fitting of curved profiles)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **± 0.04 mm-ன் ஓர் துல்லியத்திற்கு சமதளத்திற்கு மற்றும் பக்க இணையிற்கு மேற்புறங்கள் பைலிங் செய்தல்**
- **படத்தில் கொடுக்கப்பட்டதை போல வளைவுகள் குறித்தல்**
- **அளவு மற்றும் வடிவத்திற்கு ஆர மற்றும் வளைவுகள் பைலிங் செய்தல்**
- **வளைவு அமைப்புக்களைக் பொருத்தி இணைத்தல்.**




© NIMI NOT TO BE REPUBLISHED

| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 65 ISF 10 - 55 | – | Fe310 | – | 2 | 1.5.76 |
| 1 | 65 ISF 10 - 60 | – | Fe310 | – | 1 | 1.5.76 |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | MAKE OPEN FITTING OF CURVED PROFILES | TOLERANCE : ±0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1576E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- அளவுகோலைப் பயன்படுத்தி பணிப்பொருளின் அளவினை சரிபார்க்கவும்.

**பாகம் 1**

- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துதன்மை பராமரித்து 64 x 57 x 9 mm மொத்த அளவிற்கு பைலிங் செய்யவும்.
- Marking media-வை apply செய்யவும். பணிப்பொருளில் படத்தில் உள்ளவாறு குறிக்கவும்.
- Fig 1-ல் உள்ளவாறு நன்றாக தெரியுமாறு குறிப்பிடுதல்களை பன்சிங் செய்யவும்.

Fig 1




- தேவையற்ற பகுதிகளை ஆக்சாயிங் செய்து நீக்கி, பைலிங் செய்து வடிவத்திற்கு செய்யவும். (Fig 2)

Fig 2




- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவினை சரி பார்க்கவும்.
- ஆக்சாயிங் மூலம் ரிலிப் பள்ளங்களை ஏற்படுத்தவும்.
- வளைவு பக்கம் மேல் உலோகத்தின் கருமையாக்கப்பட்ட தேவையற்ற பகுதியை அறுத்து நீக்கவும். (Fig 4) மற்றும் வளைவினை பைலிங் செய்யவும் பிறகு மாதிரி கொண்டு வளைவுள்ள வளைவுவை சரிபார்க்கவும். மற்றும் Fig 5-ல் உள்ளது போல் வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுகளை சரிபார்க்கவும்.

Fig 3




Fig 4




Fig 5




**பாகம் 2**

- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துதன்மையை பராமரித்து 64 x 51 x 9 mm அளவிற்கு பைலிங் செய்யவும்.
- பணிப்பொருளில் படத்தில் உள்ளது போல மார்ச்கிங் மீடியா பூசி அளவுகளை குறிக்கவும்.
- Fig 6-ல் உள்ளது போல பாகம் 2-ல் நன்றாக தெரியுமாறு குறிப்பிடுகள் மீது பன்சிங் செய்யவும்.
- Fig 7-ல் உள்ளது போல மிஞ்சிய உலோகத்திற்கு தொடர் துளையிடவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 6




Fig 7




Fig 8




- தேவையற்ற உலோகத்தின் கருமையாக்கப்பட்ட பகுதியை நீக்கவும் மற்றும் Fig 8-ல் உள்ளது போல் வடிவத்திற்கு ஆக்சாயிங் செய்யவும்.
- இதேபோல், hacksaw வை கொண்டு வளைவாக வளைந்த பக்கம் மேல் தேவையற்ற உலோகத்தினை நீக்கவும், மற்றும் படம் 9-ல் உள்ளது போல் வளைவுவை பைலிங் செய்யவும்.
- Fig 10-ல் உள்ளது போல் மாதிரி கொண்டு வளைவு மற்றும் வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவை சரி பார்க்கவும்.
- இரண்டு பக்கங்களில் Fig 11 மற்றும் 12-ல் உள்ளது போல் பாகம் 1 மற்றும் பாகம் 2 இணைக்கவும்.

Fig 9




Fig 10




Fig 11




Fig 12




© NIMI NOT TO BE REPUBLISHED

## முன்பே துளையிடப்பட்ட அமைப்பைக் கொண்டு துளைக்கருவியின் அமைவிடத்தினில் திருத்தம்செய்தல் (Correction of drill location by binding previously drilled hole)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- துளை அளவுவை விட பெரியதான அளவு உருளைக் கம்பியினை தயார் செய்தல்
- டைட் பிட்-ஆக துளையில் பிளக் செய்தல்.
- சமதளமான மற்றும் சதுரமான இரண்டு பக்கங்கள் மேல் பிளக் செய்த மேற்பரப்யை பைலிங் செய்யவும்.
- மைய கோடுகளுக்கு இணையாக துளை அமைவிடத்தை குறிப்பிடுதல்.
- பைலட் துளையிடுதல் மற்றும் மைய கோடுகளுக்கு இணையாக துளை சரி செய்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 50 ISF 20 - 75 | – | Fe310 | – | 1 | 1.5.77 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | CORRECTION OF DRILL LOCATION BY BINDING PREVIOUSLY DRILLED HOLE | TOLERANCE : ±0.04 | TIME : |
|  | | CODE NO : FI20N1577E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்ட பொருளில் துளை அளவை சரிபார்க்கவும். (Fig 1)

Fig 1




- துளையில் இருபக்கங்களில் சேம்பர் ஏற்படுத்தவும் 2×45°.
- துளையின் உண்மையான அளவில் 0.050 mm பெரியதாக உருளைக் கம்பி தயார் செய்யவும். (16.000 + 0.050 = 16.050 mm)
- பந்துமுனை (Ballpein hammer) சுத்தியலைப் பயன்படுத்தி தயார் செய்த உருளைக் கம்பியினை கொண்ட இறுக்கமான பொருத்துதலைப் போல துளையினை பிளக் செய்யவும். (Fig 2)

Fig 2




- பிளக் செய்து பொருத்திய உலோக உருளையைஅதன் அமைப்பினுடன் வெல்டிங் செய்து அந்த பகுதியின் உறுதித்தன்மையை சோதித்தறியவும்.
- சமதளமாக மற்றும் சதுரத்திற்கு இரண்டு பக்கங்கள் மேல் பைலிங் செய்யவும்.
- மேற்பரப்பின் மேல் Marking media-வை apply செய்யவும்.
- வெர்னியர் height guage கொண்டு துளையிட்ட துளையிற்கு மையம் குறிக்கவும். (Fig 3)
- 90° சென்டர் பன்ச் கருவி கொண்டு துளை மையம் குறித்ததின் மேல் பன்சிங் செய்யவும்.
- மெஷினில் மைய துளைக்கருவியை பொருத்தி மைய துளையிடும் துளை உருவாக்கவும்.
- Ø 6 mm துளைக்கருவி பொருத்தி பைலட் துளையிடவும். (Fig 3)

Fig 3




- இதேபோல், Ø 9 mm, Ø 13 mm துளைக்கருவி பொருத்தி துளைகளைப் பெரிதாக்கவும்.
- இறுதியாக Ø 16 mm துளைக்கருவி பொருத்தி துளையினைப் பெரிதாக்கவும்.
- பைலிங் செய்வதனை நிறைவு செய்து, தேவையில்லாத பிசிறுவை நீக்கி, சுத்தம் செய்து

Fig 4




மற்றும் வெர்னியர் காலிப்பர் கொண்டு சரிபார்க்கவும்.

- லேசான ஆயிலினை மேற்புரத்தில் பூசி மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

## உட்புற சதுர பொருத்துதலை உருவாக்குதல் (Make inside square fit)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- படத்தில் உள்ளது போல அளவு கோடுகளை குறித்தல்
- தொடர்ச்சியாக துளையிட்டு, (Chain drill) அறுத்து மற்றும் செதுக்குதல் மூலம் அதிகப்படியான உலோகத்தினை நீக்குதல்
- ± 0.04 mm பராமரித்து உள்சதுர வடிவத்தினை பைலிங் செய்தல்
- உள்சதுர வடிவத்தில் சதுரத்தினைப் பொருத்துதல்.




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 35 ISF 12- 35 | – | Fe310 | – | 2 | 1.5.78 |
| 1 | 75 ISF 12 - 75 | – | Fe310 | – | 1 | 1.5.78 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | MAKE INSIDE SQUARE FIT | TOLERANCE : ±0.04 | TIME : |
| | | CODE NO : FI20N1578E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

**பாகம் 1**

- கொடுக்கப்பட்ட பணிப்பொருள் அளவினை சரிபார்த்தல்.
- ± 0.04mm துல்லியத்திற்கு பராமரித்து 70x70x11 mm மொத்த அளவிற்கு சமதளமான மற்றும் சதுர மேற்பரப்புகள் மேல் ரஃப் பைல் (Rough file) மற்றும் (Smooth file) செய்யவும்.
- பணிப்பொருளில் படத்தைப் போல பாகம் 1-ல் அளவுகள் குறித்து பன்சிங் செய்யவும்.
- துளையிடுதல் இயந்திர வைஸில் பாகம் 1-ஐ பிடித்து. மற்றும் படம் 1-ல் உள்ளது போல் அதிகப்படியான உலோகம் நீக்குதலுக்கு தொடர்ச்சியான துளையிடவும்.

Fig 1




**துளைக்கருவியின் சுற்றளவில் குறியிடப்பட்ட குறிகளைத் தொடக்கூடாது.**

- படம் 2-ல் உள்ளதுபோல வெப் உளி மற்றும் Ball pein சுத்தியல் பயன்படுத்தி தொடர்ச்சியாக துளையிட்ட பாகத்தை வெட்டி நீக்கவும்.

**பாகம் 2**

- ± 0.04 mm துல்லியத்திற்கு பராமரித்து 30x30x11 mm அளவிற்கு அரம் செய்தல்.
- டிரைஸ்கொயர் கொண்டு சமதளத்தன்மை மற்றும் சதுரத்தன்மையை சரிபார்க்கவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுவை சரிபார்க்கவும்.
- படம் 4-ல் உள்ளது போல் பாகம் 1-னுள் பாகம் 2-ஐ இணைக்கவும்.
- பிலேட் ஸ்மூத் பைலிங் செய்து பாகம் 1 மற்றும் 2-ல் பினிஸிங் செய்யவும். அனைத்து மேற்பரப்புகள் மற்றும் மூலைகளில் தேவையில்லாத பிசிறுவை நீக்கவும்.

Fig 2




- ± 0.04 mm-ன் துல்லியத்திற்கு பராமரித்து பல்வேறு தரங்களினால் ஆன சேஃப் எட்ஜ் பைலினைக் கொண்டு பைலிங் செய்து, அதன் அளவுகளை வெர்னியர் காலிப்பர்க் கொண்டு சரிபார்க்கவும்.
- நான்கு உட்புற மூலைகளில் ஆக்சாயிங் கொண்டு ரிலிப் க்ரூவ் ஏற்படுத்தவும்.

Fig 3




- லேசான ஆயிலினை மேற்பரப்பில் பூசி அதனை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

Fig 4




© NIMI NOT TO BE REPUBLISHED

## நகரும் ‘T’ பொருத்துதலை உருவாக்குதல் (Make sliding ‘T’ fit)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை
- **± 0.04 mm துல்லியத்திற்கு பராமரித்து சமதளமான மற்றும் சதுரத்திற்கு மேற்பரப்புகளை பைலிங் செய்தல்**
- **படத்தில் உள்ளது போல அளவு கோடுகள் குறிப்பிடுதல்**
- **அளவு, வடிவத்திற்கு பைலிங் செய்தல் மற்றும் நகருதலைப் பொருத்துதல்.**




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 65ISF15-65 | - | Fe 310 | - | - | 1-6-79 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | MAKE SLIDING 'T' FIT | TOLERANCE ±0.04mm | TIME: |
| | | CODE NO. FI20N1679E1 | |

© NIMI
NOT TO BE REPUBLISHED

## வேலையின் வரிசை (Job sequence)

- அளவுகோல் பயன்படுத்தி பணிப்பொருளின் அளவை கொடுக்கப்பட்டுள்ள படத்துடன் ஒப்பிட்டு சரி பார்க்கவும்.

**பாகம் 1**

- ± 0.04 mm-ன் துல்லியத்திற்கு பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துத் தன்மையை பராமரித்து 62x60x14 mm-ன் மொத்த அளவுக்கு பைலிங் செய்து மற்றும் நிறைவு செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.
- Marking media வை apply செய்து படத்தில் உள்ளதைப் போல குறிப்பிடவும் மற்றும் படம் 1-ல் உள்ளது போல் நன்றாக தெரியுமாறு பன்சிங் செய்யவும்.

Fig 1




**பாகம் 2**

- ± 0.04 mm-ன் துல்லியத்திற்கு பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்துத் தன்மையை பராமரித்து 62x60x14 mm அளவிற்கு பைலிங் செய்யவும்..
- Marking media வை apply செய்து, படம் 4-ல் உள்ளது போல அளவு கோடுகளை குறிப்பிட்டு பன்சிங் செய்யவும்.
- ஆக்சாயிஸ் செய்து படம் 5-ல் உள்ளது போல அதிகளவு உலோகத்தினை சிசல் கொண்டு செதுக்கி மற்றும் பைலிங் செய்யவும். (படம் 6)
- ஆக்சாயிஸ் செய்து படம் 2-ல் உள்ளது போல் பணிப்பொருளின் தேவையற்ற உலோகத்தின் கருமை செய்த பகுதியை நீக்கவும்

Fig 2




- இதேபோல் மற்ற பக்கத்தில் தேவையற்ற உலோகத்தை ஆக்சாயிஸ் செய்து நீக்கவும் வெர்னியர் காலிபர் கொண்டு அளவை சரி பார்க்கவும். (படம் 3)

Fig 3




- படம் 6-ல் உள்ளது போல சமதளத்தன்மை மற்றும் சதுரத்தன்மை பராமரித்து பைலிங் செய்யவும்.
- பாகம் 1 மற்றும் 2 இணைத்து படம் 7-ல் உள்ளது போல நகருதலை செய்து பார்க்கவும்.
- பாகம் 1 மற்றும் 2 நிறைவு செய்து பணிப்பொருளின் அனைத்து மேற்பரப்புகள் மற்றும் மூலைகளில் தேவையில்லாத பிசிறுகள் நீக்கவும்.
- லேசான ஆயிலை மேற்பரப்பில் apply செய்து மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

Fig 5




© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 4




Fig 6




Fig 7




© NIMI
NOT TO BE REPUBLISHED

# திறந்தநிலை ஆங்குலர் மற்றும் நகரும் பரப்பு ஆகிய ஒருங்கிணைந்த பகுதிகளை பைலிங் செய்து பொருத்துதல் (File fit - combined, open angular and sliding sides)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **± 0.04 mm-ன் துல்லியத்திற்கு சமதளமான மற்றும் சதுர மேற்பரப்புக்கு பைலிங் செய்தல்**
- **படத்தில் உள்ளது போல அளவுகள் குறித்தல்**
- **படத்தில் உள்ளது போல சமமட்டமான மற்றும் கோணமான மேற்பரப்புகளை பைலிங் செய்தல்**
- **வெர்னியர் சாய்வு பாகைமானியைப் (Vernier bevel protector) பயன்படுத்தி கோணத்தை அளவிடுதல்**
- **திறந்த நிலை ஆங்குலர் மற்றும் நகரும் பரப்புகளைப் பொருத்தி நிறைவு செய்து மற்றும் தேவையில்லாத பிசிறுகளை நீக்குதல்.**




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 50ISF10-80 | - | Fe 310 | - | 1&2 | 1-6-80 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | **FILE FIT-COMBINED ,OPEN ANGULAR AND SLIDING SIDES** | TOLERANCE<br>LINEAR ±0.04mm<br>ANGLE ±30 minutes | TIME: |
| | | CODE NO. FI20N1680E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- பணிப்பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- பக்க இணைத்தன்மை மற்றும் செங்குத்து தன்மையினை பராமரித்து 78 x 48 x 9 mm மொத்த அளவிற்கு பாகம் A மற்றும் B பைலிங் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுகளை சரி பார்க்கவும்.
- Marking media வை apply செய்யவும் மற்றும் பணிப்பொருளை படத்தில் உள்ளது போல பாகம் A மற்றும் B-ன் மேல் அளவு குறிப்பிடவும்.
- பாகம் A மற்றும் B மேல் நன்றாக தெரியுமாறு குறிப்பீடுகள் மீது பன்சிங் செய்யவும்.
- பாகம் A-ல் தேவையற்ற உலோகத்தினை அறுத்து நீக்கவும் மற்றும் படம் 1-ல் உள்ளது போல ± 0.04 mm துல்லியத்திற்கு பராமரித்து அளவு மற்றும் வடிவத்திற்கு ஏற்ப 30° கோணத்திற்கு பைலிங் செய்யவும்.

Fig 1




- பாகம் 'B'-ல் ரிலிப் துளை Ø 3 mm துளையிடவும்.
- பாகம் Bலில் உள்ளது போல பாகம் 'B'-ல் தேவையற்ற உலோகத்தை தொடர்ச்சியாக துளையிட்டு, நீக்கவும் மற்றும் அதன் அளவு வடிவத்திற்கு பைலிங் செய்யவும். (படம் 2)

Fig 2




- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவையும் மற்றும் வெர்னியர் சாய்வு பாகைமானி கொண்டு கோணங்களை சரி பார்க்கவும்.
- பாகம் A மற்றும் B மேல் பைலிங் செய்து மற்றும் அனைத்து மூலைகளில் தேவையில்லாத பிசிறுவை நீக்கவும்.
- படம் 3-ல் உள்ளது போல பாகம் A மற்றும் B இணைக்கவும்.
- லேசாக ஆயிலை மேற்பரப்பில் பூசி அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

Fig 3




©NIMI NOT TO BE REPUBLISHED

# திறந்தநிலை கோண அமைப்புகளை 30’ (minutes) துல்லியத்திற்கு உட்புற கோணங்களை பைலிங் செய்து பொருத்துதல் (File internal angles 30 minutes accuracy open, angular fit)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **± 0.04 mm**-ன் துல்லியத்துனுள் பக்க இணை மற்றும் சதுர மேற்பரப்புகளை பைலிங் செய்தல்
- படத்தில் உள்ளவாறு அளவு மற்றும் கோணங்களை குறித்தல்
- படத்தில் உள்ளதை போல சமதளமான மற்றும் கோணமான மேற்பரப்புகள் பைலிங் செய்தல்
- **30’ minutes** ன் ஓர் துல்லியத்திற்கு வெர்னியர் சாய்வு பாகைமானி பயன்படுத்தி கோணத்தை சரி பார்த்தல்
- படத்தைப்போல கோணமான மேற்பரப்புகளை பொருத்துதல், பணிப்பொருளை நிறைவு செய்தல் மற்றும் தேவையில்லாத பிசிறுகளை நீக்குதல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 50ISF10 - 80 | – | Fe310 | – | 1&2 | 1.6.81 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE : 1:1 | FILE INTERNAL ANGLES 30 MINUTES ACCURACY OPEN , ANGULAR FIT | TOLERANCE LINEAR ±0.04 mm ANGLE ±30 | TIME: 15Hrs |
| | | CODE NO: FI20N1681E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்டுள்ள பணிப்பொருளின் அளவினை சரி பார்க்கவும்.
- சமதளமான மற்றும் சதுரத்தன்மை பராமரித்து 74 x 47 x 9 mm மொத்த அளவிற்கு பாகம் 1 மற்றும் 2 பைலிங் செய்தல்.
- மேற்பரப்பில் Marking media வை apply செய்து, படத்தில் உள்ளது போல பாகம் 1 மற்றும் 2 மேல் அளவுகள் குறித்தல்.
- பாகம் 1 மற்றும் 2 மேல் நன்றாக தெரியுமாறு குறிப்பிடுகளில் பன்சிங் செய்யவும்.
- பாகம் 1 மற்றும் 2-ல் Ø 3 mm ரிலிப் துளைகள் துளையிடவும்.
- பாகம் 1-ல் தேவையற்ற உலோகத்தை Hacksawing கொண்டு அறுத்து நீக்கவும் மற்றும் Fig 1-ல் உள்ளவாறு ± 0.04 mm துல்லியத்தை பராமரித்து அளவு வடிவத்திற்கு மற்றும் 30' minutes துல்லியத்திற்கு கோணத்தை பைலிங் செய்யவும்.

Fig 1




- பாகம் 2-ல் தேவையற்ற உலோகத்தை தொடர்ச்சியாக துளையிட்டு, அறுத்து நீக்கவும் மற்றும் படம் 2-ல் உள்ளது போல அளவு மற்றும் வடிவத்திற்கு பைலிங் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவினை சரி பார்க்கவும் மற்றும் வெர்னியர் சாய்வு பாகைமானி (vernier bevel protector) கொண்டு கோணங்களை சரி பார்க்கவும்.

Fig 2




- படம் 3-ல் உள்ளது போல பாகம் 1 மற்றும் 2 இணைக்கவும்.

Fig 3




- ஆயிலினை மேற்பரப்பில் பூசி மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

## 90° அல்லாத கோணங்களுக்கு ஸ்லைடிங் தன்மை கொண்ட பொருத்துதலை உருவாக்குதல் (Make sliding fit with angles other than 90°)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **± 0.04 mm மற்றும் ± 30' minutes -யின் துல்லியத்தினுள் சமமட்டமான மற்றும் கோணமான மேற்பரப்புகளை பைலிங் செய்தல் மற்றும் நிறைவு செய்தல்**
- **படத்தில் உள்ளவாறு அளவுகள் குறிப்பிடுதல் மற்றும் துளையிடுதல்**
- **கவுன்டர் சிங் திருகுகள் கோர்த்திணைப்பிற்கு உட்புற மறை வெட்டுதல்**
- **திருகுகள் மற்றும் டுவல் பின்கள் பயன்படுத்தி தயார் செய்ய பாகங்களை கோர்த்திணைத்தல்**
- **ஸ்லைடிங் பொருத்ததலுக்கு தேவையான பாகங்களை ஒருங்கினைத்தல்.**




| 2 | AM5-15IS:1365 | CSK SCREW | 30CB | | 6 | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 4H8x20IS:2393 | CYLINDRICAL PIN | 40CB | | 5 | |
| 1 | 35ISF12-85 | SLIDING PLATE | Fe310 | | 4 | |
| 2 | 25ISF12-85 | BEVELED SIDE PLATE | Fe310 | | 2&3 | |
| 1 | 65ISF12-85 | BASE PLATE | Fe310 | – | 1 | 1.6.82 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | MAKE SLIDING FIT WITH ANGLES OTHER THAN 90° | TOLERANCE ±0.04 mm | TIME: |
| | | CODE NO: FI20N1682E1 | |

© NIMI NOT TO BE REPUBLISHED




© NIMI
NOT TO BE REPUBLISHED

| | | | |
|---|---|---|---|
| SCALE 1:1 | BASE PLATE & BEVELED SIDE PLATES | DEVIATIONS | TIME |
| | | CODE NO. | FI20N1682E2 |

## வேலையின் வரிசை (Job sequence)

- அதனுடைய அளவிற்கு பணிப்பொருளின் அளவுகளை சரி பார்க்கவும்.
- ±0.04 mm-ன் துல்லியத்தை பராமரித்து மொத்த அளவுகளுக்கு பாகம் 1, 2, 3 மற்றும் 4-ன் பொருளை 3 பைலிங் செய்தல்.
- பாகம் 1, 2, 3 மற்றும் 4 மேற்பரப்புகளின் மேல் குறிப்பிடுதலுக்கு ஊடக பவுடரை பூசவும் மற்றும் படத்தில் உள்ளது போல கோடுகளைக் குறிக்கவும்.
- நன்றாக தெரியுமாறு குறிப்பிடுகளை பன்சிங் செய்யவும்.
- பாகம் 2, 3 மற்றும் 4-ல் அறுத்து மற்றும் பைலிங் செய்யவும், பணிப்பொருளில் படத்தில் உள்ளது போல அளவு மற்றும் வடிவத்திற்கு பைலிங் செய்தல்.
- படம் 1-ல் உள்ளது போல பக்க இணை இறுக்கிகளைக் கொண்டு துளையிடுதல் இயந்திர மேஜையில் ஒரு மிக்க பாகம் 1, 2, 3 இறுக்கி மற்றும் கோர்த்திணைத்தல்.

Fig 1




- துளையிடுதல் இயந்திரத்தில் Ø 3.8 mm துளைக்கருவியினை பொருத்தவும் மற்றும் முழு நீள துளையிடவும்.
- டேப் wrench இல் Ø 4 mm ஹேண்ட் ரீமர் பொருத்தவும் டவல் பின் துளையை ரீம் செய்யவும்.
- ரீம் செய்த துளையை சுத்தம்செய்து பிறகு Ø 4 mm டவல் பின் பொருத்தவும்.
- இதேபோல், ஒன்றன் பின் ஒன்றாக மற்ற டவல்பின் துளைகள் துளையிட்டு, மற்றும் ஒவ்வோன்றாக துளையிட்ட துளையை ரீம் செய்து, மற்றும் கோர்த்திணைத்தலில் பாதிப்பில்லாமல் டவல் பின்களை பொருத்தவும்.
- துளைக்கருவி பிடிப்பான் மூலம் Ø 4.2 mm துளைக்கருவி, பொருத்தி கவுன்டர் சிங்க் திருகு உட்புற மறைகளுக்கு துளையிடவும்.
- பாகங்கள் 1, 2, 3 மற்றும் 4 கோர்த்திணைத்தலை பிரித்தெடுத்து, கவுன்டர் சிங் கருவி பயன்படுத்தி பாகம் 1-ல் இரண்டு முனைகள் மரை செய்தல் துளைகளில் சேம்பர் செய்யவும்.
- பாகம் 2 மற்றும் 3-ல் CSK திருகுவிற்கு Ø 5.5 mm துளையிடவும்.
- பாகம் 2 மற்றும் 3-ல் கவுன்டர் சிங்க் தலை திருகுகளை அமைத்தலுக்கு துளைகளை கவுன்டர் சிங்க் செய்யவும்.
- பென்ச் வைஸில் பாகம் 1-யை பிடிக்கவும்.
- M5 ஹேண்ட் டேப் மற்றும் டேப் திருகுறடு பயன்படுத்தி உட்புற மறையை வெட்டவும்.
- தேவையில்லாத பிசிறுகளில்லாமல் மரைகளை சுத்தம் செய்யவும்.
- பணிப்பொருளை படத்தில் உள்ளது போல அளவு மற்றும் வடிவத்திற்கு பாகம் 2, 3 மற்றும் 4-னை பைலிங் செய்யவும், மற்றும் வெர்னியர் காலிப்பர் மற்றும் வெர்னியர் சாய்வு பாகைமானி கொண்டு அளவுகளை சரி பார்க்கவும்.
- டவல் பின்கள் மற்றும் கவுன்டர் சிங்க் திருகுகளினுடே பணிப்பொருளை படத்தில் உள்ளது போல் பாகம் 1, 2, 3 மற்றும் 4 கோர்த்திணைக்கவும்.
- படம் 2-ல் உள்ளதுபோல கோர்த்திணைத்தலில் பாகம் 4 பொருத் தி மற்றும் ஸ்லைடு/நகர்த்தி பார்க்கவும்.
- கோர்த்திணைப்பிலிருந்து அனைத்து பாகங்கள் பிரித்தெடுக்கவும்.
- பாகம் 1, 2, 3 மற்றும் 4 மேல் பைலிங் செய்து நிறைவு செய்யவும் மற்றும் பணிப்பொருளின் அனைத்து மூலைகளில் தேவையில்லாத பிசிறுவை நீக்கவும்.
- பணிப்பொருளை படத்தில் உள்ளது போல ஒருமித்து அனைத்து பாகங்களை திரும்ப கோர்த்திணைக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 2




- லேசாக ஆயிலினை மேற்பரப்பில் தடவி மற்றும் அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI
NOT TO BE REPUBLISHED

# சமமட்டமான மேற்பரப்புகள், வளைவான மேற்பரப்புகள் மற்றும் பக்க இணை மேற்பரப்புகள் ஸ்கிரேப் செய்தல் மற்றும் பரிசோதித்தல் (Scrap on flat surfaces, curved surfaces and parallel surfaces and test)

**நோக்கங்கள்:** இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **± 0.04 mm** துல்லியத்திற்கு சமதளமான மற்றும் சதுர மேற்பரப்புகள் பைலிங் செய்யவும்
- ப்ரஷியன் ஃப்ளூவினைப் பயன்படுத்தி சமதளமான மற்றும் வளைவான மேற்பரப்புகள் மேல் உள்ள உயர் புள்ளியிடல்களை கண்டுபிடித்தல்
- சமதளமான, வளைவான மேற்பரப்புகளின் மேல் சுரண்டுதல் மற்றும் சோதித்தல்.




© NIMI
NOT TO BE REPUBLISHED

| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 100ISF12-100 | | Fe310 | - | TASK-1 | 1.6.83 |
| 1 | 100ISF20-50 | - | Fe310 | - | TASK-2 | 1.6.83 |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | SCRAP ON FLAT SURFACES , CURVED SURFACES AND PARALLEL SURFACES AND TEST | TOLERANCE ±0.04 mm | TIME : |
| | | CODE NO. FI20N1683E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

செய்ய வேண்டிய வேலை 1 : **சமதளமான மேற்பரப்பின் மேல் ஸ்கிராபிங் செய்தல்**

- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு பணிப்பொருளை சரிபார்க்கவும்.
- சமதளத்தன்மை மற்றும் சதுரத்தன்மை பராமரித்து 96x96x10 mm அளவிற்கு உலோகத்தினை பைலிங் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுவை சரி பார்க்கவும்.
- மென்மையான துணி கொண்டு சர்பேஸ் பிலேட் மேற்பரப்புவை சுத்தம் செய்யவும்.
- சர்பேஸ் பிலேடின் மேல் சீராக ப்ரஷியன் ஃப்ளுவினைப் பூசவும்.
- சர்பேஸ் பிலேடின் மேல் பணிப்பொருளை வைத்து லேசாக முன்பின் நகர்த்தவும்.
- பின் பணிப்பொருளை எடுக்கவும் சமதள பரப்பின் மேல் நீல குறிப்பிடுகளை பார்க்கவும்.
- பென்ச் வைஸில் பணிப்பொருளை பிடிக்கவும்.
- பிலேட் ஸ்கிராப்பர் (scraper) பயன்படுத்தி பணிப்பொருளின் சமதளத்தின் மேல் உயர் இடநீலப்புள்ளிகளை சுரண்டச் செய்து நீக்கவும். (படம் 1)
- தேவையில்லாத பிசிறுகள் நீக்குதலுக்கு மென்மையான துணி கொண்டு சுரண்டச் செய்த மேற்பரப்பை துடைத்தெடுக்கவும்.

Fig 1




- திரும்பவும், ப்ரஷியின் நீலம் பயன்படுத்திய மேற்பரப்பு மேல் சுரண்டச் செய்த மேற்பரப்பை அமைத்து, முன்பின் நகர்த்தி, பிறகு உயர் முனை நீலப் புள்ளிகளை சுரண்டவும்.
- பணிப்பொருளின் மேல் நீலம் புள்ளியிட்ட இடத்தை இடகுறிக்கிற வரை சுரண்டுதல் செய்முறையை திரும்ப செய்து பினிஸிங் செய்யவும்.
- மென்மையான துணி கொண்டு கீறச் செய்த மேற்பரப்புவை துடைத்தெடுக்கவும்.
- ஆயிலினை பூசி அதை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

— — — — — — — — —

செய்ய வேண்டிய வேலை 2 : **வளைவான மேற்பரப்பு மேல் ஸ்கிரேபிங் செய்தல்**

- பணிப்பொருளின் அளவுகளை சரிபார்க்கவும்.
- சமதளத்தன்மை மற்றும் சதுரத்தன்மை பராமரித்து 90x48x18 mm-க்கு உலோகத்தினை பைலிங் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவினை சரி பார்க்கவும்.
- குறிப்பிடுதலிற்கு ஊடக பவுடர் பூசவும், படம் 1-ல் உள்ளது போல குறிப்பிட்டு பன்சிங் செய்யவும்.
- படம் 2-ல் உள்ளது போல தேவையில்லாத பகுதியை பணிப்பொருளில் நீக்க தொடர்ச்சியாக துளையிடவும்.

Fig 1




© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 2




- படம் 3-ல் உள்ளது போல் வெப் உளி (web chisel) மற்றும் பால்பீன் சுத்தியல் பயன்படுத்தி தேவையற்ற உலோகப் பகுதியை வெட்டி நீக்கவும்.

Fig 3




- அரை உருளை பைலைக் (Half round file) கொண்டு வளைவான மேற்பரப்பினை பைலிங் செய்து மற்றும் மாதிரி (template) வடிவம் கொண்டு வளைவைச் சரி பார்க்கவும்.
- அலுமினிய வைஸ் கிளாக்ப் கொண்டு பென்ச் வைஸில் உருளைப் பரிசோதனைச் சட்டத்தை பிடிக்கவும்.
- பரிசோதனை சட்டத்தின் உலோக உருளையின் மேல் ப்ரஷியன் நீலத்தினை மெல்லிய பூச்சு பூசவும்.
- ப்ரஷியன் நீலம் பயன்படுத்திய பரிசோதனை சட்டம் மேல் பணிப்பொருளின் வளைவான மேற்பரப்புவை அமைக்கவும், மற்றும் முன்பின் சுழற்றவும்.
- வளைவான மேற்பரப்பு மேல் நீல இடத்தினை குறிப்பிட்ட புள்ளியை குறித்து வைக்கவும்.
- பென்ச் வைஸில் செய்பொருளை பொருத்தவும்.
- அரை உருளை ஸ்கிரைபரை பயன்படுத்தி வளைவு மேற்பரப்பின் மேல் உயர் புள்ளி இடங்களை ஸ்கிராப் செய்து நீக்கவும்.
- தேவையில்லாத பிசிறுகள் நீக்குதலுக்கு மெல்லிய துணி கொண்டு ஸ்கிராபிங் செய்த மேற்பரப்புவை துடைத்து எடுத்தல்.
- திரும்பவும், பரிசோதனைக்கு சட்டத்தின் மேல் ப்ரஷியன் நீலம் போடவும், மற்றும் பரிசோதனை சட்டம் மேல் வளைவான சிராய்ப்பினைச் செய்த மேற்பரப்புவை அமைத்து மற்றும் முன்னும் பின்னும் சுழற்றவும்.
- பணிப்பொருளின் முழு வளைவுள்ள மேற்பரப்பின் மேல் ப்ரஷியன் நீலம் புள்ளியிட்ட குறிப்பீடுகள் பினிஸிங் செய்யும் வரை திரும்ப செய்யவும்.
- மென்மையான துணி கொண்டு கீறல் செய்த மேற்பரப்புவை துடைத்தெடுக்கவும்.
- ஆயில் பூசி பணிப்பொருளை மதிப்பீடுதலுக்கு பாதுகாக்கவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

## திறன் வரிசை (Skill sequence)

## வளைவான மேற்பரப்புகளில் ஸ்கிரேபிங் செய்தல் (Scraping curved surfaces)

**நோக்கங்கள் :** இது உங்களுக்கு அறிய உதவுவது

**• வளைவான மேற்பரப்புகளில் ஸ்கிரேபிங் செய்தல் மற்றும் சோதனையிடல்.**

ஒரு அரை உருளை ஸ்கிராபரை வளைவான மேற்பரப்புகளில் ஸ்கிரேபிங் செய்தலுக்கு மிகவும் பொருத்தமான ஸ்கிராபராகும். இந்த ஸ்கிரேபிங் செய்தல் முறை சமதளமான ஸ்கிரேபிங் செய்யுமுறையில் வேறுபடுகிறது.

**முறை (Method)**

வளைவான மேற்பரப்புகள் கீறல் செய்வதற்கு, இதன் கைப்பிடி தேவையான திசையில் ஸ்கிராபரின் இயக்கத்தை எளிதில் வழி நடத்தும் விதத்தில் கையினால் பிடிக்கப்படுகிறது. (படம் 1)

Fig 1




சேங்கின் (shank) மேல் மற்ற கையைக் கொண்டு அழுத்தம் கொடுக்கவும்.

மேலும் ரஃப் ஸ்கிரைபிங் செய்து அதிக உலோகத்தை நீக்கம் செய்ய நீண்ட தூரத்திற்கு அதிகப்படியான அழுத்தம் தேவைப் படுகின்றன.

மென்மையான ஸ்கிரைபிங் செய்தலுக்கு, அழுத்தம் குறைக்கச் செய்து மற்றும் மேலும் ஸ்டோக் நீளம் குறைக்கவும்.

Fig 2




ஸ்கிரைபிங் செய்கையில் முன்னோக்கி மற்றும் பின்னோக்கி செய்யவும். (படம் 2)

முன்னோக்கி இயக்கத்தின் போது ஒரு வெட்டுதல் விளிம்பு செயல்படுகிறது மற்றும் பின்னோக்கு இயக்கத்தில் மற்ற வெட்டுதல் விளிம்பு செயல்படும்.

Fig 3




Fig 4




ஒவ்வொரு ஸ்ட்ரோக் பிறகு, வெட்டுதலின் திசையை மாற்றவும். இது சீரான மேற்பரப்புவை பெறசெய்கிறது. (படம் 3 மற்றும் 4)

Fig 5




மாஸ்டர் சட்டம் (master bar) கொண்டு ஸ்கிராபிங் செய்ய வேண்டிய பரப்பின் தன்மையினை சரிபார்த்தலுக்கு பயன்படுத்தவும். (Fig 5)

**உயர் இட புள்ளிகளை கண்டறிவதற்கு மாஸ்டர் சட்டத்தின் மேல் ப்ரஷியன் நீலத்தினை மெல்லிய பூச்சுவை பூசவும்.**

## பிலேட் ஸ்கிராபரை கூர்மையாக்குதல் (Sharpening a flat scraper)

**நோக்கங்கள் :** இது உங்களுக்கு அறிய உதவுவது

- **சாணை செய்தல் மற்றும் ஓனிங் மூலம் சமமட்டமான ஸ்கிராபரை கூர்மையாக்குதல்.**

பிலேட் ஸ்கிராபர்களில் வெட்டுதல் விளிம்புவை கிரைண்டிங் மூலம் கூர்மை செய்யப்படுகிறது மற்றும் இரண்டு முகங்கள் ஓனிங் செய்தல்.

சாணை செய்தலின் போது அதிக சூடாகுதல் தவிர்த்தலுக்கு, ஈரமான கிரைண்டிங் பயன்படுத்தவும். அல்லது கிரைண்டிங் மெஷினில் குளிர்விப்பான் அமைப்பு ஏற்படுத்தவும்.

© NIMI NOT TO BE REPUBLISHED

பைன் (fine) கற்களைக் கொண்ட சாணைச் சக்கரத்தை தேர்ந்தெடுத்தல். (படம் 1)

Fig 1




பெரிய விட்டத்துடன் ஸாப்ட்டு தரம் அலுமினியம் ஆக்ஸைடு சக்கரம் நல்ல பினிஸிங் கொடுக்கிறது.

**வேலைத் -தாங்கி (work-rest) மற்றும் சாணைச்சக்கரத்திற்கு இடையே இடைவெளிக்கு சரி பார்த்து மற்றும் தேவை எனில் சரி செய்யவும்.**

இதன் வெட்டுதல் விளிம்புகளை சாணை செய்தலுக்கு, கருவிதாங்கியின் மேல் கிடைமட்டமாக மற்றும் மட்டமாக ஸ்கிராபரை பொருத்தவும். (படம் 2)

Fig 2




ஸ்கிராபரை (scraper) வெட்டுதலின் விளிம்பிற்கு மேல் லேசாக குவியான மேற்பரப்புவை ஏற்படுத்த ஓர் வளைவு அமைப்பாக நகர்த்தவும். (படம் 3)

Fig 3




**ஸ்கிராபர் கார்பைடு முனையுள்ள ஸ்கிராபருக்கு சிலிகன் கார்பைடு அல்லது டயமன்ட் சக்கரங்கள் பயன்படுத்தவும். (படம் 4)**

Fig 4




சாணை செய்தல் கொண்டு கூர்மையாக்கச் செய்த வெட்டுதல் விளிம்புகளை ஹோனிங் செய்ய வேண்டும். ஹோனிங் (Honing) ஆனது கிரைண்டிங் மார்க்குகளை நீக்குகிறது மற்றும் வெட்டுதல் விளிம்புகளை கொடுக்கிறது.

ஹோனிங் (Honing) கிற்கு பைன் தர அலுமினிய ஆக்ஸைடு ஆயில் ஸ்டோன் (oilstone) யை பயன்படுத்தவும்.

ஹோனிங் போது லுப்ரிகன்ட் (lubricant) யை பயன்படுத்தவும்.

லுப்ரிகன்ட்-ஐ தயார் செய்தலுக்கு மண்ணெண்ணையுடன் (kerosene) லேசாக மினரல் ஆயில் கலக்கவும்.

முதலில் படம் 5-ல் உள்ளது போல முகங்களை நகர்த்தி ஓனிங் செய்யவும்.

Fig 5




பிறகு, ராக்கிங் இயக்கம் / நாலாபக்கமும் சுழற்றுதல் கொண்டு ஆயில் கல்லின் மேல் ஓர் தலை கீழாக அமைத்து ஸ்கிராபரின் வெட்டுதல் முனையில் ஹோனிங் செய்தல் (படங்கள் 6 மற்றும் 7).

தேவையான கட்டிங் ஆங்கில் என்ன?

இவைகள்,

- ரஃப் ஸ்கிராபிங்கிற்கு - 60°கோணம்
- பினிஸிங் ஸ்கிராபிங் செய்தலுக்கு-90°கோணம்

© NIMI NOT TO BE REPUBLISHED

Fig 6




Fig 7




## அரை உருளை ஸ்கிராபர்களை கூர்மையாக்குதல் (Sharpening half round scrapers)

**நோக்கங்கள் :** இது உங்களுக்கு அறிய உதவுவது

• ஆஃப் ரவுண்ட் ஸ்கிராபர்களை கூர்கையாக்குதல்.

ஸ்கிராபர்கள் வழக்கமாக ஆயில் கல் கொண்டு கூர்மை செய்யப்படுகிறது. வெட்டுதல் விளிம்புகள் மோசமாக சேதமடைந்திருக்கிறபோது, அவை பெடஸ்டல் இயந்திரம் கொண்டு கூர்மையாக்கப்படுகிறது.

**அரை உருளை ஸ்கிராபர்கள் கூர்மையாக்குதல் (Sharpening half round scrapers)**

அரை உருளை ஸ்கிராபர்களின் பின்புறத்தின் மேல் இரண்டு வெட்டுதல் விளிம்புகள் கொண்டது. (படம் 1)

Fig 1




இதன் வெட்டுதல் விளிம்புகள் அடிப்புற மேற்பரப்புவை கொண்டு உருவாக்கச் செய்கிறது. மற்றும் சமதளமான மேற்பரப்புகள் ஸ்கிராபரின் வளைவுள்ள பின்புறத்தின் மேல் அமைகிறது. (படம் 2)

Fig 2




SECTION OF HALF - ROUND SCRAPER

ஒரு லேசான வளைவை கொண்டு அடிப்புற மேற்பரப்புகளை சாணை செய்யவும். இது ஸ்கிராப் செய்து கொள்ளும் மேற்பரப்புகளின் மேல் புள்ளி தொடுதல் ஏற்படுத்த உதவுகிறது. (படம் 3)

Fig 3




மறு கூர்மையாக்குதலுக்கு ஆயில் கல்லின் மேல் ராக்கிங் இயக்குதலை கொண்டு அடிப்புற மேற்பரப்புவை துடைத்து தேய்க்கவும். (படம் 4)

Fig 4




இதன் வெட்டுதல் விளிம்பு மழுங்கும் போது இது அடிப்புற விளிம்புவை சாணை செய்தல் கொண்டு மறு கூர்மையாக்கப்படுகிறது.

**முடிந்தவரை விளிம்புகளின் சாணை செய்தல் தவிர்க்கவும். (சமமட்டமான மேற்பரப்பு உருளையுள்ள பின்புறத்தின் மேல் அமைகிறது).**

© NIMI NOT TO BE REPUBLISHED

# ஸ்லைடிங் பரப்புகள் சமதளப்பரப்புகள் உருவாக்கி ஒருங்கிணைத்தல் (Make and assemble, sliding flats, plain surfaces)

நோக்கங்கள்: இப்பயிற்சியின் முடிவில் நீங்கள் திறம் பெற இருப்பவை

- **± 0.04 mm**-ன் துல்லியத்திற்கு சமதளமான மற்றும் சதுர மேற்பரப்பிற்கு பைலிங் செய்தல்
- படத்தில் உள்ளதை போல் அளவு கோடுகளை குறித்தல்
- படத்தில் உள்ளதை போல் அனைத்து பாகங்களை தயார் செய்தல்
- டவல்பின் துளைகள், கவுன்டர் சிங்க் திருகு துளையிடல்
- சமதளபரப்பின் மேல் ஸ்லைடிங் பரப்புகள் ஒழுங்கினைத்தல்.




© NIMI NOT TO BE REPUBLISHED

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | M5-16 | COUNTER SUNK SCREW | - | - | 6 | - |
| 4 | Ø4-20 | DOWEL PIN | - | - | 5 | - |
| 1 | 65 ISF 12-32 | SLIDING FLAT | Fe310 | - | 4 | - |
| 2 | 20 ISF 12-85 | SIDE PLATE | Fe310 | - | 2&3 | - |
| 1 | 65 ISF 12-85 | BASE PLATE | Fe310 | - | 1 | 1.6.84 |
| NO.OFF | STOCK SIZE | SEMI-PRODUCT | MATERIAL | PROJECT NO. | PART NO. | EX. NO. |

| | | | |
|---|---|---|---|
| SCALE NTS | MAKE & ASSEMBLE, SLIDING FLATS, PLAIN SURFACES | TOLERANCE ±0.04 mm | TIME: |
| | | CODE NO. FI20N1684E1 | |

## வேலையின் வரிசை (Job sequence)

- கொடுக்கப்பட்டுள்ள அளவிற்கு பணிப்பொருளை சரி பார்த்தல்.
- படத்தில் உள்ளது போல அளவு மற்றும் வடிவத்திற்கு பாகம் 1, 2, 3 மற்றும் 4-ற்கு பணிப்பொருளை பைலிங் செய்யவும்.
- வெர்னியர் காலிப்பர் கொண்டு அளவுகளைக் குறிக்கவும்.
- பாகம் 2 மற்றும் 3-ன் மேல் Marking media வை apply செய்து படத்தை போல டவல் பின் துளைகள், கவுன்டர் சிங்க் திருகு துளைகளை குறிக்கவும்.
- படம் 1-ல் உள்ளது போல பக்க இணை இறுக்கிகள் கொண்டு துளையிடுல் இயந்திர மேஜையில் ஒருமித்து பாகம் 1, 2, 3 மற்றும் 4 ஒருங்கினை மற்றும் இறுக்கவும்.



Fig 1

- துளையிடுதல் இயந்திர சுற்றுதண்டுவில் Ø 3.8 mm துளைக்கருவி பொருத்தவும்.
